# கலைமகள்

தொகுதி ௨௬]   தாரண ௵ ஆடி ௴ :: ஜூலை 1944   [பகுதி ௧௫௧

## படிக்காதே!

"வெட்டு, நூற்றுக்கு எழுபது வீதம் காகித உபயோகத்தை வெட்டு" என்று முன்பு இந்திய அரசாங்கத்தார் உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவு வந்தாலும் வந்தது, காகிதம் ஸாக்ஷாத் பகவானைப் போல எங்கெங்கோ ஓடி ஒளிந்துகொண்டுவிட்டது. அதைப் பிடித்துக் கிடைத்த காகிதத்தைக்கொண்டு புஸ்தகமோ, பத்திரிகையோ போட்டு ஜனங்களுக்கு அறிவு விருந்தை அளித்துவந்தார்கள். இப்போது அந்த முப்பது சதவிகிதத்திற்கும் சனியன் பிடித்திருக்கிறது. "அதையும் வெட்டு; அதிலும் 70% குறை!" என்று பூதத்தைப்போன்ற உத்தரவு ஒன்று ஜூன் மாதம் 12-ஆம் தேதி பிரசவமாகிப் பயமுறுத்துகிறது. அதாவது முதலில் 30 சதவிகிதம் இருந்தது; அதிலும் 30 சதவிகிதமென்றால், பழைய நிலையில் 9 சதவிகிதந்தான் உபயோகிக்க வேண்டும்!

யுத்தகாலத்தில் மற்றத் தேசங்களிலெல்லாம் பொது ஜனங்களுடைய அறிவும் ஒழுக்கமும் தடுமாறாமல் இருப்பதற்குப் பிரம்மப்பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு நாட்டில் அமைதியும் சுபிக்ஷமும் நிலவவேண்டுமானால் இப்பொழுதிருந்தே அஸ்திவாரம் போடவேண்டுமென்று உலகமுழுவதும் நிபுணர்கள் கூடிக் கூடி மூளையைக் குழப்பிக்கொண்டு என்ன என்னவோ திட்டம் போடுகிறார்கள். இங்கே, என்னடா என்றால் அரசாங்கத்தார் "படிக்காதே" என்று உத்தரவு போடுகிறார்கள். ஆம்! இப்போது வந்திருக்கும் காகிதக் கட்டுப்பாடு மறைமுகமாக ஜனங்களை, "படிக்காதே!" என்று சொல்வது போலத்தான் அமைந்திருக்கிறது.

(1) பொதுவாக இந்த உத்தரவை வெளியிடுவதற்குமுன் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொண்டு ஆலோசனை செய்யாமல் ரிஷிகர்ப்பம் போல அவசர அவசரமாக இது பிறந்திருக்கிறது.

(2) பிறந்த க்ஷணமே இது உலவத் தொடங்கிவிட்டது. பொது ஜனங்களுடைய ஆக்ஷேபங்களையும் ஆலோசனைகளையும் கொஞ்சமாவது எதிர்பார்ப்பதாக இருந்தால் இந்த உத்தரவை இவ்வளவு கெடுபிடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை.

(3) காகிதச் சிக்கனத்தைப்பற்றி நன்றாக ஆலோசனை செய்திருந்தால் அரசாங்கத்தார், பல துறைகளில் வீணாகும் காகிதத்தைக் கட்டுப்படுத்தலாம். புஸ்தகத்தின் அளவு, எழுத்தின் அளவு முதலிய விஷயங்களில் சிக்கனம் செய்ய ஆலோசனை கூறியிருக்கலாம்.

(4) உள்நாட்டுக் காகிதச் சிக்கனத்தால் விளையும் கொடுமையான விளைவுகளைத் தடுக்க, வெளிநாட்டிலிருந்து வந்து வீணாகக் கிடக்கும் பத்திரிகைக் காகிதம் (News-print) முதலியவற்றைப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இந்தமாதிரி உருப்படியான வகை ஒன்றும் இன்றி, புஸ்தகமானாலும் சரி, பத்திரிகையானாலும் சரி, ஒரே வெட்டாக 30 சதவிகிதத்துக்கு வெட்டும்படி உத்தரவு சொல்கிறது.

புஸ்தகத்துக்கு மொத்தக் காகிதச் செலவில் குறைக்கவேண்டும் என்று உத்தரவு சொல்கிறது. பத்திரிகைகளுக்கோ, பக்கங்களைக் குறைக்கும்படி கட்டளையிடுகிறது. ஜூன் மாதம் 12-ஆம் தேதிக்கு முந்திய ஆறு மாதங்களில் வெளியான பக்கங்களின் கணக்குப்படி சராசரி ஓர் இதழுக்கு வரும் பக்கங்களில் நூற்றுக்கு முப்பது விதமே - மூன்றில் ஒரு பங்குக்குக்கூடக் குறைவு - அச்சிட வேண்டுமாம்! கலைமகள் விளம்பரம் உட்பட 24 பக்கங்களே வெளியிடலாம்!

கலைமகள் முன்பெல்லாம் 120, 112, 108 பக்கங்கள் உடையதாக வெளிவந்தது. காகிதப் பஞ்சத்தை நன்கு உணர்ந்து வரவர நாங்கள் பக்கத்தைக் குறைத்துவந்தோம். வாசகர்களுடைய அறிவுப் பசியைத் தீர்ப்பதற்கு எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் இருந்தும் இடையே இந்த உத்தரவுகள் வந்து பாதிப்பதற்கு மிகவும் வருந்தினாலும் பக்கங்களை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து வெளியிட்டோம். ப்ளாக்குகள், எழுத்து முதலிய பலவகையில் என்ன என்னவோ தந்திரங்களைச் செய்து கூடியவரையில் கலைமகளின் பொலிவு குறையாமல் வெளியிட முடிந்தது. இதிலும் "கடுமையாகக் குறைப்பது" என்பது எப்படி முடியும்?

பத்திரிகைகளில் எத்தனையோ விதம் இருக்கின்றன. அப்பொழுதே படித்துத் தூர எறிவனவும் உண்டு. புஸ்தகத்தைப்போலவே வைத்துப் பாதுகாப்பனவும் உண்டு. கலைமகளைப் போல இலக்கிய சேவையைச் செய்து வரும் பத்திரிகைகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தன. தமிழ் நாட்டுப் புஸ்தகசாலைகளில் கலைமகள் தொகுதிகள் இருந்துவருவதே இதற்குச் சாட்சி. நிலையான உபயோகம் இருப்பதனால் இந்தப் பத்திரிகையைப் பைண்டு செய்து வைத்துக் கொள்கிறார்கள். அதை உணர்ந்தே இதை நல்ல காகிதத்தில் வெளியிடலானோம். இப்பொழுதோ பத்திரிகைத் தாள் (News-print) உபயோகிப்பவர்களுக்குப் பல மைல் தூரத்திலிருந்து காகிதம் வந்துகொண்டிருக்க, நமக்கோ அருகில் விலையும் சரக்குக்கும் 'வல்லடி' வந்துவிட்டது. இதைக் காட்டிலும் விநோதமான நிலை வேறு உண்டா?

24 பக்கத்தில் விளம்பரம் போக 16 பக்கத்தில் கட்டுரைகளை நிரப்பிக் கலைமகளை அனுப்பினால், முன்னாடியே போதுமானபடி பசியடங்காத வாசகர்களுக்குக் கடைவாய்க்குக் கூடப் போதாதே! "நாங்களும் பத்திரிகை நடத்துகிறோம்; நீங்களும் வாங்கிப் படியுங்கள்" என்ற கேலிக்கூத்தினாலா பொது ஜனங்கள் அறிவுவிளக்கம் பெறுவார்கள்? யுத்தத்திற்குப் பிறகு நாடு முன்னேற வேண்டுமென்று போடும் திட்டம் இதுதானா?

இப்போது வந்த உத்தரவினால் விளையும் விபரீதங்களைச் சுருக்கமாகச் சொல்லிப் பார்க்கலாம்:

(1) பத்திரிகைக்காரர்கள், பிரசுரகர்த்தர்கள் தங்கள் தொழிற்சாலையைப் பூட்டிவிடுவார்கள்; அல்லது பேருக்குத் தொழில் நடத்துவார்கள்.

(2) ஏழைத் தொழிலாளர் பலருக்கு உத்தியோகம் போய்விடும்.

(3) உலகத்தைத் தங்கள் பேனாவால் ஆளுவதாகப் பெருமைப்படும் உரிமைபெற்ற எழுத்தாளர்கள் பேனாவை ஒடித்துப் போட்டுப் படுக்கையைத் தட்டிப் போட்டுக்கொள்வார்கள்.

(4) பொது ஜனங்கள் கலையறிவு முதலியவற்றை வளர்க்க வேண்டுமென்ற ஆசைக்கு விடைகொடுத்துவிட்டுச் சீட்டாட்டத்தில் புகுந்துவிடுவார்கள்.

(5) புஸ்தகசாலைகள், பள்ளிக்கூடங்கள் - புஸ்தகங்கள் இருக்கவேண்டிய இடங்கள் எல்லாம் இடம் காலியாகித் தட்டு முட்டுச் சாமான்கள் வைக்க உபயோகப்படும்.

(6) தேவைக்கு ஏற்ற காகிதம் இல்லை என்ற நிலைபோய், காகித வியாபாரிகளிடம் வெள்ளைக் காகிதம் ஒரு பக்கம் குவிந்து கிடக்க, ஒரு பக்கம் கையில் விலங்குபோட்ட மனிதன் பசியால் துடித்தாலும் பக்கத்தில் உள்ள சாப்பாட்டை உண்ணமுடியாத நிலையில் இருப்பதுபோலப் பிரசுராலயத்தினர் தலைவிதியை நினைந்து இரங்குவார்கள்.


இவ்வளவும் நேர்ந்தால் "படிக்காதே!" என்று தனியே சொல்ல வேண்டுமா என்ன?

இந்த மாதம் 11-ஆம் தேதி பம்பாயில் நடக்கப்போகும் கூட்டத்தில், எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர்களும் அச்சுத்தொழில் முதலாளிகளும் ஏற்கனவே செய்துகொண்டுள்ள விண்ணப்பங்களை ஆலோசித்து, அரசாங்கத்தார் இந்தச் சங்கடமான நிலையை மாற்ற ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

ஆசிரியர்

# அன்பே சிவம்

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்



**1**

மாங்குடி என்னுமோர்
நாடதனைச்சிறு
மன்னன் ஒருவனும்
ஆண்டு வந்தான்;
பாங்கன் எனும்பெயர்
கொண்டவனும்; அவன்
பார்மிகு செல்வம்
படைத்தவனும்.

**2**

கொற்றவன் செல்வம்
அனைத்தினையும்சிவன்
கோவில் அமைத்திடத்
தான் கொடுத்தான்;
உற்றவர் கட்டிட
வேலை துவக்குதற்
கூரினில் ஆட்களைத்
தேடினரே.

**3**

செங்கல் குவித்தனர்; சுண்ணும்பு சேர்த்தனர்;
தேக்கு மரங்கள் அடுக்கினரே;
கங்குலி லும்பல காளைகள் வண்டியில்
கல்மணல் கொண்டு சுமந்தனவே.

**4**

கொல்லரும் தச்சரும் கூலிக ளும்பல
கொத்தரும் கூடி உழைத்தனர்காண்;
அல்லலுற்று மணல் வண்டி இழுத்ததால்
அங்கம் மெலிந்தன காளைகளும்.

**5**

என்பு தெரிந்திடப் பாரம் இழுத்திழுத்
தேங்கி வரும் அந்தக் காளைகள்பால்
அன்பு செலுத்தியே ஓர் கிழவி தினம்
அளித்தனள் புல்லுத்தண் ணீருடனே.

**6**

கோயிலைக் கட்டி முடிக்கும்வரை அவள்
கொண்டனள் இந்தப் பணிவிடையே;
வாயிலாப் பிராணிகள்மீதி லவள்கொண்ட
வாஞ்சையின் மாண்பினை என்ன சொல்வேம்!

## 7

மன்னவன் பாங்கன் பெயரினை யேபொன்னில்
மாண்புறத் தீட்டிக்கல் லிற்பொதிந்து
உன்னத மாயந்தக் கோவில் முன் னேவைத்தே
ஊரவர் மகிழ்ச்சி உற்றனரே.

## 8

மாலை கழிந்ததும் கோவில் முகப்பினில்
மன்னன் பெயரினைக் காணவில்லை !
வேலைசா லன்பு முதியவ ளின்பெயர்
மேலே தெரிவதைக் கண்டாரம்மா !

## 9

மன்னவன் கண்டு வியப்புட னேபெரு
வாட்டமுற் றான் ; கடுங் கோபமுற்றான் ;
'என்ன புதுமை !' என் றெல்லவ ரும்அதை
ஏறிட்டுப் பார்த்து வியந்தனரே !

## 10

"கல்லைப் பிடுங்கி எறிந்திடுங்கள்" என்று
காவலன் ஆணை கொடுத்தவுடன்,
"நில்லுங்கள் !" என்றொரு பேரொலி வானத்தில்
நீடித் தொனித்திடக் கேட்டனரே !

## 11

"மன்னவ ! நீஅம் முதியவளின் உயர்
மாண்பை அறிந்திட மாட்டாயே !
அன்னவள் அன்பின்
பெருமையி லேஎன் றன்
ஆலயம் எழுந்த
தாகுமப்பா !"



## 12

கூனற் கிழவியின்
அன்புப் பணியினை
வானொலி சொல்லிடக்
கேட்டரசன்
ஞான நிலையினைக்
கண்டவன் போலஅவன்
நாவினுள் "அன்பே
சிவ"மென் றான்.

# காலத்தின் போக்கு

டாக்டர் தி.சே.சௌ.ராஜன்

வைதிகக் கோட்டையை உடைக்கும் முயற்சியை நான் நிறுத்தவில்லை. எனது தொழிலும் எனக்கு இம் முயற்சியில் பலம் கொடுத்தது. வறுமை புற்றவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்துவந்தேன். பலனை எதிர்பாராமல் நான் ஏழைகளுக்கு உழைத்ததால் என் பெயர் மக்களிடத்தில் அதிவேகமாகப் பரவியது. சில ஏழைகளுக்குச் செய்த உதவி பல தனவான்களை என்னிடம் கொணர்ந்தது. எனது தொழிலும் வெகு வேகமாக விரிவுற்றது. வருவாயும் அதிகரித்தது. சர்க்கார் அதிகாரிகளும், ஜில்லா உத்தியோகஸ்தர்களும், பல்வேறு மதத்தினர்களும் என் உதவியை நாடினார்கள். அதனால் ஜன சமுதாயத்தில் ஒரு செல்வாக்கு உண்டாயிற்று. உள்ளூர்க் கட்சிச் சண்டைகளுக்கு எனது அபிப்பிராயத்தையும் எனது சக்தியையும் பயன்படுத்த வைதிகர்கள் முன்வந்தார்கள், ஆனால் எனது சமரச நிலையை அவர்கள் ஆதரிக்கவில்லை.

அகோபில மடம் வடகலை வைஷ்ணவர்களில் பெரும்பாலோருக்குக் குரு பீடம். அகோபிலம் என்பது கர்நூல் ஜில்லாவில் நல்ல மலைத் தொடரின் தென்பகுதியில் இருக்கிறது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற புனித க்ஷேத்திரம் அது. மலைக்கு மூன்று மைலுக்கு மேலிருக்கும் காட்டில் பெரிய அகோபிலம்; அடிவாரக் காட்டில் சின்ன அகோபிலம். இரண்டு கோவில்களும் மிகப் பெரியன. எந்தக் காலத்தில் எந்த அரசர்கள் இப்பெரிய கோவில்களையும், அவற்றினுள் அடங்கியிருக்கும் சிற்பக்கலைகளையும் உண்டாக்கினார்கள் என்பதைப் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. ஒரு சமயம் விஜயநகரம் சம்ஸ்தானம் உச்சநிலையை அடைந்திருக்கும் காலத்தில் உண்டானதாக இருக்கலாமென நினைக்கிறேன். இப்பெரிய காடுகளிலும், மலைகளிலும் நரசிம்மப் பெருமாளுக்காக மகத்தான பெரிய கோயில்களைக் கட்டினவர்களுடைய எண்ணம் எதாக இருக்கக்கூடும் என்னும் சிந்தனை எனக்குத் தோன்றியதுண்டு.

அறநிலயங்களுக்குப் பொறுப்பாளியாக மந்திரிப் பதவி வகித்தபொழுது அகோபிலம் காட்டில் ஒரு நாளிரவு தங்கியிருந்தேன். என்னுடன் எனக்கு வழிகாட்டியாக வந்திருந்த காட்டிலாகாத் தலைமை அதிகாரி எனது கூடாரத்தில் ஒரு புறம் குளிர்காய்ச்சலுடன் போராடிக்கொண்டிருந்தார். வைத்தியன் என்ற முறையில் அவர் நோயைப் பற்றி விசாரித்தேன். “இந்தக் காட்டில் நாங்கள் வருஷம் முழுவதும் அலைந்து திரிந்துகொண்டிருக்கிறோம். ஓர் இரவு தங்கினால் போதும். உடனே இந்தப் பாழும் காய்ச்சல் வந்துவிடும். மூன்று வருஷங்களுக்குமேல் இந்தக் காடுகளில் வேலை செய்ய முடியாது. தீராத காய்ச்சல் கட்டி வயிற்றில் உண்டாகிவிடும். காட்டிலாகாவில் உள்ளவர்கள் படும் அவதிகளில் இதுவும் ஒன்று” என்று மிகுந்த துயரத்துடன் சொன்னார். எனினும் அக்காட்டில் வசிக்கும் செஞ்சு ஜாதியார் எப்படி அங்கே வசிக்கிறார்கள் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்தது. அதைப் பற்றியும் அவரைக் கேட்டேன். “தலைமுறை தலைமுறையாக அவர்கள் இக்காட்டிலேயே புலி, கரடி, பாம்பு, சிறுத்தை இவைகளின் நடுவே வாழ்வை நடத்திவருகிறார்கள். மலைக்கொசு கடித்துப் பழக்கமாகி, இறந்தவர்கள் போக மிகுதியிருக்கிறவர்கள் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. அவர்களுடைய குழந்தைகளுக்கெல்லாம் வயிற்றில் காய்ச்சல் கட்டி இருக்கும். இவைகளுக்குத் தப்பிப் பிழைத்துவிட்டால் அவர்களுக்கு இந்த நோயினின்றும் ஒரு காப்பு ஏற்பட்டுவிடுகிறது” என்றார்.

இந்தக் காட்டு ஜாதியார்களுக்காகவா இங்கு நடுக்காட்டில் இறைவன் கோயில் கொண்டு நரசிம்மமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறான்? அதுவும் கேவலமான கோயிலா? எவ்வளவு லக்ஷம் ரூபாய் செலவழிந்திருக்கவேண்டும்? எவ்வளவு லக்ஷம் உயிர்கள் தியாகம் செய்து இத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கவேண்டும்! இந்த இரண்டு கோயில்களையும் கண்டு,

தரிசனம் செய்து பக்தியின் மேலீட்டினால் மனமாரப் பாடின ஆழ்வார்கள் அங்கே கண்ட காட்சி என்ன? பெரிய ஊர்களைக் காணவில்லை. காட்டைத்தான் பார்த்தார்கள். மக்களைக் காணவில்லை. கோயிலைத்தான் தரிசித்தார்கள். கோயில் உண்டான காலத்தில் அந்த இடம் ஒரு பெரு நகரமாக இருந்திருக்கலாமா என்ற சந்தேகம் என் மனத்தில் எழுந்தது. அன்றிரவு எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. என்னுடன் வந்திருந்த சர்க்கார்ச் சேவகனுக்கு விடியற் காலத்தில் குளிரும் காய்ச்சலும் கண்டுவிட்டன. சென்னை வந்து இரண்டு மாதம் காயலாக இருந்து நொந்துபோனான்.

அந்தக் கோவில்களுக்குப் பூஜை, நைவேத்தியம் செய்வதற்குத் தெலுங்கு வைஷ்ணவர்கள் பாம்பரையாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் அவர்களும் செஞ்சு ஜாதியாரைப்போல எனக்குக் காணப்பட்டார்கள். அவர்கள் காய்ச்சலினால் அவதிப்படும் காலத்துக் காட்டுச் செஞ்சுக்கள்தாம் பூசை செய்ய வேண்டி நேரிடும். அப்பூசைகளையும் நரசிம்ம மூர்த்தி அங்கீகாரம் செய்துகொண்டுவருகிறார். நரசிம்மஜயந்தி காலத்தில் ஆயிரக்கணக்கான செஞ்சுக்கள், நல்ல மலையின் பல பாகங்களிலிருந்து இக்காடுகளில் கூடித் திருவிழாக்கள் நடத்துகிறார்கள். இக்கோயில்களுக்கு இன்றைக்கும் நிர்வாகிகள் எங்களுக்கு ஆசாரியராக இருக்கும் அகோபில மடம் சுவாமிகள். ஆனால் சுவாமிகள் தங்களுடைய தலைமை ஸ்தானமாகிற அகோபிலத்தில் வசிப்பதில்லை. ஆனால் அகோபிலத்தில் அர்ச்சாவதாரமாகக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை, உத்ஸவ மூர்த்தியைத் தம்முடன் கூட எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, ‘ராமர் இருந்த இடமெல்லாம் அயோத்தி’ என்று சொல்வதுபோல, லக்ஷ்மிநரஸிம்மன் இருக்குமிடமெல்லாம் அகோபிலம் என்று சொல்லும் முறையில் சஞ்சாரம் செய்து வருகிறார்கள். அகோபிலமும் லக்ஷ்மீநரஸிம்ம சுவாமியின் மூர்த்தியும் தமிழ் நாட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் சந்நியாசியிடம் எப்படி வந்தன என்பதை வெளியிடும் சரித்திரம் ஒன்று உண்டு.

பதினாறாவது நூற்றாண்டில் மைசூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்த மேல்கோட்டை அல்லது திருநாராயணபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் ஒரு வைதிக குலத்தில் பிறந்து, வேத அத்தியயனம், சாஸ்திரப் பயிற்சி, இவைகளுக்குரிய ஒழுக்கம், சீலம் நிறைந்த ஒரு பிரம்மசாரி வைஷ்ணவர் இருந்தார். ஒரு நாள் இரவில் அவருடைய கனவில் நரசிம்மமூர்த்தி பிரசன்னமானார். “நான் அகோபிலம் காட்டில் பூஜை நைவேத்தியம் இல்லாமல் இருந்து வருகிறேன். நீ அங்கு வந்து என் பூஜைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு லக்ஷ்மீநரசிம்மனுடன் சஞ்சாரம் செய்து, வைஷ்ணவ மதத்தைப் பிர்சாரம் செய்ய வேண்டும்’ என்று சொன்னதாக அறிந்து அகோபிலம் அடைந்தார். அங்கே பூஜையை ஏற்று, நரசிம்ம ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பல இடங்களில் வைஷ்ணவ மதத்தைப் பிரசாரம் செய்தார். அவருடைய பெயர் சடகோபன். குரு பாரம்பரையில், “ஆதிவண் சடகோப யதீந்திர மகாதேசிகன்” என்பது அவர் பெயர். தென்னிந்திய வைஷ்ணவர்கள் பலர் சீடர்களானார்கள். பல இடங்களில் மடமும் சொத்துக்களும் ஏற்பட்டன. தென்கலை, வடகலை இரு திறத்தார்களிலும் சீடர்கள். இப்பொழுது அந்த யதி பீடத்தில் அமர்ந்திருப்பவர் நாற்பத்து நான்காம் பட்டம். வருஷம் ஒன்றிற்கு லக்ஷத்திற்கு மேலாகச் சொத்துக்கள் மூலம் வரும்படி உண்டு. இப்பொழுது இருக்கும் சந்நியாசியும், அவருக்கு முன்பு இருந்த பீடாதிபதிகளும் நல்ல படிப்பாளிகள். சீலமும் ஒழுக்கமும் நிறைந்தவர்கள். நவீன நாகரிக உணர்ச்சியே இல்லாதவர்கள். லக்ஷ்மீநரசிம்மன் பூஜையொன்றையே பிரதானமாகக் கருதுபவர்கள். இவர்களுடன் சஞ்சரிக்கும் விக்கிரகம் அகோபிலம் கோவிலைச் சேர்ந்தது.

நான் போய்த் தரிசிக்கும் காலையில் அந்தக் கோயிலில் உத்ஸவ மூர்த்தி இல்லை. அழகியசிங்கர் என்ற பட்டப் பெயர் பூண்ட அகோபில மடம் சுவாமிகளோடு சஞ்சாரத்திற்காக எழுந்தருளிவிட்டபடியால் மூல மூர்த்தி மட்டிலும் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார். உத்ஸவமூர்த்தி இல்லாதது தங்கள் மனத்திற்கு வருத்தமாக இருக்கிறதெனவும் அந்த மூர்த்தி இல்லாததால் மலைகளில் மழை குறைந்துவிட்டதெனவும் நான் கண்ட செஞ்சுக்கள் என்னிடம் முறையிட்டார்கள். இப்பொழுது கோயம்புத்தூர் ஜில்லாவில் அகோபில மடம் சுவாமிகள் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறார். இப்பொழுது இருக்கும் சுவாமிகளுக்கு இரண்டு தலைமுறைக்கு முன்பாகத் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த காரைக்குறிச்சி என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியார்

பீடாதிபதியாக இருந்தார். அவர் ஸ்ரீரங்கம் வந்து பெரிய பெருமாளைத் தரிசிக்க வேண்டுமென ஆவல் கொண்டு எழுந்தருளினார். ஸ்ரீரங்கத்தில் அகோபில மடம் பெரியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. பல தோட்டங்கள், நிலங்கள் முதலிய சொத்துக்கள் உண்டு. இதற்கெல்லாம் ஒரு காலத்தில் என் பாட்டனாரும், சிறிது காலம் என் தகப்பனாரும் அகோபில மடம் ஏஜெண்டுகளாக வேலை பார்த்து வந்திருக்கிறார்கள்.

இந்த மடாதிபதிகளுக்கு அவரவர்கள் பீடத்திற்குத் தகுந்தபடி ஹிந்து சம்ஸ்தானங்களிலும் தேவாலயங்களிலும் மரியாதைகள் நடத்துவது வழக்கம். வைஷ்ணவ ஸ்தலங்களுக்குள் மிகப் பெரியதும் புராதனமுமான ஸ்ரீரங்கம் அகில இந்திய வைஷ்ணவர்களுக்கெல்லாம் ஒரு புனித க்ஷேத்திரம். எந்த மடாதிபதியும், முக்கியமாக வைஷ்ணவ மடாதிபதிகள், தங்கள் ஜீவிய காலத்திற்குள் ஒரு முறையாகிலும் வந்து ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்காமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் வரும் காலத்தில் அவர்களுக்கென்று கோவிலில் ஒரு தனி மரியாதை நடத்துவார்கள். அரசர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மரியாதையைக் காட்டிலும் மடாதிபதிகளான சந்நியாசிகளுக்கு நடத்தும் மரியாதை உயர்ந்தது. அகோபில மடம் சுவாமிகள் வடகலைச் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீரங்கம் கோவில் தென்கலையாருடையது என்பது அந்தக் கலையாருடைய கட்சி. ஆகையால் வடகலை நாமம் போட்ட சின்னங்கள், யானை, குடை, எடுபிடி சாமரன்கள் - இவைகளுடன் ஸ்ரீரங்கத்திற்குள்ளேயே நுழையக்கூடாது என்பது தென்கலையாருடைய கட்சி. அதைப் பின்பற்றி ஓர் ஆங்கில ஜில்லாக் கலெக்டர் நூறு வருஷங்களுக்கு முன்பாக ஸ்ரீரங்கம் தென்கலையார்களுடையது எனவும், வடகலையார்கள் யாதொரு பாத்தியமும் கொண்டாடக்கூடாது எனவும் ஒரு தடை உத்தரவு பிறப்பித்திருந்தார். அதுதான் தென்கலையாருடைய உரிமைக்கு மூல சாதனம்.

நான் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பொழுது அகோபில மடம் சுவாமிகள் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினார். பல வருஷங்களாக நடத்திய கோர்ட்டு நடவடிக்கை மூலம் ஸ்ரீரங்கம் வீதிகள் பொதுத் தெருக்களென்று தீர்ப்பு உண்டான பிறகு சுவாமிகள் தம் மடத்திற்கு வருவதற்கு ஏற்பட்டிருந்த தடை நீங்கிவிட்டது. ஸ்ரீரங்கத்திற்கு வந்தும் தமக்குள்ள மரியாதைகளுடன் ஸ்ரீரங்கநாதனுடைய தரிசனம் கிடைக்காமற் போனால் அந்த ஊருக்குள் வந்துதான் என்ன பயன் என்பது சுவாமிகளுக்கு அபிப்பிராயம். வடகலைக் கோஷ்டியார்கள் என்னிடம் வந்து எப்பாடு பட்டாகிலும் சுவாமிகளுக்குத் தகுந்தபடி சேவை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் வடகலைக் கோஷ்டியாருக்கும் மடத்திற்கும் பெருமையும், எனக்கு வைதிக சமூகத்தில் நன்மதிப்பும் உண்டாகுமென வற்புறுத்தியதன் பேரில் எனது செல்வாக்கை உபயோகப்படுத்த இசைந்தேன். ஜில்லா ஸப் ஜட்ஜ் உத்தரவின் பேரில், போலீஸ் பாதுகாப்புடன் நடக்க வேண்டிய மூன்று நாள் மரியாதைகளும் நடந்தன. நானும் உடனிருந்து கலவரம் இல்லாமல் நடத்திவைத்தேன். மூன்றாவது நாள் மரியாதை நடந்த பிற்பகல் சென்னை ஹைகோர்ட்டிலிருந்து ஒரு தடை உத்தரவைத் தென்கலையார் பெற்றார்கள். அதற்குள்ளாக மரியாதைகள் நடந்துவிட்டன. ஸ்ரீரங்கத்திலும் யாதொரு புரட்சியும் உண்டாகித் தடைப்பட்டதாகக் காணப்படவில்லை.

அகோபில மடம் ஜீயர் சுவாமிகள் இரண்டு மாத காலம் அந்த ஊரிலேயே தங்கியிருந்தார். சிஷ்ய கோடிகள் எல்லோரும் வரவேற்றுக் கைங்கர்யம் செய்தார்கள். நான் மடத்துச் சேனை இருந்து இவ்வளவு உதவி செய்தும் சுவாமிகள் என்னைத் தம்மிடம் வருமாறோ என் உபசாரங்களைப் பெறவோ விரும்பவில்லை. என் தகப்பனாரைச் சுவாமிகளுக்கு நன்றாகத் தெரியும். என் தகப்பனார் அவரிடம் இரண்டு மூன்று தடவை சென்று, ஆசாரியன் என்கிற முறையில் தமக்குப் பரந்யாஸம் (சரணாகதி) செய்து வைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். பரந்யாஸம் அல்லது சரணாகதி, அதிருஷ்டம் என்கிறது வைஷ்ணவர்களுக்குள் ஒரு தத்துவம். இதன் அடிப்படையான கொள்கை நான் அறிந்த மட்டில் இதுதான்: சாமான்ய மனிதன் குருவின்றி மோக்ஷத்தை அடைய முடியாது. இவனைக் கை தூக்கி விடுவதற்கு ஒரு ஒருவரால் தான் முடியும். குருவும் தாமாக ஒன்றும் செய்ய முடியாது. பகவானாக விளங்கும் ஸ்ரீமந் நாராயணனிடத்துத் தம் சிஷ்யனைக் காண்பித்து, "இந்த ஜீவாத்மா விடுதலை

கோருகிறது. அதற்காக என்னை வந்து அடைந்து வழிதேடுகிறான். நான் தங்களிடம் அவனைக் கொணர்ந்திருக்கிறேன். திருவருள் புரிய வேண்டும்'' என்று பிரார்த்திப்பார். இதனால் ஸ்ரீமந் நாராயணன் கருணை கூர்ந்து வைகுண்டத்தில் இந்த ஜீவனுக்கு இடம் கொடுக்க இசைந்து விடுகிறான். இது வைஷ்ணவர்களுக்கு உண்டான மோக்ஷ சாதனம். சீடன் பரிபக்குவமடைந்து, நல்ல சீலனாகவும், வருணாசிரம தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துபவனாகவும் இருந்து குரு கடாக்ஷத்திற்குப் பாத்திரன் ஆகும்படி நடந்து, கடைசியில் இந்த அதிருஷ்டப் பதவியைப் பெற வேண்டும். இந்தச் சீடனுக்கு உய்யும் வழி பெற யோக்கியதை உண்டு இல்லை என்பதற்குக் குருவே முடிவான அதிகாரி. அவர் என்ன நிபந்தனைப் பிரகாரம் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறாரோ அப்படியே நடந்து, பிறகு அவரது அநுக்கிரகத்தைப் பெறவேண்டும். இந்த மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு ஆண், பெண் இருவரும் தகுதி உடையவர்கள். பாபியான சீடனைப் பகவானுக்குச் சிபார்சு செய்தால் அந்தச் சீடனுடைய பாவங்கள் எல்லாம் குருவிற்குச் சேரும். ஆகையால் உத்கிருஷ்டமான மனிதனுக்குத்தான் இந்த வழியைக் குரு காண்பிக்க வேண்டும். மனிதன் பிறவி எடுத்ததற்கு இதைக் காட்டிலும் உயர்ந்த பதவி இல்லை.

ஆனால் நடைமுறை வேறு. பரங்யாஸம் செய்துகொள்ளப் பிரியப்படுபவர்கள் முதல் நாளே வைதிக சின்னங்களோடு மடத்துச் சுவாமிகள் முன்னிலையில் சென்று இடைவிடாது ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டிருக்க வேண்டும். சுவாமிகளின் கவனத்தைப் பெற்று அவர் போதுமென்று சொல்லிய பிறகு நமஸ்காரத்தை நிறுத்திக்கொண்டு, பரங்யாஸம் ஆகவேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டியது. இதற்காகக் குறைந்த தொகை பத்து ரூபாய் மடத்திற்குச் செலுத்தவேண்டும். கணக்குப் பிள்ளையிடம் பணம் செலுத்தி உத்தரவு பெற்று மறுநாள் காலையில் சுவாமிகள் லக்ஷ்மீநரசிம்மனுக்கு ஆராதனம் செய்யும் வேளையில் கோஷ்டியில் காத்திருந்து, பிறகு சுவாமிகளிடத்துச் சென்று தன்னந்தனியே அவருடன் இருந்து உபதேசத்தைப் பெற்று அதற்குப் பிறகு ஆசாரியனைத் திருப்திப்படுத்தும் விதமாக நடந்து கொள்ள வேண்டும். பொருள் கொடுக்கக்கூடியவர்கள் பொருளைக் குருவின் மனம் குளிரும்படி கொடுக்க வேண்டும். மடத்துச் செலவுகளை ஒரு நாளோ அல்லது தங்களால் எவ்வளவு நாட்கள் முடியுமோ அவ்வளவு நாட்களோ ஏற்றுக்கொள்ள வேண்டும். லக்ஷ்மீநரசிம்மனுக்கு உத்ஸவங்கள் செய்விக்கவேண்டும். ஒன்றுக்கும் செயல் இல்லாதவர்கள் அன்றைத்தினம் மடத்தில் இனாமாகச் சாப்பிட்டு ஆசாரியன் அநுக்கிரகத்தைப் பெற்றுப் போக வேண்டும். ஆதிகாலத்தில் நியமம், நிஷ்டை, ஆசாரம், ஒழுக்கம், வைஷ்ணவ பத்தி இவைகளைப் பின்பற்றிவந்த காலத்தில் நடந்த முறை வேறு. தற்சமயம் இது ஒரு சடங்காக, வியாபார முறையில் நடந்துவருகிறது. நல்லவர்கள், கெட்டவர்கள், ஒழுங்கீனர்கள், போக்கிரிகள் எல்லோருக்கும் பரங்யாஸம் நடக்கிறது. இதற்குப் பழி, காலத்தின் பேரில். காலம் கலியுகம் அல்லவா? இவ்வளவு மட்டிலாவது ஆசாரியனிடத்தில் வர வேண்டும், அதிருஷ்டம் பெற வேண்டும் என்று ஓர் எண்ணம் இருப்பதே மேல். இதை வைத்துக்கொண்டு வைஷ்ணவ மதத்தைக் காப்பாற்றினால் போதாதா என்பதுதான் சுவாமிகளின் எண்ணம். மேலும் பெரும்பாலான சீடர்களின் நன்மதிப்பைப் பெறவேண்டுமென்கிற ஆவல். முக்கியமாகத் தனவந்தர்கள், சர்க்கார் உத்தியோகத்தில் பெரிய பதவிகளை வகிக்கும் சீடர்கள், மடத்தின் சக்தியைத் தாங்கள் பங்கிட்டுக்கொள்ளும் முறையில் மடத்திற்கு உழைக்கும் ஏழை வைதிகர்கள் என்கிற நாமதாரிகள் இவர்களுடைய ஆதிக்கத்தில் மடமும் ஆசார்யனும் நடக்க வேண்டிய காலமாக இருக்கிறது.

ஆகையால் என் தகப்பனார் கோரியபடி பரங்யாஸம் செய்தால் தமக்கு ஆதரவாக இருப்பவர்கள் என்ன சொல்வார்களோ என்கிற பயம் சுவாமியின் மனத்தில் உண்டாயிற்று. ஆகையால் பரங்யாஸம் செய்வதற்கு முன்பாக, ''நீர் சேது ஸ்நானம் செய்துவிட்டு வாரும். பிறகு பரங்யாஸம் செய்து வைப்பதைப்பற்றி யோசனை செய்வோம்'' என்று உத்தரவு கிடைத்தது. என் தகப்பனார் முன்கோபி. தாம் ஸ்ரீரங்கத்து மடத்து ஏஜெண்டாக இருந்த காலத்தில் இப்பொழுது சந்நியாசியாக இருப்பவர் மடத்தில் பூஜை செய்பவராக அமர்ந்திருந்தார். இன்று சுவாமியாகப் பீடத்திலமர்ந்து தம் கோரிக்கைக்கு ஒரு விதி ஏற்படுத்துகிறார் என்ற கோபம் உண்டாயிற்று.

அதை அடக்கமுடியாமல் அவரிடத்தில் கடுமையான பேச்சுக்களைப் பேசிவிட்டார். "ஓய்! உம்மை எனக்குத் தெரியாதா? இன்று ஆசாரியராகிவிட்டீர். ஆராதனம் பண்ணிக்கொண்டிருந்த ஜமாச்சாரியார் தானே நீர்? நான் என்ன பாவம் செய்த தற்காக எனக்குச் சேது ஸ்நானம் விதிக்கிறீர்? நான் இருமுறை இதற்கு முன்பாகச் சேதுஸ்நானம் செய்திருக்கிறேன். கங்கை, யமுனை, சிந்து முதலிய புனித தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்திருக்கிறேன். இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் எல்லா க்ஷேத்திரங்களுக்கும் சென்று திரும்பியிருக்கிறேன். தினந்தோறும் வைதிக கர்மங்களை விடாமல் செய்துவருகிறேன். எவ்விதத்திலும் என் வாழ்வில் குறை சொல்வதற்கு இடமில்லை. என்னைக் காட்டிலும் பலவிதப் பாவங்களைச் செய்து வருபவர்களுக்கெல்லாம் நிபந்தனையின்றிப் பரங்யாஸம் செய்துவைத்துவருகிறீர்கள். நான் ஏதோ மகாபாதகம் செய்தவன் போல எனக்கு விதி ஏற்படுத்துகிறீர். இது என்ன நியாயம்?" என்று கூச்சலிட்டார். அதற்குச் சுவாமிகள் மனவருத்தத்துடன், "சேஷையங்காரே, நீர் பாவம் செய்பவரல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் சீமைக்குப் போய்விட்டு வந்த மகனோடு வாழ்ந்துவருகிறீர் என்கிற அபவாதம் உமக்கு இந்த ஊரில் இருக்கிறது. அதை மீறி உமக்குப் பரங்யாஸம் செய்விக்க எண்ணிச் சேது ஸ்நானம் செய்ய விதிக்கிறேன்" என்று பதிலளித்தார்.

"சரி, சுவாமி. சீமைக்குச் சென்று திரும்பிய என் மகன் உதவியினால்தான் நீங்கள் இந்த ஊருக்கு வந்து நூறு வருஷங்களாகப் பெறாத மரியாதைகளையெல்லாம் கோயிலில் பெற்று இன்று மடத்தில் எழுந்தருளியிருக்கிறீர்கள். இது என் மகனுடைய செல்வாக்கினால் உங்களுக்கு நடந்தது. அவன் தங்களிடத்துப் பரங்யாஸம் கோரவில்லை. நான் என் மகனிடத்தில் வசிக்காமல் எங்கே போவது? என் மகன் துன்மார்க்கமான செயல் ஒன்றிலும் ஈடுபட்டவன் அல்ல. அவனுடன் தங்குவது பாவமென நீங்கள் கருதினால் பரங்யாஸம் ஆனபிறகும் நான் அவன் கூடத்தானே இருக்கவேண்டும்? ஆகையால் பரங்யாஸம் எனக்குத் தேவை இல்லை" என்று சொல்லிவிட்டு நடந்த சங்கதிகளை என்னிடம் தெரிவித்தார். எனக்கு மனம் திடுக்கிட்டது. யார் பேரில் குறை கூறுவதென்பது எனக்கு விளங்கவில்லை. வேண்டுமென்று தேடிச்சென்று, ஆசாரியரிடம் கோபித்துக்கொண்டு வந்துவிட்ட தகப்பனார்மேல் வருத்தப்படுவதா? அல்லது ஆசாரியருடைய கதியற்ற தன்மையைப் பற்றி வருந்துவதா? சரி, இனியாகிலும் இம்மாதிரியான தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல் காலத்தை நடத்துவதென்று தீர்மானித்து, என் தகப்பனாரிடம் அவர் நடந்துகொண்டது சரியல்ல என்று மரியாதையுடன் சொன்னேன். ஆனால் அதற்காக அவர் என்னைக் கோபிக்கவில்லை. மோக்ஷத்திற்குச் சீட்டுப் பெறுவதைக் காட்டிலும், என்னுடன் வசிப்பது மேல் என எண்ணிய தந்தையின் உள்ளத்தை நான் போற்றாமல் என்ன செய்வது? இவரல்லவோ என் அருமைத் தந்தை என அவரிடம் பக்தியும் மதிப்பும் அதிகம் கொண்டேன். அன்று முதல் அகோபில மடத்திற்கும் எனக்கும் உள்ள குரு சிஷ்யத் தொடர்பு முறிந்தது என மனத்தில் உறுதிகொண்டேன். இதற்காக வைஷ்ணவ மதத்தைக் கோபிப்பதா, அல்லது வைஷ்ணவ சமூகத்தாரிடம் உள்ள பக்தியை வெறுப்பதா, அல்லது ஆசாரியன் போக்கைப்பற்றிக் குறை கூறுவதா?

இது நடந்து சில வருஷங்களுக்குப்பின் அகோபில மடம் ஜீயர் பரமபதம் எய்தினார். அவர் ஸ்தானத்திற்கு அவரைப் போலவே படித்தவரும், வேதவிற்பன்னரும், நல்லொழுக்கம், சீலம், உயரிய வாழ்வு உடையவரும், செல்வருமான திருநெல்வேலி வீரவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியார் எழுந்தருளினார். பரம வைதிகர். உலகப் போக்கைப்பற்றி ஒன்றும் அறியாதவர். எனினும் மடத்தை நன்கு பரிபாலித்துவந்தார். அவர் தேச சஞ்சாரம் செய்யும் முறையில் ஸ்ரீரங்கத்திற்கு வந்து கோவில் தரிசனம் செய்ய முற்பட்டார். உடனே பழைய சண்டைகள் கிளம்பிவிட்டன. கோர்ட்டு வியவகாரம், தடை உத்தரவு எல்லாம் முறையே அடுத்தடுத்து ஏற்படவே, ஸ்ரீரங்கம் புக விரும்பாமல் திருச்சிக்குப் பத்து மைல் மேற்கே அகண்ட காவேரியின் தென்கரையிலுள்ள திருப்பராய்த்துறை என்ற கிராமத்தில் வசித்து வந்தார். எவ்விதத்திலாயினும் ஸ்ரீரங்கம் வந்து கோவிலில் தரிசனம் செய்துவிடவேண்டும் என்கிற அவா அவர் மனத்தில் குடிகொண்டது. ஸ்ரீரங்கம் வைதிக கோஷ்டியார் இந்தத் தடவை என்னை அண்டவில்லை. முன்பிருந்த சந்நியாசி என்னையும் என் தகப்பனாரையும் நடத்-

தியவிதம் அவர்கள் ஞாபகத்தில் இருந்ததால் ஒதுங்கி நின்று கோர்ட்டில் நடக்கும் நடவடிக்கைகளை நடத்திவந்தார்கள். கிட்டத்தட்ட இரண்டு வருஷம் திருப்பாய்த்துறையில் இந்தச் சுவாமி தங்கியிருந்தார். 144 தடையுத்தரவைத் தாண்டிய பாடில்லை. இதற்குள்ளாக வக்கீல்களும், கட்சிக்காரர்களும், ஸ்ரீரங்கம் கோஷ்டியார்களுமாகச் சுமார் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்துவிட்டார்கள். சுவாமிகளுக்கு மனத்தில் கவலை அதிகரித்தது. 'தடை உத்தரவைத் தாண்டப் பத்தாயிரம் செலவானால் இனி நமது உரிமையைப் பெற எவ்வளவு செலவாகும்?' என்று சிந்தித்தார். லக்ஷ்மீநரசிம்மன் சொத்தை உபயோகமற்ற விவகாரங்களில் செலவழிப்பதில் அவருக்குப் பிரியமில்லை. கடைசியாக, மடத்தின் முக்கியக் காரியஸ்தரை என்னிடம் அனுப்பித் தம்மை வந்து பார்க்கும்படி சொல்லியனுப்பினார். நான் இதில் தலையிட விரும்பவில்லை. இரண்டு மாதங்கள் கழிந்தன. மறுமுறை தாமே என்னைப் பார்க்கவேண்டுமென்பதாகக் கடிதம் தம் கைப்பட எழுதி அனுப்பினார். நான் இருமுறை அவரிடம் சென்று, நிலையை அவரோடு பரிசீலனை செய்து, முடிவாக விவகாரத்தை வளர்க்கக் கூடாதென்று வற்புறுத்தி எதிர்க் கட்சியாருடன் சமரசமாக ஏற்பாடு செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக் காண்பித்து அதற்கான முயற்சியைச் செய்வதாக முடிவு செய்தேன்.

ஸர் டி. தேசிகாசாரியாருடன் கலந்து சமரச ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கைகள் நடந்தன. ஸ்ரீரங்கத்தில் தென்கலையார்களுக்குள் செல்வாக்குள்ளவரும், கோவில் தர்மகர்த்தாவுமான சிங்கம் ஐயங்காருடன் சமரச ஏற்பாடுகளைச் செய்து, இனி ஸ்ரீரங்கத்திற்கு ஹிந்து மதத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் தரிசனத்திற்கு வரும்பொழுது எல்லோருக்கும் ஒரே விதமான மரியாதை வழங்க வேண்டுமென்று இரு கட்சியாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் கோர்ட்டில் ஒரு தீர்ப்புக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து அதன்படி கோர்ட்டுத் தீர்ப்பும் கிடைத்தது. அகோபில மடம் சுவாமிகள் ஸ்ரீரங்கம் எழுந்தருளி, தகுந்த மரியாதைகளைப் பெற்றுத் தம் வாழ்நாட்களை ஸ்ரீரங்கத்திலேயே கழித்து, அந்தப் புண்ணிய பூமியிலேயே தம் பூத உடலை நீக்க உறுதிகொண்டு, கொள்ளிடக் கரையிலுள்ள கோவிலில் தங்கிவிட்டார்.

எனக்கும் அவர்களுக்கும் நட்பு அதிகரித்தது. என் வீட்டிற்கு எழுந்தருளி என் பாதசமர்ப்பணையை ஏற்றுக்கொண்டு, லக்ஷ்மீநரசிம்மஸ்வாமியின் உத்ஸவாதிகள் எல்லாம் நடத்தி என்னைக் கௌரவித்தார். மடத்திலிருக்கும் வைத்தியர் சுவாமிகளுக்கு மருந்து கொடுத்ததன் மூலமாகக் கடுமையான நோய்வாய்ப்பட்டு என்னிடம் சிகிச்சை செய்துகொள்ள உடன்பட்டார். சாஸ்திரீய முறையில், அவருடைய ஆசாரத்திற்கும் ஆசிரம தர்மத்திற்கும் குறைவு வராத முறையில் மருந்து உண்டார். ஒரு நாள் இரவு நோய் அதிகரித்துக் கவலைக்கிடமான நிலை ஏற்பட்டது. தமக்குப் பின் யாராகிலும் ஒருவரை இந்தப் பீடத்திற்கு ஏற்பாடு செய்யாமல் பிராணனை விட்டால் மறுபடி கோர்ட்டு வியவகாரங்கள் உண்டாகி, மடத்துச் சொத்து விரயமாகிவிடுமென்று பயந்தார். அன்றிரவு நானும் சுவாமிகளோடு இருந்து, அவர்கள் இஷ்டப்படி அவருக்கு அடுத்தபடி வரவேண்டியவருக்குக் காஷாயம் முதலியன கொடுத்து விடியற் காலையில் அவருக்கு இளவரசுப் பட்டமும் சூட்டப்பட்டது. சர்க்கார் ரிஜிஸ்திரார் முன்னிலையில் தக்க சாட்சிகள் வைத்துக்கொண்டு இந்த நியமனம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்தப் பட்டம் தங்களுக்குக் கிடைக்குமென மனோராஜ்யம் செய்துகொண்டவர்கள் பலர் ஏமாந்துவிட்டார்கள். சட்டப்படி வேலை நடந்துவிட்டது.

அன்றுமுதல் சுவாமியின் நோய் குணமடையவே, அவர் திருநாட்டிற்கு (வைகுண்டத்துக்கு) எழுந்தருளவில்லை. பத்து வருஷ காலம் உயிரோடிருந்து ஸ்ரீரங்கத்திலேயே இரண்டு சந்நியாசிகளாக மடத்தில் இருந்துகொண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாகத்தான் அவர் மறைந்தார். இளவரசாக இருந்த சுவாமிகள் வெகு நாள் காத்திருந்து கடைசியாகப் பட்டம் பெற்றார். இவரும் பெரிய வேதவிற்பன்னர், சீலர், பரமவைதிகர், வைஷ்ணவ தத்துவத்தில் நிபுணர். பழைய முறைகளை விட்டு அணுவேனும் மாறுதல் செய்ய இடம் கொடுக்கமாட்டார். சமீபத்தில் மதுராந்தகத்தில் ஓர் இலவச சம்ஸ்கிருதக் கல்லூரி ஏற்படுத்தியிருக்கிறார். என் நண்பராக இருந்த சுவாமி என் தாயாருக்குப் பரந்யாஸம் செய்துவைத்தார். தகப்பனார் விரும்பிக் கிடைக்காத நிகழ்ச்சி என் தாயாருக்குக் கிடைத்தது.

1932-ஆம் வருஷத்தில் மகாத்மா காந்தி ஹரிஜன இயக்கம் தொடங்கினார். தமிழ்

மாகாணத்தில் ஹரிஜன இயக்கத்திற்கு நான் தலைவனாக இருக்கவேண்டுமென ஸ்ரீ ராஜாஜி கொடுத்த உத்தரவின்படி அப்பதவியை நான் ஏற்றேன். தீண்டாமையை ஒழிப்பது, கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவது, ஹரிஜன நிதி சேர்ப்பது முதலிய முயற்சிகளில் ஈடுபட்டேன். நான் ஏற்றுச் செய்துவரும் தொண்டு என் நண்பராகிய அகோபில மடம் சுவாமிகளுக்கு விருப்பமில்லை. ஆனால் அதைப் பற்றித் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தது தவிர அவர் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அன்று முதல் எனக்கும் அவருக்கும் உள்ள சிநேகம் குறைந்துவிட்டது. என் பேரப்பிள்ளைகளுக்கு உபநயனம் செய்ய முயன்ற பொழுது, வைதிகர்களைக் கொண்டு எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தார். என் வீட்டில் நடக்கும் வைதிக கர்மங்களுக்குக் கோஷ்டியாரும் மற்றவரும் வராமல் தடை செய்துவிட்டார். நான் இந்தியா சட்ட சபைக்கு அங்கத்தினனாக இருக்க விரும்பித் தேர்தல் நடந்த காலத்தில், ஆஸ்திக வைதிகர்கள் எல்லோரும் ஐதாராபாத் ராஜா பகதூர் கிருஷ்ணமாசாரியாருக்கு வாக்குக் கொடுக்கவேண்டுமென்று சிடர்களுக்கு அறிவித்தார். மடத்து ஊழியர்கள் எல்லோரும் வாக்கு எடுக்கும் தினத்தன்று ஸ்ரீரங்கத்தில் எனக்கு விரோதமாக வேலை செய்தார்கள். இந்தச் சம்பவங்களுக்குப் பிறகுதான் மிகுந்திருந்த வைதிகப் பற்றும் என்னை விட்டு ஒழிந்தது. பொருள் புரியாத சடங்குகள், உயிரில்லாத பல அனுஷ்டானங்கள், பரிகசிக்கக் கூடிய பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கைவிட்டேன்.

நான் செய்ய எத்தனித்தது என்னால் முடியாத வேலை. செய்யக்கூடும் என்ற குருட்டு நம்பிக்கையாலும், முரட்டுத் தைரியத்தாலும் செய்தேன். நல்ல புத்திமதி ஏற்பட்டது. என்னால் முடியாத வேலையைக் காலம் செய்துவருகிறதை நான் தினந்தோறும் கண்கூடாகக் கண்டுவருகிறேன். என்னுடைய அறிவீனத்தைத் தவிர வேறு யாரை நொந்துகொள்வது? என் எண்ணங்களுக்கும் முயற்சிக்கும் எனது இளம்பிராயத்தில் என் மனத்தில் வேரூன்றிய சில நிகழ்ச்சிகள்தாம் காரணம். வைதிக குலத்தில் பிறந்தது, வைதிகக் கோட்டையான ஸ்ரீரங்கத்தில் வளர்ந்தது, வளரும் வயசில் கோயில் முறைகளை ஊன்றிக் கவனித்து வந்தது, என் பெற்றோர்களின் மனப்பான்மை - இவைகள் மூலம் சில எண்ணங்கள் மனத்தில் குடி கொண்டு, ஆங்கிலப் படிப்பில் ஈடுபட்டும், ஐரோப்பா முதலிய நாடுகளில் வருஷக்கணக்காகச் செலவழித்தும், என்னை விட்டு அகலவில்லை. கடைசியாக நான் அநுபவித்த நிகழ்ச்சிகளால் பல வருஷங்கள் கடந்தபிறகுதான் வைதிகப் பற்று மறைந்தது.

கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் நமது மாகாணத்திலும் அகில இந்தியாவிலும் போற்றத்தக்க ஒரு பெரியார். சீர்திருத்தக்காரர் என்று பெயர் பெற்றவர். ருதுமதி விவாகம் சட்டபூர்வமாகவேண்டுமெனப் பாடுபட்டவர். உலகம் முழுவதும் நல்ல அந்தஸ்துடன் பெரிய பதவி வகித்துச் சுற்றிப் பார்த்தவர். இப்படிப்பட்ட ஒரு மகான் ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேச மசோதா சட்டமாக்க இருக்கும்பொழுது சென்னை மேல் சட்டசபையில் வெகு உருக்கமாகப் பேசி அதை எதிர்த்தார். அவருடைய அரிய மொழிகள் என் மனத்தை விட்டு அகலவில்லை. "நாம் நாட்டை இழந்தோம். அரசியல் துறையில் தாழ்வு அடைந்தோம். நமக்குள்ள செல்வம் எல்லாம் மகரிஷிகளால் அளிக்கப்பட்ட கலைகள். அக்கலைகளுக்கு அறிகுறியாக எஞ்சியிருப்பவர்கள் நம் நாட்டிலுள்ள ஏழை வைதிகர்கள். அவர்கள் மனம்புண்படும்படியான மசோதா இது. இதை நான் அங்கீகரிக்க முடியாது" என்று மிகுந்த சோகத்துடன் பேச்சை முடித்தார். அதற்கு ராஜாஜியின் பதிலும் அதே முறையில் தான் இருந்தது. "நம் மூதாதைகளாகிய மகரிஷிகளுடைய பெயரையும் புகழையும் நிலைநிறுத்தவேண்டியது அவர்களுடைய சந்ததியார்களாகிய நமது கடமை. மனித சமூகத்தைப் பிளவுபடுத்தி, ஒரே மதத்தைச் சேர்ந்த, குற்றமற்ற, பெரும் பகுதியினரைப் பிறவிக் குற்றமென்ற கற்பனையால் ஒதுக்கிவைத்துப் பகவானைத் தரிசிக்க அவர்களுக்கு உரிமை இல்லை என ஒரு காலத்திலும் ரிஷிகள் சொல்லியிருக்க மாட்டார்கள். சொல்லவும் இல்லை. அப்பெரியார்களின் நற்பெயர் ஓங்கவேண்டியே இம்மசோதாவை நான் கொணர்ந்துள்ளேன்" என்று பதில் அளித்தார். மசோதா சட்டமாயிற்று. மூன்று தமிழ் ஜில்லாக்களில் அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. ஹிந்து மன்னராகிய திருவாங்கூர் மகாராஜா தீண்டாமையைத் தம் சம்ஸ்தானத்தை விட்டு அறவே ஒழித்து, அழியாப் புகழ் அடைந்துவிட்டார். இது காலத்தின் போக்கு; மக்களின் பெருமை.

# பரிசு

ஜயலக்ஷ்மீ ஸ்ரீநிவாசன்

அந்தத் தந்தியைக் கண்டதும் அன்று ராமஸ்வாமி ஐயர் அகத்தில் ஒரே கோலாகலம் குடிகொண்டது. கல்யாணமான கையுடன் கணவன் வீட்டிற்குச் சென்ற லலிதா, ஐந்து வருஷம் கழித்துப் பிறந்தகம் வருகிறாள். லலிதாவின் விஷமச் சிரிப்பும் குறும்புத்தனமும் இன்றி இதுகாறும் இல்லம் கலகலப்பில்லாமல் ஏங்கிக் கிடந்தது. அந்த வீட்டின் மஹாலக்ஷ்மி, குத்துவிளக்கு, அருமைக் குழந்தை - இவ்வளவு வருஷத்திற்குப் பிறகு வருகிறாளென்றால் அந்தக் குடும்பத்தினருக்கு உண்டான ஆனந்தத்தைக் கேவலம் சொற்களால் விவரிக்க இயலுமா? "அக்கா வருகிறாள். அக்கா வருகிறாள்" என்று குழந்தைகள் எல்லோரும் ஆரவாரித்த வண்ணம் ஆனந்தத் தாண்டவமாடினர். அவள் பெற்றோர்களின் ஆனந்தத்தின் நடுவில் ஒரு விதத் திகைப்பும் அச்சமும் லேசாகப் படர்ந்திருந்தன.

கண்ணான குழந்தை, கலைமகளின் பூர்ண அருளும், ரதி தேவியின் எழிலும் ஒருமிக்கத் திரட்டிக் குழைத்துச் செய்த அழகிய பதுமை போன்ற அருமைச் செல்வி, அன்று வீட்டை விட்டு அகன்றாள். அக்கணமே மூதேவி தாண்டவமாடிக்கொண்டிருந்த அந்த வீட்டில் ஸ்ரீதேவி புகுந்து அருள் புரிந்தாள் வறுமைப் பிணியில் சிக்குண்டு பரிதவித்த பெற்றோர்கள் தங்கள் கண்மணி லலிதாவை ஒரு சாண் வயிற்றுக்காகக் கிழவனுக்குக் கொடுத்தார்கள்; இல்லை, விற்றார்கள் என்றாலும் பொருந்தும். அவர்கள் வயிறு என்னவோ நிறைந்துவிட்டது; வீடு சுபிக்ஷமாக விளங்கியது. ஆனால், ஆனால்......லலிதாவின் கதி? அவள் மனம் வெதும்பியவளாய்க் கிழவனுக்கு மாலையிடவேண்டி வந்தது. அவள் தன் இளமையில் எண்ணி எண்ணி மகிழ்ந்த இன்பக் கனவுகளெல்லாம் அக்கணமே சிதைந்து சுக்கு நூறாயின கிடக்கிறது, அவள் இளமையில் கண்ட கனவில் ஒரு சிறிதாவது பலிக்கக்கூடாதா? அவள் கனவில் மாத்திரந்தான் பல அழகிய குழந்தைகளுக்குத் தாயாக விளங்கினாளே தவிர இப்போது மலடியானாள். தொண்டு கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டதன் பயன் போலும்!


சிறுபிராயத்திலிருந்தே அவளுக்குக் குழந்தைகளிடத்தில் அலாதிப் பிரியம். அக்கம் பக்கத்துக் குழந்தைகள் எல்லாம் அவள் இன்சொற்களில் சிக்குண்டு தேனை ஈ மொய்ப்பதுபோல், "அக்கா, அக்கா" என்று அவளை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருப்பார்கள். ஒரு குழந்தையாவது பிறந்திருந்தால் அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் அளித்திருக்கும். அதுவும் இல்லையே! அவள் நாளுக்கு நாள் வேதனையால் மெலிந்து போனாள். ஆனால் அவள் அழகும் வனப்பும் மிகுந்த தேகக்கட்டு நாளுக்கு நாள் செழுசெழுவென்று பொங்கி மிளிர்ந்தது. அந்த அழகுத் தேவதையானவள் உலகத்தையே வெறுத்தாள். அவள் கணவர் அவளை மிகமிகப் பிரியமாக நடத்திவந்தார். அவள் உடம்பு நிறைய வைர ஆபரணங்களால் இழைத்தார். லக்ஷாதிபதிக்கு இது ஒரு சிரமமா? ஆனால் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கு அவரால் சாத்தியப்படவில்லையே!

இவ்விதமாக ஐந்து வருஷங்கள் கழிந்தன. லலிதா தன் பெற்றோர்களின் தன்னலச் செய்கையை நினைந்து நினைந்து மனம் வெதும்பி, அவர்கள் எவ்வளவோ அழைப்புக் கடிதங்கள் விடுத்தும் பிறந்தகம் சென்றுவரப் பிரியப்படவில்லை. ஆனால் ரத்த பாசம் அடியோடு அற்றுப் போகுமா? ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவளுக்குப் பிறந்தகம் சென்று பெற்றோரைப் பார்த்துவரவேண்டுமென்ற ஆசை உதித்தது. அவள் கணவர் தாம் அவள் காலால் இட்ட வேலையை

உடனே தலையால் நிறைவேற்றுவதற்குக் காத்திருக்கிறாரே. லலிதா தன் விருப்பத்தைத் தெரிவித்தவுடனே அவர் தம் மாமனாருக்கு ஒரு தந்தி அடித்துவிட்டு, மனைவியுடன் வேட்டகத்திற்குப் புறப்பட்டுவிட்டார். லலிதாவின் கணவர் டெல்லியில் ஒரு பெரிய வியாபாரி. அவள் தகப்பனார் கரூரில் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர்.

* * *

தாங்கள் இவ்வளவு வருஷங்களாகப் போட்ட கடிதம் ஒன்றுக்காவது பதில்கூட எழுதாத பெண் தங்களைப் பார்க்க வருகிறாள் என்றால், பெற்றோர்களின் ஆனந்தத்தைக் கேட்கவும் வேண்டுமா? வீட்டில் ஒரே பரபரப்பு. ஐயர் பணக்கார மாப்பிள்ளையும் பெண்ணும் வரும்போது வெறுமனே உட்கார்ந்திருப்பாரோ? மேலும் கோடைக் காலமாதலால், பள்ளிக்கூடமும் சாத்தியிருந்தது; அவருக்கு ஒழிவாகவும் இருந்தது. தந்தி கிடைத்த அடுத்த நாளே கூலி ஆட்களை நியமித்து வீடு முழுவதும் வெள்ளை அடிக்கச் செய்தார். வீட்டிலுள்ள அறைகளிலெல்லாம் பெரியதும், விசாலமானதும், காற்றோட்டம் உள்ளதுமான அறையை அவர்களுக்காக ஒழித்துவிட்டு, அதில் கட்டில், மெத்தை, நாற்காலிகளை நிரப்பி ஜோடித்துச் சீர்படுத்தினார்.



தாய் ஜானகி விதவிதமான பக்ஷண வகைகளைத் தயாரித்து வைத்தாள். லலிதா திரும்பிப் புக்ககம் செல்லும் பொழுது, அவளுடன் அனுப்புவதற்காகத் தினுசு தினுசாக அப்பளம், வடகம், ஊறுகாய் என்று தயாரித்து வைத்த வண்ணம் இருந்தாள். அன்றி, தன் கணவருடன் கூடக் கலந்து ஆலோசித்துப் பெண்ணுக்கு அபூர்வமான ஒரு பரிசையும் கொடுப்பதற்காகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தாள்.

லலிதா வரும் நாள் நெருங்க நெருங்க, வீட்டில் குதூகலமும் பரபரப்பும் அதிகரித்தன. "அக்கா நேக்கு நாலு பட்டுச் சித்தாடைகள் வாங்கிண்டு வராளாமே" என்பாள் கமலம். "நேக்குப் பௌண்டன் பேனா, திருகு பென்ஸல் எல்லாம் கொண்டுவராளே ஏ ஏ ஏ!" என்று குதிப்பான் சீனுப்பயல். "நேக்குக் கலர் ரிப்பன், பொம்மை எல்லாம் கொண்டுவருவாளே!" என்று பெருமை பீற்றிக்கொள்வாள் ஸரோஜா. "ஏண்டீ மன்னீ! குழந்தை இவ்வளவு நாள் கழித்து வராளே. அண்ணாவிடம் சொல்லி நல்லதாய் ஒரு ஜதை புடைவை சோமன் வாங்கிண்டு வரச் சொல்லேன்" என்றாள் விதவை அத்தை சங்கரி. 'சாகுந்தலத்'தில் சகுந்தலை ஏழு வருஷங்களுக்குப் பிறகு கண்வமுனிவரின் ஆசிரமத்திற்கு வந்த பொழுது ஆசிரமத்தில் ஏற்பட்ட சந்தோஷப் பரபரப்பை எத்தனை அழகாகக் கவி வருணித்திருக்கிறார்! அதை விடப் பன்மடங்கு ஆனந்த கோலாகலத்துடன் விளங்கிற்று ராமஸ்வாமி ஐயரின் இல்லம்.

* * *

வீட்டு முன்புறம் டாக்ஸியொன்று வந்து நின்றது. லலிதா கணவரோடு பிறந்தகம் வந்துவிட்டாள். வீட்டு முன்புறமே அவளது வரவை எதிர் பார்த்த வண்ணம் ஏற்கனவே தயாராகக் காத்திருந்த அனைவரும் அவர்களை ஆசையுடன் வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்றனர்.

லலிதா பெற்றோருக்கும் அத்தைக்கும் நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்தாள். அச்சமயம் கூடத்தில் கட்டியிருந்த தூளியின் மீது அவள் பார்வை விழுந்தது. அதனுள்ளிருந்து சின்னஞ் சிறு குஞ்சுக் கால்கள் இரண்டு தென்பட்டன.

"அம்மா!" என்றாள் லலிதா ஆச்சரியத்துடன்.

"அவன் பிறந்து மூன்று மாதமாச்சுடீ, லல்லூ! ஆனால் உங்கப்பாவும் அம்மாவும் சங்கோசப்பட்டுண்டு உனக்கு எழுதவில்லை" என்றாள் அத்தை.

உடனே லல்லுவின் தாய் ஓடிப் போய்த் தூளியிலிருந்து குழந்தையை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்து, "இந்தா அம்மா லல்லூ, இது இனி உன் குழந்தை" என்றாள் உணர்ச்சி மிகுந்த குரலில். குழந்தை தங்கவிக்கிரகம்போல் இருந்தான். அக்காவைப் பார்த்து அழகாகச் சிரித்தான். அந்த மோகனச் சிரிப்பில் சொக்கிப்போனாள் லலிதா. பல நாட்களாக அவள் இதழிடையிலிருந்து மறைந்துபோயிருந்த புன்னகை மறுபடியும் பூத்துப் பொலிந்தது.

"அட, என் கண்ணே!" என்று குழந்தையை அளவுகடந்த வாத்ஸல்யத்தோடு மார்புடன் தழுவி முத்தமிட்டுக்கொண்டாள். உடனே குழந்தையுடன் கணவரை அணுகி, "இங்கே பாருங்கோன்னா, அம்மா நேக்குத் தந்த பரிசை!" என்றாள்.

அவரும் குழந்தையின் மோகனச் சிரிப்பிலும் அழகிலும் சொக்கிப் போனவராய், "நிஜமாகவா?" என்று குழந்தையை வாங்கி உச்சிமோந்தார்.

"ஆமாம் மாப்பிள்ளை, இனி அவன் உங்கள் குழந்தைதான்" என்றார் ராமஸ்வாமி ஐயர். அவர் முகத்தில் அசட்டுச் சிரிப்பு ஒன்று தோன்றி மறைந்தது.

### கெட்டிச் சுவரும் ஈரச் சுவரும்

"என்ன இருந்தாலும், யௌவனம் போய்விட்ட பின்பு ஒரு யுவதியை மணப்பது கொஞ்சம் வெட்கங்கெட்ட காரியமாகத்தான் இருக்கிறது; இதில் சந்தேகமே இல்லை. பெண் இயற்கையிலேயே வெட்கம் கொண்டவள். கெட்டுப்போன பெண்களின் விஷயம் வேறு; ஆனால் பொதுவாகப் பெண் ஆணை விட எவ்வளவோ அடக்கமுள்ளவளாகத்தான் இருக்கிறாள். தனக்கு இணையானவன் கணவனாக வாய்க்கப்பெற்றவள், வேறு புருஷனுடன் பரிகாச விளையாட்டுகள் செய்தாலுங்கூட அவள் மனம் சுத்தமாகத்தான் இருக்கும். இணையில்லாதவனுடன் மணம் முடியுமாயின், அவள் யாரையும் கண்ணெடுத்துப் பாராமலே இருந்தாலும் சரிதான், அவள் மனம் துன்பமுற்றுத்தான் கிடக்கும். அது கெட்டியான சுவர்; கடப்பாரை அதை ஒன்றும் செய்ய முடியாது. இது ஈரச் சுவர்; எதுவரையில் கடப்பாரையினால் இடிக்கப்படாமலிருக்கிறதோ, அதுவரையில்தான் இது நிலை நிற்கும்!"

—பிரேம்சந்த்.

# பாரதியாரின் 'மூன்று காதல்'

யதுகிரி அம்மாள்

புதுச்சேரியில் ஒவ்வொரு வியாழக் கிழமையும் கடற்கரையில் துய்ப் ளெக்ஸ் சிலையின்முன் பாண்டு வாத்தியம் வாசிப்பது வழக்கம். வாத்தியக்காரர் எல்லாரும் நின்றுகொண்டு இங்கிலீஷ் நோட் ராகத்தில் ஒருமணி காலம் வாசிப்பார்கள். வெள்ளைக்காரக் குழந்தைகள் அதைச் சுற்றிக் கூத்தாடுவார்கள். பார்வைக்கு அழகான காட்சி அது.

பாரதியாருக்குக் கும்பலில் உட்காருவது பிடிக்காது. எங்களை அழைத்துக்கொண்டு மணலுக்குப் போனார்.

"அப்பா, இவர்கள் ராகம் இப்படி இருக்கிறதே. கீச்சுத் தொண்டையில் பாடுகிறார்கள். அப்படி நாம் பாடினால் நன்றாக இருக்குமா?" என்று கேட்டாள் தங்கம்மா.

**பாரதியார்:** அது ஒருவகையான சங்கீதம். கீழ் ஸ்தாயியிலிருந்து மேல் ஸ்தாயிக்கு ஒரே அடியாய்த் தாவுகிறது. படிப்படியாக மேலே ஏறிச் செல்வது நம் வழக்கம். அவர்கள் ஒரே அடியாய் மேல் ஸ்தாயியில் செல்வது நமக்கு விநோதமாகக் காண்கிறது.

**தங்கம்மா:** நாம் அதைப்போல் பாடினால் நன்றாக இருக்குமா?

**பாரதியார்:** பாடும் வகையில் பாடினால் நன்றாக இருக்கும்.

**தங்கம்மா:** நாளைக்கு ஸரஸ்வதி பண்டிகை. ஸரஸ்வதியின்மேல் இந்த ராகத்தில் ஒரு பாட்டுப் பாடப்பா!

**பாரதியார்:** ஆகட்டும்.

"லக்ஷ்மியின்மேல் பாடினால் நன்றாக இருக்கும்" என்றேன் நான்.

முதல் ராகம் முடிந்து வேறு ராகத்தில் பாண்டு ஆரம்பித்தார்கள்.

**பாரதியார்:** யதுகிரி, நீ சொன்னபடி இந்த ராகத்தில் லக்ஷ்மியின்மேல் ஒரு பாட்டுச் செய்கிறேன்.

**செல்லம்மா:** கல்கத்தா, காசி அங்கெல்லாம் துர்க்காபூஜை செய்வது போல, சக்தியை நீங்கள் பாடினால் நம் கஷ்டம் விடியும்.

அப்பொழுது பாண்டில் கீழ் ஸ்தாயியில் நான்கடி, மேல் ஸ்தாயியில் நான்கடியாக வாசித்தார்கள்.

**பாரதியார்:** செல்லம்மா, நீ சொன்னது சரி. தங்கம்மா ஸரஸ்வதியின் மேல் பாடச்சொன்னாள்; யதுகிரி லக்ஷ்மியின்மேல் பாடவேண்டுமென்று கேட்டாள்; நீ காளியின்மேல் பாடச் சொன்னாய். இங்கு அவர்கள் மூன்று ராகம் பாடியிருக்கிறார்கள். நாளைக்கு மூன்று ராகங்களிலும் பாடிக் காண்பிக்கிறேன், பாருங்கள்.

**தங்கம்மா:** என்ன அப்பா! மூன்று ராகங்களையும் எப்படி ஒன்றாகப் பாடுகிறது?

**பாரதியார்:** முதலில் ஸரஸ்வதி, இரண்டாவது லக்ஷ்மி, மூன்றாவது காளி. மூன்று பேர்களையும் மூன்று ராகங்களில் பாடினால் போச்சு.

**தங்கம்மா:** நீங்கள் செய்யும் பாட்டுக்களெல்லாம் நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, ஆனந்தக் களிப்பு - ஆண்டிகள் பாடும் மெட்டில் பாடிவிடுகிறீர்கள். ஒரே ராகம் என்றால் எனக்குப் பிடிப்பதில்லை.

**பாரதியார்:** உங்களுக்கு எந்த மெட்டு வேண்டுமோ அதைப் போட்டுக் கொடுக்கிறேன்.

**தங்கம்மா:** முதலில் லக்ஷ்மி, ஸரஸ்வதி, காளி மூன்று பாட்டுக்களும் எங்களுக்குப் பிடித்தால் அப்புறம் மேலே கேட்கிறோம்.

மறுநாள் மூல நக்ஷத்திரம். ஸரஸ்வதி பண்டிகையைச் சிலர் நக்ஷத்திரத்திலும், சிலர் மகாநவமியன்றும் கொண்டாடுவது வழக்கம். அன்று எங்களுக்கு ஸரஸ்வதி பண்டிகை. கொலு ஸாமான்கள் அதிகமாக இல்லாததால் சாஸ்திரத்திற்கு இரண்டு பொம்மைகள் வைத்திருந்தோம். நாங்கள்

பாட்டுப் பாடிவிட்டுக் கொலுவுக்கு ஆரத்தி எடுக்கும் சமயம். பாரதியார் வந்தார்.

"யதுகிரி, உன் கொலுவுக்கு நான் புதிய பாட்டுப் பாடுகிறேன். அப்புறம் உன் சாஸ்திரம் நடக்கட்டும்" என்றார்.

எல்லாரும் வரிசையாய் உட்கார்ந்தோம். பாரதியார் பாடினார்.

'மூன்று காதல்' என்ற தலைப்பில், ஸரஸ்வதி காதலைப்பற்றி நான்கு பாட்டுக்களும், லக்ஷ்மி காதலைப்பற்றி மூன்று பாட்டுக்களும், காளி காதலைப்பற்றி இரண்டு பாட்டுக்களும் கம்பீரமாகப் பாடினார். எங்களுக்கெல்லாம் மெய் சிலிர்த்தது. எனக்கு ஒருதரம் சொல்லிக் கொடுத்தார். இதில் அவருடைய வாழ்க்கை லக்ஷயத்தைச் சித்திரித்துக் காண்பித்திருக்கிறார். இதற்கு அப்புறம் பல பாட்டுக்களைக் கும்மியடிக்கும் மெட்டிலும், ஹிந்துஸ்தானி மெட்டிலும், கீர்த்தனங்களின் மெட்டிலும் செய்திருக்கிறார். இப்பொழுது எவ்வளவோ கெட்டிக்காரர்கள் பல ராகங்கள் போட்டுப் பாடினாலும், பாரதியாரின் ராகமும், கம்பீரமும், தாமே அநுபவித்துக்கொண்டு சொல்லும் பாவமும் இல்லை.

## பெண்ணின் வேதனை

"இளவேனிற்காலம்; காலைப்போது மனோரம்மியமாய் விளங்கியது. சூரிய கிரணங்கள் வாதநாராயண மரத்தின் கிளைகளூடே பாய்ந்து, நிழலும் வெயிலும் வராந்தாவில் படிந்திருந்தன. அணில்கள் வாலைத் தூக்கிக்கொண்டு அப்படியும் இப்படியும் அலைந்துகொண்டிருந்தன. புள்ளினம் யாவும் கூடி, முடிவில்லாமல் இன்னிசை பாடின. பரந்த உலகிடை, தளிரும் நிழலும் வெயிலும் அடர்ந்த இந்த மூலையில், உணர்வும் இன்பமும் பொங்கி வழிந்தன; ஆயினும், அப்பேதைக்கு இயற்கையின் இந்த லீலைகள் ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் - ஏன், அவள் வாழ்வே - சிக்கலான புதிராக இருந்தது. என்ன நடந்தது? ஏன் இப்படி நிகழவேண்டும்? இந்த மெல்லிளங்காலை ஏன் ரஸமற்று இருக்கவேண்டும் அவளுக்கு? இந்த வீடு - இந்த உலகமே - வெறிச்சென்று இருப்பது ஏன்? ஒன்றுமே அறியாத அப்பெண்ணுக்குத் தன்னைத் திடீரென்று எங்கோ இருட்டில் கொண்டு விட்ட மாதிரி இருந்தது; இப்படித் திவிர வேதனையில் அவளை உழலச் செய்தது யாரோ? உயிரும் உணர்வும் பெற்று விளங்கும் இக்காட்சிகளிடையே - விலங்குகளும் புள்ளினமும் மெய்ம்மறந்து கூவும் இவ்வின்ப உலகிடையே - அவளைக் கொண்டு செலுத்துவார் எவரும் இல்லையா?"

—ரவீந்திரநாத் டாகுர்.

# பேய் பிடித்த பெண்

சியாமளா பாலகிருஷ்ணன்

## 1

"அம்மா, சாப்பிட வரவில்லையா?" என்று சமையற்காரியின் குரல் கேட்ட பின் தான் அவள் என் எதிரில் இருந்ததை உணர்ந்தேன். அப்பொழுதுதான் ஒரு பிரஸவ கேஸைப் பார்த்துவிட்டு வந்ததில் என் உடம்பு சோர்ந்திருந்தது. அவளுக்குப் பதில் உரைக்காமல் கண்களை மூடிக்கொண்டே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தேன்.

"அம்மா!"

"என்ன தொல்லை! வருகிறேன், போ."

"... இல்லே ... நம்ம வீட்டு எதிரே புளியமரம் இருக்கே; அதுலே பேய் வந்திருக்குன்னு சொல்லறு. நீங்க வீட்டிலே இல்லாதப்போ தனியா இருக்கப் பயமா இருக்கு."

"குப்பனை நான் இல்லாதப்போ வீட்டிலேயே இருக்கச் சொல்லு... தட்டைப் போடு. வறேன்."

சாப்பிட்டுவிட்டுப் பழைய இடத்திலேயே வந்து உட்கார்ந்தேன். புளிய மாத்துப் பேயின் ஞாபகம் வந்தது. அதிலிருந்து என் மனம் நான்கு வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்திற்குச் சென்றது.

## 2

அன்று நான் குளித்துவிட்டு என் அறையில் உட்கார்ந்திருந்தேன். இருபத்தாறு வயசு என்று மதிப்பிடக்கூடிய ஒருவர் பரபரப்புடன் என் அறைக்குள் நுழைந்தார்.

"அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள். என்ன?"

"என் மனைவிக்கு நேற்று ராத்திரி ரெண்டு தாம் மயக்கம் வந்தது..."

"உம்."

"பேசிக்கொண்டிருக்கும் போதே திடீர் திடீர்னு மயக்கமாய் விழுந்துடறு. எத்தனை தரம் கூப்பிட்டாலும் தெரிகிறதில்லை. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தானாகவே எழுந்துவிடுகிறுள்."

"வயசு என்ன?

"பதினெட்டு."

"கல்யாணமாகி எத்தனை வருஷம் ஆகிறது?"

"ஒண்ணரை வருஷம் ஆகிறது."

"குழந்தை இருக்கா?"

"இல்லே."

"சரியாக ஸ்நானம் செய்கிறுளா?"

"உம்."

"ஏன் அவளை அழைத்து வரவில்லை?"

"வழியில் மயக்கம் வந்துவிடுமோன்னு பயம். நீங்கள் வந்து பார்க்கிறீர்களா?"

"சரி."

## 3

மோட்டாரில் ஏறினேன். "உங்கள் விலாஸம் என்ன?" என்று அவரை விசாரித்தேன்.

"வீடு கிட்டத்தான் இருக்கு. நீங்கள் நேரே போங்கள். திரும்பும் இடத்தைக் காட்டுகிறேன்."

"உங்கள் பெயர் என்ன?"

"கோபாலன்."

"இதோ இந்தச் சந்தில் திரும்புங்கள். அந்த நாலாவது வீடு; வேப்பமரம் வாசல்லே இருக்கே, அது."

வீட்டின் திண்ணையில் ஒரு பெரியவர் ஜபம் செய்துகொண்டிருந்தார். மூக ஜாடையிலிருந்து அவர் கோபாலனின் தகப்பனர் என்று அனுமானித்தேன்.

என்னை முதல் அறையில் உட்கார்த்திவிட்டுத் தம் மனைவியை அழைத்துவருவதாகச் சொல்லிக் கோபாலன் உள்ளே சென்றுர்.

அவர் உள்ளே சென்றதும் பின்வரும் சம்பாஷணை என் காதில் விழுந்தது:

"அம்மா, டாக்டரைக் கூட்டிண்டு வந்திருக்கேன். அவள் எங்கே?"

"என்னை ஒரு வார்த்தை கேக்காமே நீ ஏன் டாக்டரைக் கூட்டிண்டு வந்தே? உங்க அப்பா பூசாரியை வரச்சொல்லி இருந்தராம். நீ அந்தண்டே போனதும், அவன் வந்து பார்த்துட்டு, பேய் பிடிச்சிருக்குன்னு சொன்னுன்..."

"...பெலக்கப் பேசாதே. டாக்டர் பக்கத்து உள்ளே இருக்கார்..மாலதீ..."

அதன் பிறகு ஏதோ தணிந்த குரலில் வாக்குவாதம் நடந்தது. அது என் செவிகளில் சரியாக விழவில்லை.

பிறகு கோபாலன் தம் மனைவியுடன் முன்னறைக்கு வந்து அவளை எனக்கு அறிமுகப்படுத்தினார். நான் அவளை என் எதிரிலிருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னேன்.

"அம்மா, உன் பெயர் என்ன?"

"மாலதி."

"வயசு?"

"பதினெட்டு."

"உனக்கு நேத்திலேருந்து உடம்பு என்ன பண்ணறது?"

"ஒண்ணுமில்லே..."

"வெட்கப்படாதே சொல்லு. மயக்கம் வாரத்துக்கு முன்னாடி அது வரப்போறதுன்னு தெரியறதா?"

அவள் முகம் சிவந்தது; தலையைக் குனிந்துகொண்டாள்.

"மயக்கம் தெளிஞ்சதும், அது வந்திருந்ததுன்னு தெரியறதோ?"

"உம்."

"அப்போ உன் மனஸு எப்படி இருக்கு? சாதாரணமா, எப்பவும் போல இருக்கா? இல்லே, ஒரு மாதிரி இருக்கா?"

"வருத்தமா இருக்கு. அது கொஞ்ச நாழி அப்படித்தான் இருக்கு."

அவள் உடம்பு முழுவதையும் பரிசோதனை செய்தேன். அவ்வளவு நேரமும் அவள் கவலையுடன் என் முகத்தையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

"கவலைப்படாதே. சீக்கிரத்தில் உனக்குச் சரியாகிவிடும். இப்போ போனதும் மருந்து அனுப்பறேன். அதை ஒரு நாளைக்கு மூணு வேளை சாப்பிடு. நாளைலேருந்து நீயே மருந்து வாங்கிக்க வா.



"உடம்பு முழுக்க என்னவோ பண்ணறது. அப்புறம் எனக்கு ஒண்ணும் தெரியறதில்லே."

"என்னவோ பண்ணறதுன்னு?"

"அது... எப்படின்னு சொல்லறது?"

தினம் பரிசோதிச்சுட்டு மருந்தும் தரேன். கொஞ்ச நாளில் சரியாகிவிடும்."

"நான் உங்களோட மருந்து வாங்கிக்க வரட்டுமோ?" என்று வினவினார் கோபாலன்.

"வாங்கோ. நாளேலேருந்து அவள் வரட்டும்."

"எப்போ? காலையிலேயா, சாயந்தரமா?"

"சாயந்தரம் வரட்டும்."

வாசலில் அதே இடத்தில் பெரியவர் உட்கார்ந்திருந்தார். நாங்கள் வெளியில் வந்தபொழுது அவர் எங்களைக் கவனியாதவர்போல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார். வீட்டிற்கு வருகையில் எனக்கு அந்தப் பெண்ணின் நினைவாகவே இருந்தது. மா நிறமாக இருந்தாலும் அவள் அழகாய் இருந்தாள். சரியான உயரம்; அதற்கேற்ற உடம்பு; குறுகுறு என்று வசீகரமான முகம். நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தேன். என் கணவரின் பிரிவு தாங்காமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்! அந்தப் பிரிவினால் எனக்கும் இந்த மாதிரிதானே மயக்கம் வந்துகொண்டிருந்தது? இவ்விதம் ஒரு நிமிஷம் தோன்றிற்று. மனக்கிளர்ச்சியை மறக்க நான் படிக்க ஆரம்பித்திருக்காவிட்டால் என் மயக்கமும் நின்றிருக்காது; பைத்தியமும் பிடித்திருக்கும். இவைகளை நினைத்துப் பார்த்தபொழுது என்னை அறியாமல் என் உடம்பு நடுங்கிற்று.

வீட்டு வாயிலில் இரண்டு ஸ்திரீகள் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களை ஐந்து நிமிஷம் உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு, கோபாலனிடம் மருந்தைக் கொடுத்தேன். அவர் தயங்கினர்.

"பயப்படும்படி ஒண்ணுமில்லே. கொஞ்சம் நரம்புத் தளர்ச்சி; அவ்வளவுதான். அவள் சிறிது காலம் ஓய்வாக இருக்கணும். அவள் மனசு புண்படும்படியான வார்த்தைகளோ செய்கைகளோ இருக்கக்கூடாது. தினம் கொஞ்ச நாழி அவளோடே எனக்குப் பேசணும். இது மருந்தினலே மட்டும் குணமாகிற வியாதி இல்லே. நாளை மத்தியான்னம் வரை மருந்து கொடுத்திருக்கேன். சாயங்காலம் வரச் சொல்லுங்கோ."

"சரி, நான் போயிட்டு வறேன்."

## 4

மறுநாளிலிருந்து மாலதி தினம் சாயந்தரம் என்னைக் காண வரத் தொடங்கினள். நான் அவளைப் பரிசோதித்துப் பார்த்து மருந்து கொடுத்துக்கொண்டிருந்தேன். தினம் சிறிது நேரம் இருவரும் ஏதாவது பேசிக்கொண் டிருப்போம். நாலைந்து நாட்களில் அவளுக்கு என்னிடம் இருந்த சங்கோசம் பயம் எல்லாம் போய்விட்டன. முடிவில் அவளுக்கு என்னை விட்டு வீட்டிற்குப் போவதென்றால் மனசாகாது. தன் குடும்பத்தைப்பற்றி எல்லாம் என்னிடம் அந்நியோந்நியமாய்ச் சொல்லுவாள். எனக்கும் அவளிடத்தில் ஒரு தனிப் பாசம் ஏற்பட்டிருந்தது. அவளைக் காணும்போது நானும் அவளைப் போல் சின்ன வயசில் கஷ்டப்பட்டதாலோ என்னவோ, என் சகோதரி போலத் தோன்றிற்று. ஒரு நாள் அவளைப் பரிசோதித்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் முகம் வாடி இருந்ததைக் கவனித்தேன்.

"என்ன மாலதி, ஒரு மாதிரி இருக்கே?"

"இன்னிக்கு எங்க மாமியாருக்கு ரொம்பக் கோபம்."

"ஏன்?"

"எனக்குப் பேய் பிடிச்சிருக்காம். அதுக்குச் சூடு போட்டு, பட்டினியாய் வச்சு, பூஜை எல்லாம் பண்ணிணத்தான் எனக்குச் சரியாய்ப் போகுமாம். இப்படி டாக்டர் டாக்டர்ன்னு சொல்லிண்டிருந்தா வீடே குட்டிச்சுவராப் போய்விடுமாம். இன்னிக்கு முழுக்க அவர் என்னை வைதுகொண்டே இருந்தார். 'உன்னால் வீடே துடைத்துப் போய்விடும். உங்காத்துக்குப் போ' என்கிறார்."

"என்ன மாலதி, ஏதோ பெரியவா சொல்றான்னு நீயும் அதை நம்பறயா?"

"சும்மா ஒத்தர் சொல்லிண்டே இருந்தா..."

"சீ, அதெல்லாம் ஒண்ணுமில்லே, அசடே. வா, தோட்டத்துலே போய் உட்காரலாம்."

அங்கே போய் உட்கார்ந்ததும் நான் மறுபடி என் பேச்சைத் துவக்கினேன்.

"ஆமாம்; உனக்கு எத்தனை நாளாக இந்தப் பயம்?"

"இப்போதான், ரெண்டு மூணு நாளா."

"நான் கேட்கறத்துக்கு எல்லாம் சரியாய்ப் பதில் சொல்லணும். உனக்கே உன் வியாதியின் காரணம் தெரிந்துவிடும்."

"உம்."

"முதல்லே உனக்கு மயக்கம் வந்தது ஞாபகம் இருக்கா?"

"உம்."

"அப்போ நீ என்ன பண்ணிண்டிருந்தே? எனக்கு ஒண்ணு விடாதே விவரமாய்ச் சொல்லணும்."

"படுத்துண்டிருந்தேன். ராத்திரி மணி ஒன்பதரை இருக்கும். ரெண்டு பேருமா ஏதோ பேசிண்டிருந்தோம். அன்னிக்கி அவர் எங்கிட்டே ரொம்பப் பிரியமாய் இருந்தார். அப்போ அவர் அப்பா அவரை எதுக்கோ கூப்பிட்டார். அவர் உடனே எழுந்து போனார். கொஞ்ச நாழிக்கெல்லாம் எனக்கு மயக்கம் வந்துடுத்து."

"அவர் எழுந்து போனப்போ உனக்கு என்ன தோணித்து? நன்னா யோசித்துச் சொல்லு."

"உங்க கிட்டே எப்படிச் சொல்லறது?"

"பரவாயில்லே. நான் உன்னோடே அக்கா மாதிரி இல்லையா? நாம்பதான் இப்போ ரொம்ப சிநேகமாப் போய்விட்டோமே."

"அது ஒரு கதை மாதிரி இருக்கும்."

"தேவலை, சொல்லு."

"இவர் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கறத்துக்கு முந்தி ஒரு பெண் மேலே ஆசை வச்சிருந்தாராம். அவளுக்கு இவர் கிட்டே அன்பு இருந்ததாம். அது தெரிஞ்சதும் இவர் அவளுடைய தாயார் தகப்பனாருடைய சம்மதத்தைக் கேட்டாராம். ரெண்டு பேரும் ஜாதி வித்தியாசம் கூடவே கூடாதுன்னு தலைகீழே நின்னு தடுத்துட்டாளாம். கொஞ்ச நாள் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னாராம். அப்புறம் எப்படியோ சொல்லிச் சொல்லி அவர் அப்பா அவருக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சார்."

"அப்போ கோபாலன் உன் கிட்டே அவ்வளவு அன்பா இருக்கிறதில்லையா?"

"சே, சே, பாவம்! அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவர் இப்போ அதைப்பத்தி நெனைக்கறதே இல்லே. ஏதோ ஆகல்லேன்னு விட்டுவிட்டார். எங்கிட்டே அவருக்கு உசுரு."

"ஒனக்கு இதெல்லாம் யார் சொன்னா?"

"அவர்தாம் சொன்னார். அவளைப் பத்தி எனக்கு முழுக்கத் தெரிஞ்சிருக்கணும்னு சொன்னாராம்."

"இதெல்லாம் பத்தி அப்போ நெனைச்சுண்டையா?"

"அவர் அப்பா கூப்பிட்டதும், இப்போ கூப்பிடறாரேன்னு தோணித்து. அப்போ உடனே, நம்பகிட்டேயிருந்து இவர் கொஞ்ச நாழி பிரியறதை நம்மால் தாங்க முடியவில்லையே; அவளிடமிருந்தோ, ஆயுள் முழுக்க நாம்தானே அவரைப் பிடுங்கிக் கொண்டோம்னு தோணித்து....அப்போ வாசப்படியிலே ஒரு அழகான பெண் நின்னுண்டு 'மாலதீ, எனக்கு அவரைக் கொடுக்கமாட்டையா?'ன்னு கெஞ்சற மாதிரி இருந்தது. அதுக்கு மேலே என்னாலே தாங்க முடியல்லே..."

மாலதியின் கண்களில் ஜலம் துளித்தது.

"சீ அசடே, இதை எல்லாம் இப்போ எண்ணுவாளா? ஏதோ அப்போ ஒரு சமாசாரம் நடந்துதான்னா, அதுக்கும் இப்போ இருக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்? உன் மனசுலே இருக்கிற அன்புதான் உன்னை இப்படி எல்லாம் ஆட்டறது. நீ இதெல்லாம்பத்தி யோசிக்கவே கூடாது. அப்போ உன் உடம்புக்கு ஒண்ணுமே வராது, பாரு. இது உங்க மாமியார் சொன்னமாதிரி பேய் இல்லே. உன் உணர்ச்சிப் பேய்தான் உன்னை ஆட்டறது" என்று அவளுக்கு எடுத்துரைத்துச் சமாதானம் செய்தேன்.

அச்சமயம் உணர்ச்சிப் பேயின் கேலிக் கூக்குரல், "உன்னையும் நான் விடவில்லை!" என்று என் கணவரின் உருவத்தை என் முன் கொண்டுவந்து நிறுத்தியது. என் உடம்பை ஒரு விநாடி ஒரு மின்சாரப் பிரவாகத்தின் வேகம் குலுக்கியது.

---

"நம் நாட்டில், ஒரு தடவை விவாகம் ஆன பேர்வழிகள் மறுமணம் செய்துகொள்ளக் கொஞ்சமும் தயங்குவதில்லை. நர மாமிசத்தை ஒரு முறை ருசி பார்த்த புலி, மனிதனைக் கண்டால் சும்மா விடுமா? அதுபோலத்தான் பெண்டாட்டி விஷயத்திலும்!"

—ரவீந்திரநாத் டாகுர்.

---

# புதிய போர்முறைகள்

என். ஆர். ஸுப்பையர்

இப்போது நடைபெறும் இரண்டாவது உலகப் போரில் மேற்கொள்ளப்படும் முறைகள், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடந்த ஐரோப்பிய மஹாயுத்தத்தின் முறைகளிலிருந்து முற்றும் வேறுபட்டிருக்கின்றன. சாதாரணமாகப் பத்திரிகைகளில் இம்முறைகள் சம்பந்தமாகச் சில புதிய வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் உபயோகப் படுத்துகின்றனர்.

முதலாவதாக, இப்போருக்குப் 'பெட்ரோல் சண்டை' (Oil War - எண்ணெய்ச் சண்டை) என்று பெயரிட்டிருக்கிறார்கள். காரணம் என்ன? இதற்கு முன்னெல்லாம் சேனைகளையும் யுத்தச் சாமான்களையும் போர் முனைகளுக்கு அனுப்ப ரெயில் பாதைதான் மிக அவசியமாயிருந்தது. ஆகையால் இருப்புப் பாதை சௌகரியங்கள் ஏராளமுள்ள இடங்களில்தாம் போர்க்களத் துருப்புகள் திரட்டப்பட்டு வந்தன. ஒரு தேசத்து ரெயில்வே படத்திலிருந்து எந்த எந்த இடங்களில் போர்க்களங்களை அமைக்கக்கூடுமென்று முன்னதாகவே எதிரி ஊகித்து அறியக்கூடும். மேலும் சேனைகள் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் இருப்புப் பாதைகளை அமைத்துக்கொண்டே போக வேண்டும்.

இப்போரிலோ ரெயில்வேக்களின் பிராதான்யம் குறைந்துபோய்விட்டது. அநேக வித ஆகாயவிமானங்களும், கரடுமுரடான பிரதேசங்களில் கூட அதிவேகமாகச் செல்லக்கூடிய 'டாங்கிகள்' என்று சொல்லப்படும் மோட்டார்வண்டிப் பட்டாளங்களும் சேனைகளின் முக்கிய உறுப்புகளாக ஆகிவிட்டன. இவைகள் எல்லாம் பெட்ரோல் சக்தியால்தான் ஓடக்கூடியவையாதலால் இச்சண்டையைப் 'பெட்ரோல் சண்டை' என்று சொல்வது சரியானது. இது காரணம பற்றியே எண்ணெய்ச் சுரங்கங்கள் இருக்கும் இடங்களின் பேரிலேயே எதிரிகள் கண்ணாக இருக்கின்றனர். தோற்றுப்போய்ப் பின்வாங்கும்படி நேரும்போதும் எண்ணெய்ச் சுரங்க யந்திரசாலைகளை உடைத்து அழித்துவிட்ட பிறகுதான் பின்வாங்குகின்றனர்.



டாங்கி

இரண்டாவதாக, ராணுவப் பயிற்சி பெற்ற ஆடவர்கள் மாத்திரமே சண்டை செய்யக் கடமையுள்ளவர்கள் என்று நினைப்பது தவறாகும். ஏனெனில் யந்திர சக்தி இப்போது முன்னிலும் பதின்மடங்கு விருத்தியடைந்திருக்கிறது. ஆயுதங்களும் மற்ற யுத்தச் சாமான்களும் அபரிமிதமாய் வெகு சீக்கிரத்தில் உண்டாக்கப் படுகின்றன. உண்டுபண்ணப்பட்ட ஆயுதங்கள், குண்டுகள், பீரங்கிகள் முதலியவைகளையும் போர்க்களங்களுக்கு அதிசீக்கிரத்தில் கொண்டு போகச் சௌகரியங்கள் ஏற்படுத்தப்

பட்டிருக்கின்றன. இவ்விதம் கணக்கிடமுடியாத போர் உபகரணங்களை உண்டுபண்ணும் முக்கிய கடமையை ஸ்திரீகள் இப்போது வகித்துவருகிறார்கள். விமானத்தாக்குகள், குண்டு வீழ்ச்சி முதலிய விபத்துக்களிலிருந்து தேசத்தைக் காத்துவரும் பொறுப்பு ராணுவத் துருப்புகள் கையிலிருந்து அந்த அந்தப் பிரதேசப் பிரஜைகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதாவது சண்டையின் அவசர நிமித்தமாகவும் தேசப் பாதுகாப்புக்காகவும் ஒவ்வொரு பிரஜையும் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் தன் உடலையும், சொத்துக்களையும் சர்க்காருக்கு அர்ப்பணம் செய்யவேண்டிவருகிறது. இப்பாதுகாப்பு வேலையில் பங்கு எடுத்துக்கொள்பவரை உள்நாட்டுப் போர்ச் சேனை என்று சொல்லலாம். மேற்சொல்லிய காரணங்களினால் இப்போது நடைபெறும் யுத்தத்தை 'சமஸ்த குடிப் போர்' (Total War) என்று சொல்வது முற்றும் ஏற்றதாகும்.

மூன்றாவதாக, வெகுதூரத்திலிருந்து சத்துருக்களைக் கண்ட க்ஷணத்தில் கொல்லக்கூடிய துப்பாக்கிகளும், பீரங்கிகளும் உபயோகத்திற்கு வந்தது முதல் போர்க்களங்கள் தரை மட்டத்திற்கு மேல் அமைவதில்லை. ஆழமான கிடங்குகளை வெட்டி அவைகளுக்குள் கோட்டைகள் முதலியவைகளைக் கட்டிப் பட்டாளங்களை மறைத்துவைத்துப் போர் செய்துவந்தனர். இம்மாதிரியான போருக்குக் 'கிடங்குச் சண்டை' என்று பெயர். உதாரணமாக, பிரான்ஸ் தேசத்துக் கிழக்கு எல்லையின் நெடுநீளத்திற்குக் கிடங்குகளை வெட்டி அநேகத் தெருக்களையும் இருப்புப் பாதைகளையும், கோட்டைகளையும் இக்கிடங்குகளில் அமைத்துச் சத்துருக்கள் நெருங்கக்கூடாத மர்திரியில் போர்முனையைத் தயாரித்திருக்கின்றனர். இதற்கு 'மாஜிநோ லைன்' என்று பெயர். இதே மாதிரியே ஜர்மானியரும் தங்கள் எல்லைக்குள் கிடங்கு வரிசைகளை ஏற்படுத்தினார்கள்.

ஆனால் புதுமாதிரியான போர் முறைகள் கையாளப்பட்டது முதல் கிடங்குச் சண்டை ஏற்பாடுகள் பயனற்றவை ஆயின. ஏனெனில், எதிரியின் போர் முனையில் பலக்குறைவான இடத்தைத் தந்திரமாய் அறிந்துகொண்டு பெரிய சேனையைத் திரட்டி, 'மின்னலை'ப்போல் (Bleitzkrig) எதிரியின் சைனியத்தைத் தாக்கும்போது ஆங்காங்குக் கிடங்குவரிசைகள் உடைந்து துருப்புகள் கொஞ்சங் கொஞ்சமாக நெளிந்து கொடுக்க வேண்டிவருகிறது. இங்ஙனம் ஏற்படும் இடைவெளி வழியாகச் சத்துரு ராணுவப்படைகள் திருட்டுத்தனமாய் ஊடுருவிச் சென்று (Infiltration), நம் துருப்புகளுடன் கலந்து மெதுவாகச் சேனையின் பின்பக்கம் சிறிய கூட்டங் கூட்டமாகப் போய்ச் சேர்ந்து பாலங்களை உடைத்து, மரங்களை வெட்டிப் போட்டுப் பாதைகளில் தடை செய்து, மற்றும் பல கேடுகளையும் விளைவிக்கின்றனர்.

பின்னிருந்து எதிரி இப்படிச் சண்டைபோடுவது நமது சேனைக்குப் பெரிய அபாயமாக முடிகிறது. மேலும் துருப்புகளை விமானங்களில் ஏற்றிக்கொண்டு போய், பலூன்களின் உதவியால் எதிரியின் சைன்யத்தின் பின்பாகத்தில் இறங்கும்படி செய்துவருகின்றனர். இவைகளுக்குப் 'பாரா படைகள்' (Para Troops) என்று பெயர்.

மேற்சொல்லிய சூழ்ச்சிகள் வெற்றி பெறவேண்டுமானால் பட்டாளம், கம்பெனி, பிரிகேட், டிவிஷன் என்று அழைக்கப்பட்ட பழைய மாதிரி போர்ப்படை அணிகளுக்குப் பிராதான்யம் கொடுக்காமல், பத்துப் பன்னிரண்டு பேர்களையுடைய சிறிய கூட்-



ரேடியோ கேட்கும் வீரன்

டங்களாகப் படைகளைப் பிரித்துப் போர்க்களங்களின் வெவ்வேறு பாகங்களுக்கு அனுப்பவேண்டிவருகிறது (Group Warfare). இக்கூட்டங்களில் சேர்ந்த ஒவ்வொரு வீரனும் மேலதிகாரியின் உத்தரவை எதிர் பாராமல் சமயோசிதமாகப் புத்தியைச் செலுத்தி எதிரியைத் திக்குமுக்காடச் செய்யும் திறமை படைத்தவனாய் இருக்கவேண்டியது அவசியமாகிறது. படைத் தலைவர்களுக்கு, தனக்குக் கிடைத்த சமாசாரங்களை உடனே தெரிவிக்கும்படியாகவும், அவர்களுடைய கட்டளையை அப்போதைக்கப்போது பெறும்படியாகவும் இக்கூட்டத்தில் சேர்ந்த ஒவ்வொரு போர் வீரனுக்கும் ஒரு 'ரேடியோ' ஸெட்டு கொடுத்திருக்கின்றனர். இதைப் படத்தில் காணலாம்.

மேற்சொல்லிய முறைகளை உபயோகிப்பதனால் கிடங்குகள் பயனற்றுப் போய்விட்டன. முன் போல் படைகள் கிடங்குகளில் மறைந்து நின்றுகொண்டு சண்டைபோடுவதை விட்டுவிட்டுத் திறந்த வெளிகளில் 'டாங்கிகள்' என்று சொல்லப்படும் பீரங்கி வண்டிகளில் ஏறிக்கொண்டு பட்டாளவரிசையில் போர்புரிந்துவருகின்றனர். இது ஒரு பெரிய மாறுதல். டாங்கிப் படைகள்தாம் இப்போது நடக்கும் போருக்கு மிக அவசியமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான 'பான்ஸர் டாங்கிப் படைகள்' மேடுபள்ளத்தைச் சற்றும் சட்டை செய்யாமல் அதிவேகமாகச் சென்று எதிரி ஸ்தலங்களைத் தாக்குகின்றன. இங்ஙனம் டாங்கிகள் முன் சென்று எதிரிச் சேனைகளை முறியடித்த பிறகுதான் காலாட்படைகளும் மற்றவைகளும் முன் செல்லக்கூடும். ஆகவே இந்நாள் போரில் வெற்றி பெற வேண்டுமானால் விமானப் படை டாங்கிப் படை இவை இரண்டின் பலந்தான் அதிகமாக இருக்கவேண்டும்.

கடைசியாக, கடற் போரில் புதிய ஏற்பாடு ஒன்று கையாளப்பட்டுவருகிறது. யுத்த ஆரம்பத்தில் எதிரியின் யூ போட்டுகளால், அதாவது நீரில் மூழ்கிச் செல்லும் கப்பல்களினால் நேசக் கட்சிக் கப்பற்படைக்கும் வியாபாரக் கப்பல்களுக்கும் பெரும் விபத்துக்கள் நேரிட்டன. இவ்விபத்துக்களை விலக்க, தகுந்த உபாயத்தை நேசக்கட்சியார் கண்டுபிடித்துக் கையாண்டுவருகிறார்கள். இப்புதிய ஏற்பாட்டின்படி நேசக் கப்பல்கள் தன்னந்தனியாகப் போவதில்லை. பதினைந்து முதல் இருபதுவரையில் கப்பல்களை ஒன்றுகூட்டி அந்தக் கூட்டத்திற்கு முன்னிலும் இரண்டு பக்கங்களிலும் பீரங்கிகள் ஏற்றியுள்ள சண்டைக் கப்பல்களைப் பாதுகாப்புக்கு உடன் செல்லும்படி திட்டம் செய்திருக்கின்றனர். ஆகாயத்திலிருந்து கப்பல்களுக்கு அபாயம் நேரிடாமலிருக்க, நேசக் கட்சியாரின் விமானங்கள் அவரவர்களின் பிரதேசங்களிலுள்ள விமானத் தலைமை ஸ்தலங்களிலிருந்து கண்காணித்துவருகிறார்கள். இந்த ஏற்பாட்டிற்கு, 'கான்வாய்' (Convoy) என்று பெயர். இது உபயோகத்தில் வந்தது முதல் யூ போட்டுகளின் தொந்தரவு பாதிக்கு மேல் குறைந்துவிட்டது. சேனைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், தளவாட சாமான்களும் ஏராளமாக அட்லாண்டிக் மஹாசமுத்திர "சந்துகளின்" வழியாகப் பத்திரமாய் வந்து சேருகின்றன. மொத்தத்தில், முடிவாக, இப்புதிய முறைகள்தாம் நேசக் கட்சியாரின் வெற்றிகளுக்கு முக்கிய காரணங்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

---

"மனிதன் பொருளைவிடப் பொருளற்றதையே உயர்வானதாக மதிப்பிடுகிறான்; பொன்னைவிடப் பேச்சையே, உயிரைக் காட்டிலும் மானத்தையே, தன்னைவிடத் தன் பெயரையே பெரிதென்று எண்ணுகிறான்."

—ரவீந்திரநாத் டாகூர்.

---

# வாழ்க்கைத்தீ

மா. ரா. ராஜகோபாலன்

## 1

"ஏண்டா பயலே, இவ்வளவு அளகான கண்ணு ஒனக்குன்னு எங்கடா அந்த ஐயனாரு வைச்சிருந்தார்? என்னடா, குறும்புப்பார்வை பார்க்கறே. ஓங்கப்பனுக்குப் பெரியவனாப் போனாக் கஞ்சித்தண்ணி ஊத்துவயா? ஏ பொன்னுத்தா, பயலுக்கு என்ன பேரு வைக்கலாம்னு யோசனை?"

"புள்ளக்கி ஒரு பேரு வைக்கத் தெரியாமே அப்பன்னு வந்துட்டேயே! அவனைப் போய், கஞ்சித்தண்ணி ஊத்துவியான்னு கேக்கிறியே, உனக்கு வெக்கமா இல்லே? அவன் அரிசிச் சோறுல்ல சாப்பிடப்போறான்? மூல வூட்டுப் பேச்சியம்மா சாயங்காலம் வந்துச்சு. கொளந்தை கண்ணைப் பாத்து அப்படியே சொக்கிடுச்சு. 'கண்ணன்'னு பேரு வக்கச் சொல்லிருக்கு. எனக்கும் அதுதான் பிடிச்சிருக்கு."

"பயலுக்குச் சரியான பேருதான். இவனைப் படிக்கவச்சு 'துரை வேலை'க்கு (அவர்கள் பாஷையில் குமாஸ்தா வேலை) உடணும்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்குது. ஒரு எளுத்துத்தெரியாமெ என்னெப்போல எப்பப் பாத்தாலும் அவனை மாடு மாதிரி ஒளைக்கப் பண்ணிடக்கூடாது. இன்னிக்கு அவனைக் கஷ்டம் தெரியாமெ வளத்தம்னா நாளைக்கு அவன் துரை வேலை பண்ணி நமக்குக் கட்டாயம் 'சுடுசோறு' போடுவான்."

"எல்லாம் பொளச்சிக்கடந்து ஆவட்டும். இப்பப் புடிச்சு ஏன் கோட்டை கட்டறே?"

இது மில் கூலி பண்டாரத்திற்கும் அவன் மனைவி பொன்னுத்தாளுக்கும் நடந்த சம்பாஷணை. குழந்தை இல்லாமல் நாற்பது வயசுக்கு மேற்பட்டுப் பிறந்ததனால் புத்திரவாஞ்சை அவனை இப்படியெல்லாம் கோட்டை கட்டத் தூண்டிற்று.

கசக்கிப் பிழியும் மில்லில் தங்கள் குழந்தை கண்ணனின் எதிர்கால வெற்றிக்காகச் சிரமத்தைப் பாராமல் உழைக்கும் இரு ஆத்மாக்கள். மாலை வேளையில் வேலைக் கஷ்டத்தை மறக்க இவ்வளவு நாள் கள்ளுத்தண்ணீர் பண்டாரத்திற்கு உதவியது. ஆனால் பொன்னுத்தாளின் கட்டுப்பாட்டினால் அதை மறந்ததோடு அல்லாமல் குழந்தை கண்ணனின் குறுகுறுப்பான விளையாட்டில் தன் மனத்தைச் சந்துஷ்டிக்கச் செய்தான். கண்ணன் பிறந்து மூன்று வருஷங்கள் பறந்து விட்டன. ஊரெல்லாம் ஓடி விளையாடினான். பொன்னுத்தாளும் பண்டாரமும் வெற்றியின் கடைசிப் படியையும் தாண்டிவிட்டதாகவே எண்ணினார்கள்.

## 2

விதி யாரை விட்டது! விலைவாசிகள் கட்டுக்கு அடங்காமல் உயர்ந்து கொண்டே சென்றன. கூலிகளின் ரத்த வேர்வையால் இதைச் சமாளிக்க முடியவில்லை. முதலாளிகளின் இரும்புப் பெட்டிக்கு ஒரு பூட்டுதான். ஆனால் திறக்க முடியாத அவர்கள் இருதயத்திற்கு இரண்டு பூட்டு. கூலிகள் தங்கள் ஒரே ஆயுதமான வேலை நிறுத்தத்தைப் பிரயோகித்தனர்.

பண்டாரத்திற்கு இப்படியும் போக முடியவில்லை. அப்படியும் போக முடியவில்லை. ஒரு பக்கம் தன் கூட உழைக்கும் மனித பந்திரங்கள். மற்றொரு பக்கம் தன் கண்ணனின் எதிர்கால வாழ்க்கை. கடைசியில் தன் சகபாடிகள் பக்கம் சேர்ந்து வேலைக்குச் செல்லாமல் வீட்டில் தங்கினான்.

மில்லில் அன்று பெரிய களேபரம். அதிகாரவர்க்கம் தன் பூர்ண ஆட்சியைச் செலுத்திக்கொண்டிருந்தது. போலீஸாரின் தடியடிக்கு ஒரு தலையும் தப்பவில்லை. பண்டாரத்திற்கு இதையெல்லாம் பார்க்காமல் வீட்டில் இருப்புக் கொள்ளுமா? என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அவன் மனம் துடித்தது.

'தீ, தீ' என்ற கூக்குரல். பண்டாரம் நின்றுகொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அக்கினிதேவனும் வாயுபகவானும் ஓடிப்பிடித்துக் கொண்டிருந்தனர். மில்லில் பாதிக்கு மேல் அவர்கள் விளையாட்டுக் கருவியாகிவிட்டது. போலீஸார் அகப்பட்டவரை எல்லாம் கைது செய்தனர். பாவம், பண்டாரத்தின் தலையிலும் அது எழுதியிருந்தது.

பொன்னுத்தாளின் வயிறு அந்தப் பாழும் மில்லை விட அதிகமாகத்தான் எரிந்தது. ஆனால் அதை அணைக்க அங்கு யாரும் காத்துக் கிடக்கவில்லை.

பதினைந்து நாட்கள் சென்றன. கோர்ட்டில் எள் போட்டால் எள் விழாது. அவ்வளவு கூட்டம். ஏன்! தெரியாதா? மில்லிற்குத் தீ வைத்த கேஸிற்கு அன்று தீர்ப்புக் கூற வேண்டிய கட்டம். ஒவ்வொருவராய் விசாரிக்கப்பட்டார்கள்.

பண்டாரம் கூண்டில் நிறுத்தப்பட்டான். அட கடவுளே! இதென்ன அநியாயம்! அவன்தான் தீ வைப்பதற்குத் தலைமை வகித்தானும். சாட்சி ஒருவர் அல்ல, இருவர் அல்ல, ஐம்பது பேர்கள். பாவம்! ஏழைப்பண்டாரத்திற்குக் கண் இருக்கும் கடவுளே சாட்சி சொல்ல மாட்டாரே! கேவலம் இந்த மனிதர்களா அவனுக்குச் சாட்சி சொல்லி மீட்கப்போகிறார்கள்? போலீஸாரின் சாட்சிகளின் முன் அவன் வாய் திறக்க முடியவில்லை. அட்வகேட் ஜெனரலைப்போல் குறுக்கு விசாரணை செய்ய அவன் சட்டம் படித்திருக்கிறானா? எழுத்தறிவு இல்லாத ஓர் ஏழை மில் கூலிதானே அவன்?

நீதிபதி தம் தீர்ப்பை வாசித்தார். போலீசாருக்குத்தான் வெற்றி. பண்டாரத்திற்குப் பன்னிரண்டு வருஷக் கடுங்காவல்.

கோர்ட்டு வாசலில் பொன்னுத்தாள். ஜனங்கள் பேசிக்கொண்டு போவது அவள் காதில் விழவில்லை. போலீசார் இருவர் பண்டாரத்தைக் கைவிலங்குடன் அழைத்து வரும் போதுதான் அவள் தலை பக்கத்தில் இருக்கும் கல்லில் 'டணார்' என்று மோதியது. மனித உள்ளத்தை அறியும் சக்தி மனிதருக்கே இல்லாத பொழுது கேவலம் உணர்ச்சி அற்ற அந்தக் கல்லிற்கா பொன்னுத்தாளின் இருதயக் கோட்டை இடிந்தது தெரியப் போகிறது!

"பொன்னுத்தா, கொளந்தை கண்ணுக்காகவாவது தைரியமாச் சகிச்சுக்கோ. கடவுளுக்குக் கண் இருக்கு. ஆனா, பாக்காமே இருக்காரு. வர்ற கஷ்டத்தை அநுபவிச்சுத்தானே ஆவ



னும்? அத பாரு, கொளந்தை விளை யாடறுன். அவனைக் கைவிட்டுடாதே. கூளோ, கஞ்சியோ கொடுத்து முன் னுக்குக் கொண்டாந்துடு. அப்பனைப் பத்தி அது கிட்டச் சொல்லாதே. பொளச்சுக் கடந்தா, வந்து பாக்க றேன். அவன் பெரியவனுப் போனு நம் கஷ்டமெல்லாம் விடிஞ்சிடும்'' என்று கண்ணில் பொங்கிவரும் நீரை அடக்கிக்கொண்டே பண்டாரம் மொழிந்தான்.

பாழும் கிணற்றில் விழுந்து சாகும் மனிதனுக்கு அறுந்த வேர் ஆறுதலை அளித்ததுபோல் அவனுக்குக் கண்ண னிடம் ஓர் அசைக்க முடியாத நம் பிக்கை.

போலீஸார் எங்கோ கண்காணுச் சீமைக்குப் பண்டாரத்தைக் கொண்டு சென்றுவிட்டனர். பொன்னுத்தாள் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

## 3

பதினெரு வருஷங்கள் ஆய்விட்டன. பொன்னுத்தாள் கவலையினுலேயே கிழ வியாய்ப் போய்விட்டாள். பண்டாரத் தின் வரவை எதிர்பார்த்துப் பார்த்து அவள் பார்வைகூட மங்க ஆரம்பித் தது. அன்ருடம், கஞ்சியைக் குடித்தோ, பட்டினி கிடந்தோ கண் ணனை எட்டாவதுவரை படிக்கவைத்து விட்டாள். பண்டாரத்தைப்பற்றி அவ னிடம் அவள் ஒன்றும் சொன்னதில்லை. பண்டாரத்தின் ஆசையைப் பூர்த்தி செய்யத் தன் மகனை இன்னும் மூன்று வகுப்பு படிக்கவைக்கவேண்டும் என் பது அவள் எண்ணம். ஆனுல் உழைப் பினுல் இரும்பு யந்திரங்களே சக் தியை இழக்கும்போது அவள் எம்மாத் திரம்? இருந்ததையெல்லாம் முன்பே விற்றுக் கண்ணன் படிப்புக்கு அர்ப்ப ணம் செய்துவிட்டாள்.

கண்ணன் தன் நிலையை உணர ஆரம் பித்தான். தாயை இனியும் உழைக்க விட்டால் பிறகு தான் இந்த உலகில் ஆதரவற்றுப்போக வேண்டியதுதான் என்று கண்டுகொண்டான். பொன் னுத்தாளிடம் மெதுவாகத் தான் வேலை சம்பாதிக்கப் போவதாகத் தெரி வித்தான். அவள் மனம் துடித்தது. அதைச் சாண் அகல வயிறு எப்படி அறியும்? கண்ணன் வேலைக்குப் புறப் பட்டான்.

அவன் பார்க்காத இடமோ ஏருத படியோ இல்லை என்றே கூறிவிட லாம். எங்கே போனுலும் பரிகாசமும் ஏச்சுக்காட்டுமே அவனை வரவேற் றன. ஒரு நாள் ஆயிற்று. இரண்டு நாள் ஆயின. இன்னும் எத்தனையோ நாட்களும் ஆயின. அவற்றில் முக்கால் வாசி நாள் அவன் பட்டினி.

ஆலையில் போயாவது ஏதாவது வேலைகேட்போம் என்று அவன் மனத் தில் ஓர் எண்ணம். முதலாளியைப் போய்ப் பார்த்தான்.

"நீ யார்ரா?"

"என் பெயர் கண்ணன் ஸார்!"

"அது சர்தாண்டா, ஓங்கப்பன் பேரு?"

"பண்டாரம்னு சொல்லுவாங்க."

"ஓ! பண்டாரம் மவனு நீ! சீ, வெக்கமில்லெ, வேலை கேக்க வந்துட் டியே! வெளியே போடா."

கடைசி வழி பிச்சை எடுப்பதுதான் என்று முடிவு செய்தான். தாய்க்குத் தெரிந்தால் அவள் உள்ளம் உருகி விடுவாள் என்பது அவனுக்குத் தெரி யும். ஆகையால் அவளுக்குத் தெரியா மல் இது நடந்தது. எங்கே போனுல் என்ன? எல்லாம் ஒரே மண்தானே! பெரிய ஏமாற்றம். செல்லமாய் வளர்க் கப்பட்ட அவன் இவ்வளவு சகித்துக் கொண்டதே ஆச்சர்யம்.

தாய் தன்னை வேண்டிக்கொண்டு போகச்சொன்ன 'ஓட்டுக்கொள ஐய னுரி'ன் மேல் அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. அதை உடைத்துவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பது என்று கிளம்பினுன். அங்கே போனதும் என்ன நினைத்தானே என்னவோ! கள்ளிச்செடிகளை ஒன்று விடாமல் ஒடித்து அவற்றின் பாலை ஒரு கொட்டாங்கச்சியில் ஏந்திக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். அவன் வாய்மட்டும் ஐயனுர் வழி காட்டி விட்டதாக முணுமுணுத்தது.

"அம்மா, முடிவிலே பிச்சை எடுத் தும் பாத்துட்டேன். 'ஏண்டா கண்ணை யும் கையையும் கௌங்குமாதிரி வச்சுக் கிட்டுப் பிச்சை எடுக்க வந்துட்டே?' என்கிருங்க. ஐயனுரு நமக்கு வழிகாட் டிட்டாரு'' என்ருன்.

பொன்னுத்தாள் பலஹீனத்தால் படுத்திருந்தாள். அவன் சொன்னதைக் கேட்டு அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில்தான் எவ்வளவு கலகலப்பு!

உள்ளே முனகல் சப்தம் கேட்டது. பொன்னுத்தாளுக்குப் பயமாய்விட்டது. பசி மயக்கம் என்று தூக்கிப் பிடித்தாள் கண்ணனை. அவன் முகத்தைப் பார்த்ததும் அப்படியே நிலை குலைந்துவிட்டாள். அவன் கண்கள் கள்ளிப்பாலின் விஷம் தாங்காமல் ரத்தம் சொரிந்தன. இந்த உலகத்தில் நடக்கும் அநியாயங்களை அவன் இனியும் பார்க்க விரும்பாததே அதற்குக் காரணம்.

"உன் கண்ணைத்தானேடா ஊன்றுகோலாய் நம்பியிருந்தேன். இப்படி மோசம் பண்ணிவிட்டாயே!" என்று பொன்னுத்தாள் கதறினாள்.

"அம்மா, அழாதே. என் கண்கள் தான் நம்ம ரெண்டுபேருக்கும் இனிமே ஊன்றுகோல். என் கண்களில் குளி விளுந்தாலும், பெத்த உன் வயத்திலே குளி விளறத்தை என்னால் பாக்க முடியலே. இத்தனை நாளா இந்தக் கண்கள் இருந்து என்ன உபயோகமா இருந்தது? இனிமே மூடி இருக்கிற அவற்றை நாலு பேரிட்டக் காட்டி எங்கம்மாவைக் காப்பாத்தணும். கண்ணற்ற கபோதிக்குப் பிச்சை போடுங்க என்றால் அப்பொழுதாவது அவர்கள் மனம் இரங்காதா? என் கண் போனாப் பரவாயில்லை. உன் வயிறு காயப்படாது" என்று அவள் கண்ணீரைத் துடைத்தான் கண்ணன்.

கண்கள் இருக்கும்போது மனிதர் பார்ப்பதில்லை; ஆனால் கண்கள் போன பிறகு கண்ணன் உலகத்தை நன்றாகப் பார்க்கக் கற்றுக்கொண்டான். இது தான் அந்தக் கல்லில் இருந்த ஐயனார் அவனுக்குக் காட்டிய வழி.

## 4

பன்னிரண்டு வருஷங்கள் முடிந்ததும் பண்டாரம் விடுதலை அடைந்தான். ஜெயிலுக்குப் போய் வந்த ஆட்கள் நிலைமை தெரிந்ததுதானே? ஆகையால் அவனை நாம் அடையாளம் கண்டுகொள்ளாததில் ஆச்சரியம் இல்லை.

பண்டாரம் ஊருக்குக் கிளம்பினான். எதற்கு என்று நினைக்கிறீர்கள்? கண்ணன் 'துரை' வேலையில் இருப்பதைப் பார்க்கத்தான். பொன்னுத்தாள் 'சுடு சோறு' தின்றுகொண்டிருப்பாள் என்று அவன் நிச்சயமாய் நம்பினான். ஊருக்கும் வந்துவிட்டான். எங்கெல்லாமோ சுற்றி அலைந்து தன் மகனையும் மனைவியையும் தேடியாய் விட்டது. ஒருகால் செத்து மடிந்து விட்டார்களோ என்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றிற்று. மறு கணம், 'சே, சே, கண்ணன் கௌரவமான இடத்தில் தன் வேலைக்கு ஏற்றபடி தன் தாயுடன் குடியிருப்பான்' என்று தன் மனத்தைத் தேற்றிக்கொண்டான். வழியில் இருக்கும் பிச்சைக்காரர்கள் அவன் கண்களில் படவில்லை. அவர்களைப்பற்றி அவன் ஏன் நினைக்கவேண்டும்? மகன் வீட்டில் 'சுடு சோறு'தானே அவன் வேண்டுவது?

"ஐயா, கண்ணில்லாத கபோதிப் பிள்ளைக்கு ஒரு காலணாக் கொடுங்க!" பண்டாரம் திரும்பினான். பின்னால் ஒரு பெண்பிள்ளை. இல்லை! இல்லை! கிழவி ஒருத்தி பதினைந்து வயசுக் குருட்டுப் பையனுடன் கையேந்திக் கொண்டிருந்தாள்.

பையில் பீடிக்காக வைத்திருந்த கடைசிக் காலணாவை எடுத்து அவள் கையில் வைத்தான். கிழவி அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

திடீரென்று, "நீ பண்டாரந் தானே?" என்றாள் கிழவி.

"ஆமாம், அதெப்பத்தி உனக்கு என்ன?"

"இவனைத் தெரியலியா?"

"இல்லியே!"

"கண்ணன்."

"சீ, பேமானிக்களுதே, பிச்சக்காரப் பெர்ணமே, வாய்த் துடுக்கைப் பாரு. வந்துட்டா அங்கிருந்து. அப்பால்போ, மூதேவி. எம்பேரெத்தெரிஞ்சுக்கிட்டு ஏமாத்தப் பாக்கிறியே! என் கண்ணன் எங்கே! இந்தக் குருட்டுப்பயல் எங்கே! என் கண்ணு, துரைவேலை செஞ்சுக்கிட்டு அவன் ஆயி பொன்னுத்தாளுக்குச் 'சுடு சோறு'ல்ல போட்டுக்கிட்டிருப்பான்? நான்தான் கொளந்தையெப் பாக்க முடியலே" என்று கூறிவிட்டு, நீள நடந்தான்.

"ஐயோ, கண்ணனுக்குத்தான் கண் இல்லாமல் போச்சுன்னு கடவுளுக்குமா கண்ணில்லாமெப் போகணும்!" என்று அவள் கண்ணீர் வடித்தாள்.

பண்டாரத்தின் நம்பிக்கையைக் கிழவியின் கண்ணீரால் அழிக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள்.

# கம்பர் - ஒரு வழக்கறிஞர்

என். சுப்பராமன்

ஆங்கிலக் கவிச்சக்ரவர்த்தியான ஷேக்ஸ்பியரைப்பற்றிக் குவிந்திருக்கும் ஆராய்ச்சிகள் பல. கவியரசரின் சிறப்பில் ஈடுபட்டு மயங்கிப் பல்வேறு குயுக்தியான வழிகளில் ஆராய்ச்சி புகுந்திருப்பதாகச் சிலர் குறை கூறுவதுண்டு. வைத்தியம், சிற்பம், பௌதிகம் முதலிய இன்னும்பல சாஸ்திரங்களிலும் ஷேக்ஸ்பியர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று எண்ணி அவ்வித முறைகளில் நாடகங்களின் ஆராய்ச்சியில் புகுந்திருப்பவர்களைப் பற்றிச் சிலர் இங்ஙனம் குறை கூறுவதிலும் சிறிதளவு உண்மையுண்டு.

தமிழ்க் கவிச்சக்கரவர்த்தியைப் பற்றிய ஆராய்ச்சியில் புதுவிழிப்பும் புத்துணர்வும் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், மேற்கூறிய சில ஆங்கில ஆராய்ச்சியாளரைப் போல் நானும் சிந்தனையில் ஆழ்ந்தது வியப்பல்லவே. ஷேக்ஸ்பியரைப்பற்றி உள்ள ஆராய்ச்சி எவ்விதம் இருப்பினும், கம்பரைப் பொறுத்தமட்டில் இச்சிறு ஆராய்ச்சி குறை கூறும் ரகத்தைச் சேர்ந்ததல்ல என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம்.

'நியாயவாதி' அல்லது 'வழக்கறிஞ'னுக்கு உள்ள முக்கிய அம்சங்கள் இரண்டு. முதலாவது, நியாயத்தில் அல்லது சட்டத்தில் தேர்ச்சி. இரண்டாவது, வாதிக்கும் திறன்—அதாவது ஆங்கிலத்தில் 'Advocacy' என்று கூறப்படுவது. இரண்டாவது அம்சத்தையே முக்கியமாகக் கொண்டு இச்சிறு ஆராய்ச்சி தரப்பட்டது.

'Advocacy' அல்லது 'நியாயவாதம்' என்பது ஒரு கலை என்றே சொல்ல வேண்டும். நம் நாட்டிலும் மேல் நாடுகளிலும் சிறந்த வழக்கறிஞர்களின் வாதத்தைக் கேட்டவர்கள் அப்படியே அபிப்பிராயப்படுகிறார்கள். சுருக்கமாகக் கூறுமிடத்து, தன் கக்ஷியின் சார்பில் உள்ள கேஸையும், அதிலுள்ள நியாயத்தையும் எடுத்துச் சொல்லும்போது சட்ட விரோதமின்றியும், கேஸில் இருதிறத்தாரின் சார்பிலுள்ள உண்மைகளையும் யதார்த்தங்களையும் ஒளியாது உரைத்தும், தன் பாகத்தில்தான் ஸத்தியமும் நியாயமும் இருக்கின்றன என்று கேட்போரும் மன்றத் தலைவரும் நம்பி ஆமோதிக்கும்படி வசீகரத்துடன் எடுத்துச் சொல்வதே நியாயவாதத்தைக் கலை ஸ்தானத்தில் வைக்கும் தனிச்சிறப்பாகும்.

இத்தகைய வாதத்தில் கம்பர் அசாதாரணமான தேர்ச்சி பெற்றவரென்று கம்பராமாயணத்திலிருந்து தென்படுகிறது. கம்பரும் தம் காலத்தில் நீதி மன்றங்களுக்குச் சென்று சிறந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு அநுபவித்ததுமல்லாமல் சட்டத்தின் சில நுட்பங்களையுங் கூட அறிந்திருக்கக்கூடுமென்றும் தெரிகிறது.

உதாரணமாக, வாலிவதைப் படலத்தை எடுத்துக் கொள்வோம். அதைச் சுற்றித் தொன்றுதொட்டு நடந்துவரும் 'தர்மாதர்ம' வழக்கைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. கம்பரின் வாலி இராமபிரானை நோக்கிக் கூறும் கவிதைக் கொத்தானது சிறந்த நியாய வாதத்தின் சிகரம் என்றே சொல்லவேண்டும். நியாயம், தர்மம், மனச்சாட்சி (Justice, Equity and Good conscience) என்று முப்பிரிவுகளாகப் பிரித்திருக்கும் நமது தற்காலச் சட்ட முறையைத் தழுவியே ஒவ்வோர் ஆணி வாதத்தையும் எடுத்துச் சொல்கிறான் வாலி.

"வாய்மையும் மரபுங் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ
பரதன்முன் தோன்றினாயே

தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தாற் றீங்கன் ருமோ
தாய்மையு மன்றி நட்பும்
தருமமும் தழுவி நின்ருய்"

என்று கூறும் முதற் கவியானது நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாதம்.

"குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?"

என்பது சட்ட பூர்வமான வாதம்.

"இரக்கமெங் குகுத்தாய் என்பால்
எப்பிழை கண்டா யப்பா?"

என்பது தர்மநியாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாதம். இந்த வாதம் அமைந்திருக்கும் சொற்களின் வசீகரந்தான் என்னே! இன்னும்,

"இறைவனீ யென்னைச் செய்த
தீதெனி லிலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று
முனிதியோ முனிவி லாதாய்"

என்ற வரிகள் நல்ல மனச்சாட்சியைச் சார்ந்த வாதம்.

இன்னும் வழக்கறிஞர்கள் எதிர்க் கட்சிகளின் பாகத்தை எடுத்துரைக்கும்போது கேஸில் எதிர்க் கட்சியின் சில செய்கைகளின் அடிப்படையான காரணங்களை ஊகத்தால் எடுத்துரைத்துத் தம் கேஸைப் பலப்படுத்திக் கொள்வார்கள். சிறந்த வக்கீல்களின் வாதத்தைக் கேட்டவர்களுக்கு இது நன்ருகத் தெரியும். அத்தகைய வாதத்தைக் கம்பரின் வாலி கையாளுகிருன்.

"ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்த்
திகைத்தனை போலும் செய்கை!"

இந்தக் கவித்தொகுதியை வாசிக்க வாசிக்க, அதன் வாதச் சுவையை நன்கு அநுபவிக்கலாம். எவ்வளவு அழகான வாதச்சிறப்பு! எவ்வளவு வசீகர நடை! எத்தனை அழுத்தம்! ஒவ்வொரு கவியும் ஒவ்வொரு நுட்பமானதும் ஆணித்தரமானதுமான சங்கதியை எடுத்துச் சொல்கிறது. இந்த வாதத்தைக் கேட்டபின் இந்த 'வாலி - ராமன்' கேஸுக்கு எப்படித் தீர்ப்புச் சொல்ல முடியும்? இன்று வரையிலும் பின்னத் தீர்ப்புகளாகவே இருந்துவருவதில் வியப்பு என்ன இருக்கிறது?

கம்பரின் நியாய வாதத்திறனைத் தெளிவுபட உலகத்தாருக்கு உணர்த்த வந்தவன் இராவணனே என்று தோன்றுகிறது. இராவணனே பெரிய நியாயவாதி; மகாபுத்திசாலி. அதிலும் பலக்குறைவான கேஸை எடுத்து வாதிப்பதில் சிறந்த வழக்கறிஞர்களில் இராவணனைவிடச் சிறந்தவர் இல்லை என்றே சொல்லலாம். அத்தகைய வழக்கறிஞனை இராவணன் கம்பரது தமிழில் சிக்கிக் கொண்டுவிட்டால் வேறு என்ன வேண்டியிருக்கிறது? சுந்தரகாண்டம் "நிந்தனைப் படல"த்தில் இராமனைத் தான் கொல்லாததன் காரணத்தை எடுத்துக் கூறுகிருன் சீதைக்கு:

"ஒன்றுகே ளுரைக்க நிற்கோ
ருயிரென வுரியோன் றன்னைக்
கொன்றுகோ விழைத்தா னீநின்
னுயிர்விடிற் கூற்றங் கூடும்
என்றனு ருயிரு நீங்கு
மென்பதை யியைய வெண்ணி
அன்று நான் வஞ்சஞ் செய்த
தாரெனக் கமரி னேர்வார்."

இது ஒரு மறுக்கமுடியாத வாதமல்லவா? வழக்கறிஞனின் எவ்வளவு சமயோசிதமான வாதம்!

இன்னும் யுத்தகாண்டம் மாயா சனகப் படலத்தில் சீதை தன்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தால் அது தவருகாதென்றும் கூறி உடன் தானே சட்ட ரிபோர்ட்டுகளைப் புரட்டி, மிகவும் பொருத்தமான மேற்கோள் (Authority) எடுத்து எவ்வளவு அழகாக வாசித்துவிடுகிருன்!

"அந்தரம் உணரின் மேனள்
அகலிகை என்பாள் காதல்
இந்திரன் உரத்தை நல்கி
யெய்தினள் இழுக்குற் ருளோ?"

நியாய வாதத்தில் மேற்கோள்களின் அவசியத்தைக்கம்பர் நன்குணர்ந்திருக்கவேண்டும்.

அடுத்தபடியாக 'இராவண - விபீஷண' வாதத்தைப் பற்றிப் பார்ப்போம். இதுவும் ஒரு வாதச் சிறப்பின் சிகரம் என்று சொல்லலாம். சென்ற பங்குனி இதழில் ஸ்ரீமான் சேதுப் பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டிய படி,

"வரங்கொள் வாலிபால் தோற்றனன்
மற்றும்வே றுள்ள
குரங்கெ லாம்எனை வெல்லுமென்று
எங்ஙனம் கோடி?"

"குரங்கு வாலி என்னை வெல்ல வில்லை; வரம் பெற்ற வாலி வென்ருன்" என்று சொல்லும்பொழுது வழக்கறிஞர்கள் சட்டத்தின் பிரிவுகளைச் சமயத்திற்கு ஏற்றவாறு பதம் பிரித்துப் பொருள் கூறும் ஆற்றலைக் கண்டு வியக்கிறேமல்லவா?

'இந்திரசித்து - இராவண' சம்வாதத்திலும் இதே வாதச் சிறப்பைக் காண்கிறேம்.

" வென்றில னென்ற போதும்
வேதமுள் ளளவும் யானும்
நின்றுள னன்றே மற்றவ்
விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்துந்
தவிருமோ பொதுமைத் தன்றே
இன்றுளார் நாளை மாள்வார்
புகழுக்கு மிறுதி யுண்டோ?"

இந்த வாதத்தின் தன்மையும் சுவையும் சிறந்த வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டு அநுபவித்தவர்கள்தாம் உணரமுடியும். இந்த வாதமானது உடனே இந்திரஜித்தின் கேஸைத் தோற்கடித்துவிடுகிறது அல்லவா? சில வழக்கறிஞர்கள் சில சந்தர்ப்பங்களில் அதிகமாகப் பேசாமல் குயுக்தியான ஒரே ஒரு வாதத்தில் கேஸை ஜயித்து விடுவது போல அல்லவா இருக்கிறது?

விபீஷணனைக் கூட்டிக்கொள்ளலாமா கூடாதா என்ற பிரச்னையைப் பற்றிச் 'சொல்லின் செல்வனு'கிய அநுமான், யுத்தகாண்டத்தில் கூறியிருக்கும் கவிகளில் சொற்றிறமை, நுட்பமான அநுமானம், அநுபவ முதிர்ச்சி ததும்பும் காரணங்கள், தர்க்கப் பண்பு, உண்மையை ஊன்றி உணரும் சக்தி முதலிய வாதச் சிறப்புக்களும் நியாயத்தைச் சீர்தூக்கிப் பகுத்தறியும் நீதிபதியின் மனப்பாங்கும் மிளிர்ந்திருப்பதைப் பார்க்கிறேம்.

சட்டத்திற்கு அஸ்திவாரமாக இருக்கும் 'ருஜு' என்ற விஷயத்தைப் பற்றியும் கம்பருக்கு வழக்கறிஞன் போலுள்ள பரிசயம் இருந்திருக்க வேண்டும். நேர்முறையான ருஜுவே (Direct Evidence) முக்கியமானதென்று அறிந்தவர் ஆதலின்,

" கண்டனன் கற்பினுக்
கணியைக் கண்களால் "

என்றுர். இன்னும் தற்காலக் கிரிமினல் சட்டத்தில் முக்கியமான "சந்தர்ப்ப ருஜு" (Circumstantial Evidence) வைப்பற்றியும் அதன் உண்மையை உள்ளபடி எடுத்துக் காட்டும் தன்மையைப் பற்றியும் கம்பர் நுட்பமாக அறிந்திருந்தார். தான் இலங்கையில் இயற்றிய வீரச் செயல்களைக் கூருதிருந்த அநுமானைப் பார்த்து வானர நண்பர்கள் எல்லாரும்,

" பொருதமை புண்ணே சொல்ல
வென்றமை போந்த தன்மை
உரைசெய ஊர்தீ யிட்ட
தோங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர வுணர்ந்தோம்......"

என்று சொல்வதில் சந்தர்ப்ப ருஜுவின் உண்மைத் தத்துவத்தைக் கம்பர் நன்கு அறிந்திருக்கவேண்டும் என்று விளங்குகிறதல்லவா?

---

" புஸ்தகங்கள் என் மனசில் அனந்தகோடி புதிய உருவங்களை, உணர்ச்சிகளை, சிற்சில சமயம் ஆனந்தத்தை, ஆனுல் பெரும்பான்மையாக ஆழ்ந்த, ஆழங் காண முடியாத முடிவற்ற சோகத்தை உண்டாக்கி என்னைத் துயரத்தில் ஆழ்த்தின. 'வெர்டரின் துயரங்கள்' சாதாரணக் கதைதான். ஆனுல் அதில் பலவிதமான எண்ணக் கலவைகள். இதுவரை தெளிவுபடாத பல விவகாரங்களில் புதிய அர்த்த புஷ்டிகள் முதலியன பொதிந்து கிடந்தன. சாதாரண வாழ்க்கை; ஆனுல் சிகரம் தாவும் சிந்தனைகள், உணர்ச்சிகள்!"

—மேரி ஷெல்லி.

# ?

'ஸேஞ'

இமாலயச் சாரலில் தேவதாரு வனம் ஒன்று. அதன் நடுவே ஒரு சிறு வெளியில் ஏழு பர்ணசாலைகள். சூரியோதய வேளையாகையால் ஓமப் புகையும் வேத கோஷமும் நிரம்பி இருந்தது அவ்விடம்.

வெயில் ஏறியது. ரிஷிபுத்திரர்கள் ஒவ்வொருவராக ஆசிரமப் பசு மாடு கன்றுகளை ஓட்டிக்கொண்டு சமித்துச் சேகரிக்கக் காட்டுப்பக்கம் சென்றுர்கள். குடில்களில் ரிஷிபத்தினிகள் கிருக காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் முனிவர்கள் அங்கே இல்லை.

தொலை தூரத்தில் மேடான ஓர் இடத்தில் ஒரு பெரிய விருக்ஷத்தின் நிழலில் அமர்ந்து அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கிரஸர் என்ற ஸப்த ரிஷிகளும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னல் பனி தோய்ந்து வெண்மையாகத் திகழ்ந்தது இமயசிகரம். அதற்கு மேலே வானவெளியின் கருநீலம்.

வசிஷ்டர், "அண்டசராசரத்தில் நாம் எந்த மூலை?" என்று பேச்சை எடுத்தார்.

"அவ்வளவு தூரம் போவானேன்? இந்தப் பனிமலையின் கீழ் இருக்கும் போதே நாம் அணுமாத்திரமாய்க் காண்கிறேமே!" என்றுர் ஆங்கிரஸர்.

எல்லோரும் சிகரத்தை உற்று நோக்கினுர்கள். மெய் சிலிர்த்தது. பரமசிவன் உறையும் பர்வதம் அல்லவா? கரங்குவித்து நின்றனர் சிறிது நேரம்.

மீண்டும் தத்துவ விசாரணையில் இறங்கினுர் வசிஷ்டர். "இந்தப் பிரபஞ்சத்தில் நிலையான பொருள் எது?" என்பதுதான் விஷயம்.

அத்திரி: சூரியனே; அவனுல்தானே எல்லா ஜீவராசிகளும் வாழ்கின்றன.

குத்ஸர்: இல்லை. சந்திரன்தான். ஓவுதிகளுக்கு அரசனல்லவா அவன்? உடல் நலங் கெடாதிருக்க அவை உதவுகின்றன; அவனுக்கு அமிருத கிரணன் என்று பின் ஏன் பெயர் வந்தது?

கௌதமர்: ஊஹூம். அதெல்லாம் இல்லை. வாயுதான் அழியாத பொருள். காற்று இல்லாவிட்டால் எப்படி நாம் பிழைத்திருப்போம்?

ஆங்கிரஸர்: இல்லவே இல்லை. இதோ பனிவரையில் வீற்றிருக்கும் மகாதேவனே நிலையானவன். அவன் பாதத்தைத்தானே தினமும் வணங்குகிறேம்?

காசியபர்: சிருஷ்டி கர்த்தா இருப்பதால்தானே நாம் இப்படியெல்லாம் பேச முடிகிறது? அப்பேர்ப்பட்ட பிரமனை மறந்துவிட்டீர்களே!

பிருகு: அப்படிச்சொன்னல், அந்தப் பரந்தாமன் வயிற்றில் உதித்தவன் தானே பிரம்மதேவன்; மகாவிஷ்ணு தான் அழியாப் பரம்பொருள். இதை நான் நேரில் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறேன்.

மற்ற ரிஷிகள்: எப்படி?

பிருகு: ஒரு சமயம் பிரம்மாவிடம் போயிருந்தேன். நான் வந்திருப்பதைக் கூடக் கவனியாமல் ஸரஸ்வதியோடு ஸரஸமாடிக்கொண்டிருந்தான், ஐயா!

முனிவர்கள்: அப்புறம்?

பிருகு: அப்புறமா! எனக்குச் சீ என்று ஆகிவிட்டது. கைலாசத்துக்குப் போனேன். அங்கே நான் கண்ட காட்சி!—அப்பாடா!

முனிவர்கள்: என்ன ஸ்வாமி?

பிருகு: என்னைப் பார்க்கக்கூடச் சக்தி இல்லாமல் சாம்பற் குவியலில் புரண்டுகொண்டிருந்தான் பரமசிவன். கண் எங்கேயோ செருகிக்கொண்டு போயிருந்தது. இந்த அலங்கோலத்தைக் காணச் சகியாமல் வைகுண்டம் போனேன்.

முனிவர்கள்: அங்கேயும் அதே அழகுதானு?

பிருகு: கேளுங்கள்: பள்ளிகொண்டிருந்தான் ரங்கநாதன். லக்ஷ்மி தேவி காலைப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

இந்தச் சிருங்கார்க் காட்சியைப் பார்த்ததும் எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. ஓங்கித் தரையில் ஓர் உதை விட்டேன். தூங்கிக்கொண்டிருந்தவன் எப்படியோ தெரிந்துகொண்டு சட்டென்று எழுந்து என் கால் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். நான் திடுக்கிட்டுப்போனேன். அதோடு விட்டானா? "அபசாரம்! அபசாரம்!" என்று தன் தேவி எதிரிலேயே மன்னிப்புக் கேட்டான். எனக்கு அவமானமாகிவிட்டது. நான் முதலில் கண்டது வெறும் மாயை என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது. இதற்கு மேல் என்ன அத்தாட்சி வேண்டும், அவன்தான் நிலையானவன் என்பதற்கு?

வசிஷ்டர் சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

"ஏன் தாங்கள் மட்டும் ஒன்றுமே சொல்லவில்லை?" என்று கேட்டார் பிருகு.

"நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இன்னும் அவ்வளவு பரிபக்குவமாகவில்லை என் மனம்" என்று நிதானமாக மொழிந்தார் வசிஷ்டர்.

மற்றவர்கள் இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். 'என்னடா இது! இவருக்கே இன்னும் விளங்காதிருக்கும்போது நாம் ஏதோ வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிக்கொட்டினோமே!' என்று லஜ்ஜையும் வேறு அவர்களுக்கு.

அன்று பகல் அதோடு விவாதம் நின்றது. இரவு வானம் துல்லியமாக விளங்கியது; அமாவாசையானதால் மற்ற நாட்களை விடப் பளிச்சென மின்னின தாரகைகள். ஆசிரம வாயிலில் ஸப்த ரிஷிகளும் மறுபடியும் கூடினார்கள். மத்தியான்னம் நடந்த ஸம்பாஷணையில் மனம் ஒன்றியிருந்தார்கள். அவர்கள் சந்தேகம் இன்னும் தெளிந்தபாடில்லை. எல்லோரும் மௌனமாக வானத்தை நோக்கியபடி இருந்தனர்.

திடீரென்று வசிஷ்டர், "அதோ பாருங்கள்" என்றார். வடதிசையிலே அவர் சுட்டிய இடத்தை மற்ற ரிஷிகள் கவனித்தார்கள். சாமான்யமான ஒளியுடைய ஒரு நக்ஷத்திரம் தெரிந்தது. ஒன்றும் புரியாமல், "அதில் என்ன விசேஷம்?" என்றார்கள்.

"அதை முன்னால் பார்த்திருக்கிறீர்களா?" என்று வினவினார் வசிஷ்டர்.

சிலர், "ஞாபகம் இல்லையே!" என்றார்கள்; சிலர், "பார்த்திருக்கிறாற் போல்தான் தோன்றுகிறது" என்றனர்.

வசிஷ்டர், "சரி. இன்று அதை இராத்திரி முழுதும் கவனிக்கலாம்" என்றார்.

அப்படியே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நிலை பெயராமல் அதே இடத்தில் ஒளிர்ந்தது அந்த விண்மீன். ரிஷிகளின் ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது.

அப்போது வீணையின் இன்னிசை கேட்டது; சிரித்த முகத்துடன் யாழேந்திய கரத்தினராய் நாரத முனிவர் தோன்றினார்.

"வர வேண்டும், வர வேண்டும். ஏது இவ்வளவு தூரம்?" என்று ஸப்த ரிஷிகளும் அவரை வரவேற்றார்கள்.

"துருவலோகத்துக்குப் போய்த் திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் உங்கள் குரல் கேட்டது. உங்களையும் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்."

"அது எங்கே ஸ்வாமி இருக்கிறது? இது வரையில் கேள்விப்பட்டதே இல்லையே" என்று வியப்புடன் கேட்டார்கள் முனிவர்கள் எழுபேரும்.

"அதோ தெரிகிறதே; அதுதான்" என்று வசிஷ்டர் சுட்டிய நக்ஷத்திரத்தையே நாரதரும் காட்டினார்.

"இப்போது அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம், ஸ்வாமி" என்றார்கள் மற்ற முனிவர்கள்.

"அங்கேதான் துருவன் இருக்கிறான்—ஓ! உங்களுக்குத்தான் தெரியாது என்றீர்களே; சொல்லுகிறேன் விஷயத்தை: உத்தானபாதன் என்று ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு இரண்டு ராணிகள். மூத்தவள் பெயர் சுநீதி; இளையவள் பெயர் சுருசி. சுநீதியின் பிள்ளைதான் துருவன். இளையவள் பிள்ளையான உத்தமனை மடியில் வைத்துக்கொண்டு ஒரு நாள் ராஜா கொஞ்சிக்கொண்டிருந்தான். துருவன் சிறு பையன்; அவனுக்கும் தகப்பனிடம் போக வேண்டுமென்று ஆசை. சுருசி 'சீ' என்று தட்டித் துரத்தவே துருவன் மனம் நொந்து தன் தாயிடம்

போனான். ராஜா இளையாள் மோகம் பிடித்தவன்; அவன் ஒன்றும் சொல்ல வேயில்லை. சுநீதி பிள்ளையை எவ்வளவு தேற்றியும் அவன் அழுகை ஓயாது போகவே, 'ஸ்ரீமந் நாராயணனைத் தியானி. அவர் அருளைப் பெற்றால் உனக்கு ஒரு குறைவுமில்லை' என்றாள். உடனே காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான் பையன். வழியில் அவனைக் கண்டேன். 'திரும்பிப்போ, குழந்தாய். பெரியவர்களாலேயே அவனை அடைய முடியவில்லை ; உன்னால் முடியுமா?' என்று எவ்வளவோ தரம் சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவன் பிடிவாதத்தைக் கலைக்கவே முடியவில்லை!''

வசிஷ்டர், ''இந்த இடத்தில் உங்கள் வேலை பலிக்கவில்லை என்று ஒப்புக் கொள்ளுங்களேன்!'' என்று குறும்பாகப் புன்னகை செய்தார்.

நாரதரும் சிரித்த வண்ணம், "சரி; அப்படித்தான் இருக்கட்டுமே. அப்புறம் அவனுக்கு மந்திரோபதேசம் செய்தான் ; அந்தச் சிறுவன் தவமகிமையால் பகவான் அவனுக்கு இகத்தில் மட்டுமன்றிப் பரத்திலும் நிலையான புகழைக் கொடுத்திருக்கிறார்'' என்று முடித்தார். பிருகுவைத் தவிர மற்ற முனிவர்கள் துருவனை வணங்கி நின்றார்கள்.

நாரதர் இதைக் கவனித்து, "ஏன் ஸ்வாமி, நீர் மட்டும் அவனை வணங்கவில்லை?'' என்று பிருகுவைக் கேட்டார்.

**பிருகு :** இதிலிருந்து என் அபிப்பிராயந்தான் சரியென்று உறுதியாகிறது.

**நாரதர் :** எப்படி?

**பிருகு :** அந்தப் பரந்தாமனைத் தியானித்ததனால்தானே துருவன் இந்த நிலையை அடைந்தான்?

**நாரதர் :** ஆனாலும் துருவன் ஒருவன் பிறந்ததால்தானே ஸ்ரீமந் நாராயணனுடைய மகிமை நமக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது?

**பிருகு :** அதற்கும் அந்தப் பகவான் தானே காரணம்? அவன் நினைக்காதிருந்தால் துருவன் ஏன் பிறக்கப் போகிறான்?

**வசிஷ்டர் :** மகரிஷே! இந்த மாதிரி வாதத்திற்கு முடிவே ஏற்படாது; கடைசியில் எல்லாம் சூன்யம் என்று நாஸ்திகத்தில்தான் போய் நிற்கும்!

பிருகு தலை குனிந்தார்.

பிறகு ஏழு பேரும் நாரதரைப் பார்த்து, "மகரிஷே! அந்த அழியாப் பேறு அடைய எங்களால் முடியுமா?" என்று வினவினார்கள்.

''அதோ உங்களுக்கு ஆதர்சமாக அவன் விளங்குகிறான். அவனைச் சுற்றி வந்து, 'உன் நிலையை நாங்கள் எய்துவது எப்படி?' என்று பிரார்த்தியுங்கள். அதுதான் வழி'' என்று உபதேசித்தார் நாரதர்.

அன்று தொட்டு ஸப்தரிஷிகளும் விசும்பின் வட திசையிலே துருவனை வலம் வந்து, 'எப்படி? எப்படி?' என்று கேட்ட வண்ணம் இருக்கின்றனர்.

இன்னும் விடை கிடைக்கவில்லை!



# களத்திர தோஷம்

'மாயாவி'

ராமலிங்கமையருக்கு அந்த வீட்டிற்குள் நுழைவதற்கே வெட்கமாக இருந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள், 'இனி என் உயிர் போனாலும் இந்த வீட்டில் இனிமேல் காலடி எடுத்து வைக்கமாட்டேன்' என்று வீராப்புப் பேசிவந்த அவர், இன்று சந்தர்ப்பங்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு அவ்வீட்டிற்குள் நுழைந்துகொண்டிருந்தார்.

சாதாரண சமயமாக இருந்தால்கூடப் பிரமாதமில்லை. அவருக்கு முற்றும் எதிரான காரியங்கள் மிகுந்த கொம்மாளத்துடன் நடந்துகொண்டிருக்கும் அச்சமயத்திலுங்கூட, விதி தம்மை இவ்விதம் உந்தித் தள்ளிவிட்டதை நினைக்கும்போது அவருக்குக் கண்ணீர்தான் வந்தது.

வீட்டில் எங்கும் குதூகலம் நிறைந்திருந்தது. ஸ்திரீகளும் குழந்தைகளும் அலங்காரச் சின்னர்களாகக் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்தனர். வீட்டுத் திண்ணையில் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் அச்சமயத்தில் ராமலிங்கமையரை அங்குக் கண்டதும் ஆச்சரியத்தால் திகைத்தனர். அவர்கள் சம்பாஷணை திடீரென்று முற்றுப்புள்ளி பெற்றது. சிலர் முகத்தில் பயமும், சிலர் முகத்தில் கோபமும், இன்னும் சிலர் முகத்தில் எக்காளமும் தொனித்தன.

அவர் இவர்களில் ஒருவரையும் கவனிக்கவில்லை. வாசற்படியண்டை ஒரு நிமிஷம் ஆலோசித்தவாறு நின்றார். பிறகு ஏதோ வேகத்தால் தள்ளப்பட்டவர்போல, விறுவிறு என்று உள்ளே நடந்தார். அவரைத் தொடர்ந்து திண்ணையிலிருந்த கூட்டமும் உள்ளே ஓடிற்று. வேலையாகவும், விருதாவாகவும் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்த அனைவரும் ஒரு விநாடி திகைத்து அவரைப் பின் தொடர்ந்தனர்.

ரேழி வரையில் போய் நின்றார் அவர். அவரைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் ஆச்சரியத்தோடு அவர் முகத்தைப் பார்த்து நின்றது. சிறிது நேரத்திற்கு ஒருவரும் வாய் திறக்கவில்லை. அவர் கண்கள் மட்டும் அக்கூட்டத்தினிடையே ஓர் ஆத்மாவைத் தேடிக்கொண்டிருந்தன.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு கூட்டத்தை விலக்கிக்கொண்டு முப்பது வயசு உள்ள வாலிபன் ஒருவன் வந்தான். ஓடி வந்ததால் அவனுக்கு மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. வந்தவன் நேராக ராமலிங்கமையரிடம் நெருங்கி, "என்ன விசேஷம்? எங்கே வந்தீர்கள்?". என்று படபடப்பாகக் கேட்டான். அவன் கேள்வியில் கோபமும் வேகமும் அதிகமாக இருந்தன.

ராமலிங்கமையர் சாவதானமாக, "பாலுவைப் பார்க்க வேண்டும்" என்றார்.

"அவனை இப்பொழுது பார்க்க முடியாது."

"இல்லை, அவனைப் பார்த்து ஒரே ஒரு நிமிஷம் பேசிவிட்டுப் போய்விடுகிறேன்."

"அவனைப் பார்க்க முடியாது என்றால் பார்க்க முடியாதுதான். பேசுவதற்கும் இப்பொழுது சமயமில்லை."

ராமலிங்கமையர் பின்னும் சாவதானமாக, "அப்பா கோவு! சமயம் சரியில்லைதான். அதை நான் நன்றாக அறிவேன். ஆனால் சந்தர்ப்பங்களின் நிலை மாறியிராவிட்டால், நான் இச்சமயம் வந்திருக்கமாட்டேன். தயவு செய்து அவனைக் கூப்பிடு. அவனிடம் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்" என்றார்.

கோவுவின் முகத்தில் கோப ஜ்வாலை பின்னும் அதிகமாக வீசியது. "இதெல்லாம் என்ன புரளி, ஐயா? யாரிடம் காது குத்துகிறீர்? சமயமாம், சந்தர்ப்பமாம்! போமையா போம். இங்கே கலாட்டா பண்ணவா வந்தீர்?" என்றான்.

ராமலிங்கமையர் இம்மாதிரி பேச்சுக்களுக்கு எல்லாம் தம்மைத் தயார் செய்துகொண்டுதான் வந்திருந்தார். ஆகவே அவர் சாந்தமாகவே, "தெய்வ சாக்ஷியாய் எனக்கு அப்படி ஓர் எண்ணமும் இல்லையப்பா. அவளுக்குக் கொடுத்த ஒரு வாக்குக்காகத்தான் இப்பொழுது அவனைப்

பார்க்க விரும்புகிறேன். இல்லாவிட்டால் இது போன்ற ஒரு சமயத்தில் நான் மானத்தை விட்டு இங்கே வரமாட்டேன்'' என்றார்.


“அவன் கிட்டே என்ன சொல்லணுமாம்? அதெ ஒங்ககிட்டத்தான் சொல்லிடட்டுமே'' என்று கூடத்தில் இருந்தவாறு ஒரு ஸ்திரீ பேசினாள். அவளுக்குச் சுமார் இருபத்தைந்து வயசு இருக்கும்.

ராமலிங்கமையர் குனிந்திருந்த தலையை நிமிர்த்தி அந்த ஸ்திரீயைப் பார்த்தார். “யாரடியம்மா, மீனாக்ஷியா பேசுகிறது? ஆமாம், உன்னைப்போல அவளும் இவ்வீட்டில் சம அதிகாரம் வகிக்க வேண்டியவள்தான். விதி, அவள் இடத்தைப் பறித்து, இன்று வேறொருத்திக்குத் தத்தம் செய்கிறது. நான் அதைத் தடை செய்ய வரவில்லை. அவள் இன்று அல்ல, ஐந்து வருஷங்களுக்கு முன்பே அபாக்கியவதியாக்கப்பட்டுவிட்டாள். இனிமேல் அவள் அந்தப் பழைய பாக்கியங்களை அடையப் போவதில்லை. நான் உங்கள் சந்தோஷ சமயத்தில் குறுக்கிடவில்லை. பாலுவிடம் நேருக்கு நேர் ஒரே வார்த்தை பேசிவிட்டால் போதும். நான் போய்விடுவேன்'' என்றார்.

“நீ என், கண்டதுகளிடமெல்லாம் பேச்சுக் கொடுக்கிறாய்? அவர் சண்டைக்கு என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார். நானும் சளைத்தவனல்ல. ஒரு கை பார்த்துவிடத்தான் போகிறேன்'' என்று உரத்துக் கத்தினான் கோவு.

“யாரது இந்தச் சமயத்தில் சண்டைக்கு வந்திருக்கிறது? அவர் மூஞ்சியைக் கொஞ்சம் பார்க்கலாம்'' என்று கூறியவாறு மற்றொரு பெரியவர் ராமலிங்கமையர் முன்பாக வந்தார். அவருக்கு வயசு ஐம்பதுக்கு மேல் இருக்கும். அவர்தாம் இன்று அவ்வீட்டின் சம்பந்தியாக விளங்குபவர்.

ராமலிங்கமையர் அவர் முகத்தையும் நிமிர்ந்து பார்த்து, “கோபாலையரே, நான் இங்கே சண்டைக்கு வரவில்லை. உம்முடைய பெண்ணின் கல்யாணத்தை நிறுத்திவிடுவேனோ என்ற பயமும் உமக்கு வேண்டாம். நான் வேண்டுவதெல்லாம் மாப்பிள்ளை பாலுவை ஒரு முறை பார்க்க வேண்டும் என்பதே'' என்றார்.



கோபாலையர் சீறி விழுந்து, “மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை! யாருக்கு யாரையா மாப்பிள்ளை? சண்டைக்கு வரவில்லையாம். பின் சமாதானத்திற்கு வந்தீரோ, தாலி கட்டுகிற சமயத்தில்?'' என்று கத்தினார்.

ராமலிங்கமையர் பழைய சாந்தத்துடனேயே, “கோபப்படாதேயும், கோபாலையரே. என் நிலைமை உமக்குத் தெரிந்தால் உம் மனசும் கரையும்'' என்றார்.

“என்னவோ ‘நிலைமை நிலைமை’ என்கிறாரே. என்ன நிலைமையாம் அதிசயமாக இன்று? ஐந்து வருஷங்களாக இருந்த நிலைமை தானே இன்றும் இருக்கிறது?'' என்று கூடத்திலிருந்த ஓர் அநாமதேயப் பேர்வழி சப்தம் போட்டான்.

“யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போங்களப்பா. என்னை ஆளுக்கு இரண்டு அடிகள் வேண்டுமானாலும் அடியுங்கள். ஆனால் பாலுவைப் பார்ப்பதற்கு மட்டும் எனக்கு இப்பொழுது அவகாசம் கொடுங்கள்'' என்றார் ராமலிங்கமையர் பதிலுக்கு.

“அடியும் வேண்டாம், உதையும் வேண்டாம். பாலுவிடம் என்ன வேண்டுமாம் அவருக்கு?''

ஆம், பாலுவே அவர் எதிரில் வந்து நின்றான்.

இருபத்தைந்து வயசிற்குள்ளான சுந்தர வாலிபன் அவன். மணக் கோலத்தில், சேலம் பட்டு ஒன்றைப் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு, கண்களுக்கு மை தீட்டி, கையில் கங்கணக் கயிற்றுடன் காட்சியளித்த அவனைக் கண்டதும் ராமலிங்கமையர் மனத்தைத் துக்கம் 'குபீர்' என்று கௌவிக்கொண்டது. வாய் பேச முடியாதபடி ஒரு நிமிஷம் நின்ற பிறகு அவர், "அப்பா பாலு, நீயே வந்தாயா? இதோ, நீ தெய்வ சாக்ஷியாக மனைவியென்று கை பிடித்த ருக்மிணியின் ஒரே கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேனப்பா. பாலு, நீ மற்றொரு பெண்ணைக் கைபிடிக்குமுன்பு, உன்னைக் கண் குளிரப் பார்த்து உன் பாதங்களில் சிரசைத் தாழ்த்தித் தன் கடைசி வந்தனத்தைத் தெரிவிக்க எங்குகிறாளப்பா உன் மனைவி. நீ ஒரு நிமிஷம் என்னுடன் எங்கள் வீட்டிற்கு வர முடியுமா?" என்றார்.

"முடியாது முடியாது", "சூழ்ச்சி", "போகவே கூடாது", "பயலை நம்பாதே" என்ற பலவிதக் குரல்கள் கூட்டத்திலிருந்து கிளம்பின.

ஆரவாரம் சிறிது ஓய்ந்ததும், அதை ஊர்ஜிதம் செய்யும் விதம், "நான் வரப் போவதில்லை. இதுதான் என் பதில். போய்ச் சொல்லிவிடும்" என்று சிறிதும் பதற்றமில்லாமல் கூறினான் பாலு.

"வரமாட்டாயா? தொட்டுத் தாலி கட்டி ஒன்றிரண்டு வருஷங்கள் அளவளாவிய மனைவியின் இறுதிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்யமாட்டாயா? உன் பாதங்களில் தன் சிரசைக் கவிழ்த்து, பாபங்களைப் போக்கிக்கொள்ளத் துடிக்கும் அவள் ஆசையை நிறைவேற்றமாட்டாயா?"

"போதும் போதும், நிறுத்து. நீ இங்கிருந்து போகப் போகிறாயா இல்லையா?" என்று கண்கள் சிவக்க இரைந்தான் கோவு.

"பாலு, கடைசி முறையாக உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். என்னுடன் வரமாட்டாயா?" ராமலிங்கமையரின் குரல் துக்கத்தின் கனத்தால் தடைப்பட்டது.

"வரமாட்டேன், வரப்போவதில்லை."

"நான் போக வேண்டியதுதானா?"

"இதோ, இதுதான் வழி."

ராமலிங்கமையர் திரும்பி நடந்தார், சீட்டியடிப்பும், எக்காளக் குரல்களும், கனைப்பும் சிரிப்பும் அவரை வழியனுப்பின. கண்களில் மல்கிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவர் வாயிலைக் கடந்து சென்றார்.

* * *

ராமலிங்கமையர் கங்கைகொண்டானின் சாதாரண குடும்பஸ்தர்களில் ஒருவர். ஊருக்கெல்லாம் நல்லவர்தாம். ஆனால் கோவுவின் குடும்பத்தாருக்கு மட்டும் சில வருஷங்களாக வேண்டாதவராகிவிட்டார்.

ராமலிங்கமையர் சந்தான பாக்கியத்தில் அவ்வளவு விருத்தி அடைந்திருக்கவில்லை. அவருக்குப்பின் குடும்பப் பெயரைப் பாதுகாக்க ஒரு பிள்ளைகூட அவருக்கு இல்லை. அவருடைய ஒரே செல்வம் ருக்மிணிதான். பெண்ணாயிருந்தாலும் 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று இருந்ததால், ராமலிங்கமையரும் அவர் மனைவி கோமதியம்மாளும் ருக்மிணி மீது உயிரையே வைத்திருந்தார்கள்.

ருக்மிணியின் கல்யாண விஷயத்தில் ராமலிங்கமையர் அளவுக்கு மிஞ்சிச் சலிக்கத்தான் செய்தார். எற்கனவே ஜோஸ்யம், மாந்திரிகம் இவைகளில் நம்பிக்கை இல்லாதவராயிருந்தபோதிலும், ருக்மிணிக்கு வரன் பிடிக்கும் விஷயத்தில் சிறிதும் சளையாமல், மூன்று வருஷங்கள் தேடி, கடைசியாக உள்ளூரில் பாலுவுக்குக் கொடுப்பது என்று நிச்சயம் செய்தார்.

பாலுவின் குடும்ப வரலாற்றையும் ஐவேஜி வகைகளையும் ராமலிங்கமையர் நன்றாக அறிவார். குண விசேஷங்களிலும் பாலுவைப்பற்றியோ, அவன் அண்ணா கோவு (கோவிந்தன்) வைப்பற்றியோ அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. மொத்தத்தில், மூன்று வருஷப் பிரயாசைக்குப் பிறகு அவர் சரியான வரனையே தேர்ந்தெடுத்திருந்தார்.

பாலுவுக்கு அக்கா தங்கைகள் தொந்தரவு இல்லை. பெற்றோரும் சிறு வயசிலே போய்விட்டபோதிலும், கோவுவும் அவன் மனைவி மீனாக்ஷியும், அவனை உயிருக்கு உயிராய் வளர்த்துவந்தார்கள். அந்தச் சகோதரர்களுக்குள் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவ்வூரே அதிசயித்தது. பாலு மெட்ரிகுலேஷன் வரையில் படித்துவிட்டு அண்ணாவுக்கு உதவியாக வீட்டோடு இருந்தான்.

இவ்வளவு இருந்தும் கோமதிக்கு இவ்வரன் பூரண திருப்தி அளிக்கவில்லை. ஜாதகங்கள் சிலாக்கியமாகப் பொருந்தியிருந்த

போதிலும், ஒன்றிரண்டு ஜோஸ்யர்கள் பையனின் ஜாதகத்தில் சிறிது 'களத்திர தோஷ'த்தின் ஜாடை இருப்பதாகத் தெரிவித்ததே அவள் அதிருப்திக்குக் காரணம்.

"மூன்று வருஷங்களாக வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அலைந்தீர்கள். கடைசியில் களத்திரதோஷ ஜாதகனுக்குத்தானா நிச்சயிக்க வேண்டும்?" என்று அடிக்கொருதரம் அங்கலாய்த்துக் கொண்டாள்.

ராமலிங்கமையர் ஜாதக விஷயத்தில் நம்பிக்கை இல்லாதவராதலால், மனைவியின் வார்த்தைகளை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. மேலும், ஜாதகப் பொருத்த விஷயமாகச் சில ஜோஸ்யர்கள் லஞ்சம் பெறுவதை நேரில் பார்த்திருந்ததனால், இந்தத் தோஷமும் அவர்கள் சூழ்ச்சியின் சிருஷ்டியாகவே இருக்குமென்று அவர் தீர்மானித்தார்.

கோமதியின் அங்கலாய்ப்பு, கல்யாணச் சந்தடியின்போதுதான் சிறிது மறைந்தது. ருக்மிணிக்கும் பாலுவுக்கும் கல்யாணம் நடந்தேறிவிட்டது. நான்கு மாதங்களுக்குள்ளாகவே ருக்மிணியும் புக்ககம் போய்ச் சேர்ந்தாள். சரியாக ஒன்றரை வருஷங்கள் பாலுவும் ருக்மிணியும் சந்தோஷமாக இல்லறம் நடத்தினர்.

* * *

கோமதி இந்தக் களத்திரதோஷத்தை மறந்துவிட எவ்வளவு முயன்றும், அது அடிக்கடி அவள் மனத்தில் பயங்கர எண்ணங்களைத் தோற்றுவித்துக்கொண்டே இருந்தது. நாளடைவில் இவ்வெண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாசுவதமான இடம் பெற்றுவிடவே, "அடி பெண்ணே, உன்னைச் சந்தோஷமாகப் பிள்ளைகுட்டிகளுடன் நானும் பார்ப்பேனா?" என்றெல்லாம் அவள் கற்பனை செய்துகொள்ளத் தொடங்கினாள்.

ராமலிங்கமையருக்கு அவள் மனப்பயம் நன்றாகத் தெரிந்துதான் இருந்தது. "போடி பைத்தியம், களத்திரமாவது தோஷமாவது! இதெல்லாம் ஜோஸ்யர்கள் பணம் பறிப்பதற்காகக் கற்பிப்பதல்லவா? நல்லதோ, கெட்டதோ எதுவும் நம் இச்சைப்படி நடக்கப்போவதில்லை. விதியின் போக்கைத் தடுக்க இந்த ஜாதகத்தாலும் ஜோஸ்யர்களாலும் ஒன்றும் நடக்காது. நீ எதற்காக மனசை வீணாய்ப் புண்படுத்திக்கொள்கிறாய்?" என்று சமாதானம் சொல்வார்.

கோமதியின் மனப்பேய் இவ்வார்த்தைகளால் ஒடுங்கிவிடுவதாயில்லை. "ஐயோ, அதற்குச் சொல்லவில்லையே. ஏதோ நல்லதன்றிப் பொல்லாதது நேர்ந்துவிட்டால், அவளுக்குக் குழந்தையாவது ஒன்று இருக்குமானால் நமக்குச் சிறிது ஆறுதலாக இருக்குமே" என்பாள்.

"அசடு என்றால் வடிகட்டின அசடடீ! ஏதோ வேண்டாதவற்றையெல்லாம் சிந்தித்துக்கொண்டு பிள்ளைகுட்டி என்கிறாயே. பிள்ளையும் குட்டியும், நம் இச்சைக்கும் ஆசைக்கும் பயந்து பிறந்துவிடுமோ என்ன?" என்று சொல்லிச் சிரிப்பார் ராமலிங்கமையர்.

"நான் சொல்வதைத் தெரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களே. அவளும் ஒன்றரை வருஷமாகத்தான் புக்ககத்தோடு இருக்கிறாள். எட்டு வருஷங்களாகியும் மீனாக்ஷிக்கும் குழந்தைகள் இல்லை. ஒருவேளை அவர்கள் குடும்பத்தில் தோஷம் ஏதாவது இருந்தால் பார்த்துப் பரிஹாரமாவது செய்யச் சொல்லக்கூடாதா? எனக்கும் என் செல்வத்தைக் குழந்தையுடன் பார்க்க ஆசை இராதா?" என்று வாதாடுவாள் கோமதி.

ராமலிங்கமையர் சிரித்துக்கொண்டே, "கோமதி, உனக்கு நல்ல பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. மறுபடியும் தோஷம் பாபம் என்று ஏதேதோ கொண்டுவந்து இணைக்கிறாயே. ஏண்டி, அவளுக்கு என்ன வயசாகிவிட்டதா? வருகிற சித்திரைக்குத்தானே பதினாறு நிறையப் போகிறது? அதற்குள் அவள் தலையில் குழந்தையின் பாரத்தையும் கட்டிவிட வேண்டுமோ என்ன?" என்று கோபித்துக்கொள்வார்.

இதிலொன்றும் கோமதி சமாதானமடைந்துவிடமாட்டாள். "அடியம்மா, இருந்தாலும் புருஷர்களுக்கு இவ்வளவு கல் மனசு ஆகாதுதான்! என்னவோ என் பெண் உள்ளம் உருகுகிறது. ஈச்வரன்தான் அவளுக்கு நல்வழி விடவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு செல்வாள்.

கணவனால் தன் உள்ளக்கிடக்கை உருவாகாது என்று அறிந்ததும், அவள் பாலுவைக் குடும்பதோஷத்தைப் பார்த்து ஏதாவது சாந்தி செய்யும்படி ருக்குவிடம் சொல்லியனுப்பினாள்.

ருக்கு பாலுவிடம் ஒரு நாள் தயங்கித் தயங்கி இவ்விஷயத்தைக் கூறினாள்.

பாலு சிரித்துக்கொண்டே, "ஊஹூம். நான் மாட்டேன். அதற்குள் எனக்கு ஒரு

பங்காளியைச் சிருஷ்டித்துக் கொள்ள மாட்டேன்” என்றான்.

அவன் சூசக வார்த்தைகளை ருக்கு அறிந்துகொள்ளவில்லை. “பங்காளியா? அப்படியென்றால்.........? எனக்கு அர்த்தமாகவில்லையே?” என்று கையை விரித்தாள்.

“ஆமாம், இப்பொழுதே நீ குழந்தையும் கையுமாகிவிட்டால், என்மேல் இருக்கும் அன்பெல்லாம் குழந்தையிடம் அல்லவா போய்விடும்? அப்படியானால் அது என் பங்காளி அல்லவா?”

“அடேயப்பா, எங்கெல்லாம் வளைத்துப் பிடித்துப் பேசுகிறீர்கள்! குழந்தை பிறந்துவிட்டால், உங்கள்மீது இருக்கும் அன்பு குறைந்துவிடும் என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா?”

“நான் சொல்வதென்ன, பொய்யா? குழந்தை பிறந்துவிட்டால், அதைக் கவனிக்கத்தானே உனக்குப் பொழுது சரியாக இருக்கும்? நாம் இப்பொழுது இருப்பது போல் உல்லாசமாக இருக்க முடியுமா? அப்பப்பா! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன அவசரம்? புருஷன் வீட்டிற்கு வந்ததும் வராததுமாய், ‘குழந்தை எங்கே?’ என்றுதான் கேட்கிறார்கள்.”

“உங்களுக்குப் பதில் சொல்லும் திறமை எனக்கு இல்லை. என் தீர்மானங்களெல்லாம், நிமிஷத்தில் உங்கள் வார்த்தைகளில் அடிபட்டு மறைந்துவிடுகின்றன. இருந்தாலும், அம்மாவுக்குத் திருப்தி உண்டாவதற்காகவாவது எனக்கு ஒரு குழந்தை வேண்டும்போல இருக்கிறது. அவள் சொல்வதிலும் சிறிது உண்மை இருக்கத்தானே இருக்கிறது? கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள்: மதனி இங்கே வந்து எட்டு வருஷங்கள் ஆகவில்லையா? நமக்கென்று இல்லாவிட்டாலும் அவர்களுக்காவது ஒரு குழந்தை பிறக்க வேண்டாமா? இதில் ஒன்றும் மோசம் போய்விடவில்லையே? இரண்டு ஜோஸ்யர்களிடம் கலந்து குடும்பத்தில் தோஷம் ஏதாவது இருந்தால் அதற்கு வேண்டியவைகளைச் செய்யலாமே.”

“போதுமடி போதும். எட்டு வருஷங்களாகியும், அவர்களே இன்னும் குழந்தைக்கு ஆசைப்படவில்லையாம். அதற்குள் இவள் ‘குழந்தை குழந்தை’ என்று துடிக்கிறாள். எல்லாம் பிறக்கும்போது தன்னாலேயே பிறக்கும் பேசாமலிரு, அசடே” என்று அவள் கன்னத்தில் அன்பாகத் தட்டிவிட்டுப் போனான் பாலு.

ருக்கு இவ்விஷயத்தை அவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லையாதலால், இப்பேச்சு இதனுடன் நின்றுவிட்டது.

இங்கும் கோமதியம்மாளின் தாபம் தீர வழி ஏற்படவில்லை. ஆனாலும் அவள் முயற்சியைக் கைவிடாது மீனாக்ஷியிடம் இவ்விஷயமாகத் தூபம் போட்டாள். “ஏண்டி மீனாக்ஷி, இப்படிப் பேசாமலிருக்கிறாயே. புக்ககத்திற்கு வந்து எட்டு வருஷங்களாகப்போகின்றன. இன்னும் ஒரு குழந்தைக்கு உண்டான ‘சோடே’ காணவில்லை. அவளுக்கும் ஒன்றரை வருஷமாக ஒன்றுமில்லை. அவளாவது சின்னஞ் சிறிசு. உனக்கு வயசாகவில்லையோ? உங்கள் ஜாதகங்களைப் பார்க்கச் சொல்லி, ஏதாவது பரிஹாரம் செய்யச் சொல்வதுதானே? வீட்டிற்குப் பெரியவளான நீ இப்படிச் சும்மா இருக்கலாமோ?” என்று அவள் மனசைக் கரைத்தாள்.

மீனாக்ஷிக்கும் குழந்தையில்லாத் தாபம் இல்லையென்று சொல்ல முடியாது. ஏற்கனவே இவ்விஷயமாக என்ன செய்வது என்று ஆலோசித்திருந்த அவளுக்குக் கோமதியம்மாளின் புத்திமதிகள் வழிகாட்டியாக உதவின. கோமதியம்மாளின் காரியம் ஜயம் பெற்றுவிட்டது. அதனால் நன்மை அடையக்கூடியவர்கள் அடைந்தார்கள். ஆனால் அவளுக்கு அது விபரீதமாகவே முடிந்தது.

(தொடரும்)



# அகத்தின் அழகு

எஸ். எஸ். ராமசாமி

கலிங்கதேசத்தின்மீது போர்தொடுக்க அரசன் உறுதி கொண்டுவிட்டான். சேனைகளைத் தயார் செய்வதில் சேனாதிபதியும் முனைந்துவிட்டான். இதுவரையில், துருப்பிடித்திருந்த ஆயுதங்களுக்கு மெருகு போடுவதில் போர்வீரர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். அமைதி நிலவிய காலத்தில் இன்ப வாழ்க்கை நடத்திவந்த காதலிகளுக்குத் தங்களுடைய காதலர்களின் பிரிவைக் குறித்து மிகுந்த வருத்தம் ஏற்படுவது இயல்புதானே? இருந்தாலும் போர்த் தொழிலுக்



குப் பயந்துபின்வாங்கும் சுபாவம் நம் பண்டை நாட்டுப் பெண்களுக்கு இல்லை. வீரவாழ்க்கையில் பெண்களும் ஈடுபட்டார்கள், பிரிவைக் குறித்து வருந்தினாலும் தங்கள் கணவன்மார்களுக்கு உற்சாகமூட்டி அவர்களை யுத்தகளத்திற்கு அனுப்புவார்கள். அதுவும் தங்கள் நாட்டு மன்னனுடன் யுத்தத்திற்குச் சென்றால் தவறாமல் வெற்றிமாலை சூடித் திரும்புவார்கள் என்ற மனோதிடமே அப்பெண்களின் வாழ்க்கையில் பெரிதும் துணைநின்று உதவியது.

காதலனொருவன் தன்னையும் அறியாமல் மனங்கலங்கிய காதலியைத் தேற்றுகிறான். அதுவும் கீர்த்தி வாய்ந்த தங்களுடைய அரசனோடு சென்றால் தங்கள் பங்கில்தான் ஜயம் என்று திண்ணமாகக் கூறுகிறான். காதலியும் ஒருவாறு மனந்தேறித் தன் கணவன் யுத்தகளத்திற்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் தன் கையாலேயே செய்து முடிக்கிறாள். வீரக்கழலை அணிவித்து அம்பறாத்தூணியை எடுத்து மாட்டுகிறாள். தன் கணவனுடன் சல்லாபம் செய்துகொண்டே, யுத்தம் முடியும் காலவரையறையைப்பற்றியும் அவள் விசாரித்துத் தெரிந்துகொள்ள ஆவல் கொள்கிறாள். காதலனும் இரண்டு ஆண்டுகளில் வெற்றி முழக்கத்தோடு திரும்புவதாகக் கூறி அவளைத் தேற்றிவிட்டுச் செல்கிறான்.

* * * *

யுத்தம் கடுமையாக நடக்கிறது. காதலி ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகப் போக்குகிறாள். கணவன் வெற்றிமாலை சூடித் திரும்ப வேண்டுமென்று தினமும் தன் குலதெய்வத்திற்குப் பூஜை செய்கிறாள். தன் தோழிமூலம் அப்போதைக்கப்போது யுத்தகளத்திலிருந்து வரும் செய்திகளை ஆவலுடன் தெரிந்துகொள்கிறாள். மழைக்காலம் வருகிறது. உயிரெல்லாம் யுத்தகளத்தில்தான் உலவுகிறது. உடல் மாத்திரம் மாளிகையில் தங்குகிறது. இவ்விதமாக ‘அங்குயிரும் இங்குடலும் ஆன’ மழைக்காலமும் ஒருவாறு கழிந்துவிட்டது. தன் கணவன் திரும்புவதாகக் கூறிச் சென்ற நாளும் நெருங்கியது. ‘இன்று சென்றது. நாளையும் முடியும்’ என்று நாட்களை எண்ணிக்கொண்டே இருக்கிறாள்.

கடைசியாகத் தன் கணவன் திரும்புவதாகக் குறிப்பிட்டுச் சென்ற தினமும் வந்தது. காதலியின் முகத்தில் அன்று ஓர் அலாதியான தேஜஸ் ஏற்பட்டது. தோழி தன்னைப் பரிகாசம் செய்யும்பொழு

தெல்லாம் புன்முறுவல் தோன்றி அவளுடைய அழகைப் பின்னும் மிகைப்படுத்திற்று. அன்று முழுவதும் அவளுடைய நெஞ்சில் இன்ப அலைகள் மோதிக்கொண்டிருந்தன. இன்பக் கனவிலேயே மிதந்தாள்.

மாலை நேரம் வந்ததும் தன்னைப் பல விதமாக அலங்கரித்துக்கொண்டாள். நறுமணம் கமழும் மல்லிகைப் பூவைச் சூடினாள். நெற்றியில் குங்குமப் பொட்டுத் திகழ்ந்தது. அறுசுவை உண்டிகளைத் தயார் செய்துவிட்டு, 'வழிமேல் விழி வைத்துத் தன் காதலன் வரவை எதிர் நோக்கிக் காத்திருக்கிறாள். நடு ஜாமம் வரையில் அவன் வரவில்லை. ஒவ்வொரு விநாடியும் தன் கணவன் தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறான் என்ற இன்ப உணர்ச்சியிலேயே மனம் லயித்துவிடுகிறது. தன்னையும் மீறித் தூக்கம் அவளை ஆட்கொள்ளுகிறது.

இந்த நிலையில் பகைவரை முறியடித்து, வெற்றி பெற்ற பெருமிதத்தோடு, போர் வீரனாகிய காதலன் தன் நகரை நோக்கி வந்துவிட்டான். நேரே தன் மாளிகைக்குச் சென்று கதவைத் தட்டுகிறான். தூக்க மயக்கத்திலிருந்த காதலியும் தன் காதலனை வரவேற்க ஓடோடியும் வருகிறாள். அந்த நிலையிலும் சிதைந்த அலங்காரத்தைச் சீர்படுத்திக்கொண்டே விரைந்து செல்கிறாள். ஒரு கையினால் சரிந்த கூந்தலை எடுத்துச் செருகிக்கொள்கிறாள். மற்றொரு கையினால் நெகிழ்ந்த ஆடைகளைச் சரிப்படுத்துகிறாள். தூக்கக் கலக்கத்திலும் பிரிந்திருந்த காதலன் வந்துவிட்டான் என்றதும் அவன் நினைவாகவே இருந்த முகமும், சூரியனைக் கண்ட தாமரையைப் போல் மலர்ச்சி அடைகிறது.

வீரர் வாழ்க்கையில் ஏற்படும் இது போன்ற நிகழ்ச்சியொன்றைக் கவிஞரொருவர் நமக்கு ஒரு பாட்டின் மூலம் விளக்குகிறார். இப்பொழுது கவியைப் படியுங்கள் :—

'சோருது கோந்தளகம் ஒருகை மேலலைய
ஒருகை கீழலைசெய் துகிலோடே
திருக னந்தலினும் முகமலர்ந்து வரும்
தெரிவை மாதர்கடை திறமினோ'

[அளகம் - கூந்தல்; அனந்தல் - தூக்கம்.]

கலைஞர்கள் மக்களின் இதயமாகிய வீணையில் தோன்றும் உணர்ச்சி பேதங்களையெல்லாம் நமக்கு மிக எளிதில் விளக்கிக் காட்டும் ஆற்றல் வாய்ந்தவர்கள். சித்திரக் கலைஞன் ஒருவன் மேலே கூறிய பெண்ணின் நிலையை வர்ண ஜாலங்களினால் நமக்குப் புலப்படுத்திவிடுவான். கலிங்கத்துப்பரணி பாடிய ஜயங்கொண்டார் 'சப்த சித்திரம்' ஒன்றை நமக்குச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார். சுவை ததும்பிய இப்பாடலை நாம் சிறிது ஊன்றிப் படித்துப் பார்த்தால், பண்டைக்காலத்து வீரப் பெண்மணிகள் நடத்திவந்த வாழ்க்கையின் ஓர் அம்சமும், போரின் நிமித்தம் பிரிந்திருந்த காதலர்கள் திரும்பியதும் அவர்களை மனப்பூரிப்போடு வரவேற்கும் காட்சியும் நம் மனக்கண்முன் தோன்றுகின்றன. 'அகத்தின் அழகு' முகத்தில் பிரதிபலிப்பதை ஒரு கவியில் படம் பிடித்துக் காட்டுகிறார் கலிங்கத்துப்பரணி பாடிய தமிழ்க்கவிஞர்.

---

"ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டும் என்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பாதிவிரத்யத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக்குறையத் தன் இனத்து ஸ்திரீகளைப் பதிவிரதை என்று நம்புகிறான். ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும். பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. ஆனால், பதிவிரதை அல்ல என்பதற்காக, ஒரு ஸ்திரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து ஜாதியை விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாவரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வுபடுத்தி அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்."

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

# போராட்டம்

ஆர்வி

மனிதனுடன் மனிதன் போராடிக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இந்த அதம உலகத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது? மித்திரர்களையும், பந்துக்களையும், மனைவியையும், குழந்தைகளையுங்கூட நம்பி உயிர் வாழ முடியாத ஒரு வாழ்க்கை நிலையில் காலம் ஓடிக்கொண்டிருக்கும்போது, மனிதன் மனிதனாகவே எப்படி இருப்பான்? உலகத்திலே ஆறறிவும் படைத்த உயர்ந்த வர்க்கமே இல்லாமல் போய்விட்டதோ என்று சங்கிக்கும் சந்தர்ப்பத்தில், யுவதியான சியாமளாவினால் - அதுவும் தன்னந்தனியாகப் போராடித் தன் எதிர்கால வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தால் - தனியாக உட்கார்ந்து இயற்கையின் பின்னணியில் விசித்துப் புலம்பாமல் என்ன செய்யமுடியும்?

விசித்து விசித்து அழுதாள். ஜீவராசிகளிலே உயர்ந்த படைப்பென்பதே இல்லாமல் போய்விட்டதோ என்ற எண்ணம் அவள் மனசில் வெகு விரைவில் பரவியது. உடனேயே தானும் அந்த மட்டரகப் பிராணியின் இரைக்கு ஒரு பலியாகிவிட்டோம் என நினைத்தாள். அந்த நினைப்பு வந்ததோ இல்லையோ, அவள் பின்னும் ஆத்திரத்துடன் கண்களினின்றும் நீரைக் கக்கினாள்.

நீரைக் கக்கிய அவள் கண்களுக்கு எப்படி எல்லாமும் மொத்தையாகத் தோன்றியதோ அப்படித்தான் அவளுக்கு உலகமும் மொத்தையாக, கலங்கலாகத் தோன்றியது.

அந்தக் கலங்கலான உலக மேடையில் அவள் தன்னையும் ஒரு சிருங்கார வேஷமிட்டு நடிக்கப்போகும் யுவதியாகப் பார்த்தாள். தன்னுடைய குலுக்கையும் மினுக்கையும் கண்டதும் அவளுக்கே லஜ்ஜையாய் இருந்தது. ஆடவர்களின் வழிகளனைத்தும் பல கோணங்களிலிருந்து தன்னையே பார்வை இலக்காகக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவள் ஏனோ தன் முகத்தைப் பின்புறமாகத் திருப்பிக்கொண்டாள்.

'சீ! இதுவும் ஒரு ஜன்மமா?' என்ற வார்த்தைகள் வறண்ட நெஞ்சின் வழியே வெளிவரப் பார்த்தன. ஆனால் வார்த்தைகளை உமிழ்நீராக மாற்றி, அடித்தொண்டையால் காறி ஆத்திரத்துடன் கீழே உமிழத்தான் வேண்டியதாயிற்று. சற்று நேரத்தில் அவள் தன்னைத் தேற்றிக்கொள்ளப் பார்த்தாள். உணவும் நித்திரையும் வேப்பங்காய்போலக் கசந்த அவளுக்கு எதனாலும் தன்னைத் தேற்றிக்கொள்ள முடியவில்லை. ஆகவே நிலைகுத்திப் போய் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தாள். பழைய சம்பவங்களை உருட்டிப் பார்த்தாலாவது மனத்தேர்ச்சி பெற முடியுமா? கண்டிப்பாக முடியாது. அப்படியென்றால் எதிர்காலத்தைத் தான் யோசித்துப் பார்ப்போமே என்று அவள் மனம் ஓடிற்று. தீர்க்கதரிசிகளும் தத்துவ ஞானிகளும் தோன்றிய மனித குலம் இன்று ஒன்றையொன்று கொன்று பிழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையில் அபலையால் எதிர்காலத்தைப் பற்றி என்னதான் யோசித்துத் தெரிந்து கொண்டுவிட முடியும்?

ஆனாலும் அவள் சிந்தனை செய்யப் போவதாகத் தீர்மானம் செய்து கொண்டாள். மறுபடியும் நன்றாக ஒருதரம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கண்ணைத் திறந்து கொண்டு தியானிப்பது சாத்தியமா என்று தலை நிமிர்ந்தபோது அவள் திடுக்கிட்டுப்போனாள். எதிரே எவ்வளவு நேரமாக நிற்கிறார் இவர்?

* * *

சியாமளாவின் சிந்தனை வெகு வேகமாகச் சடசடவென்று மாறியது. எழுந்திருக்க முயலாமலே, "எவ்வளவு நேரமாக நிற்கிறீர்கள்?' என்றாள்.

"அப்பொழுது ரொம்ப நாழிகையாகவே நீ இப்படித்தான் இருக்கிறாயா?"

அவள் பல்லைக் கடித்துக்கொண்டாள்.

"நிற்பானேன்?" என்றாள் பிறகு.

"நீ அழுவானேன்?"

எங்கிருந்தோ அவளுக்கு உத்ஸாகம் வந்ததுபோல, "வருகிறவர் இப்படி நிற்கும்படி ஆகிவிடுகிறதே என்றுதான் அழுதிருப்பேன்" என்றாள், சிரிப்பை வருவித்துக்கொண்டு.

அவன் மேலாகச் சிரித்தான்.

"சியாமளா!" என்றான் பிறகு.

அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உள்ளதைச் சொல். நீ ஏன் இப்பொழுது அழுதுகொண்டிருந்தாய்?"

"இதோ, பாருங்கள்! நான் பொய் சொல்லப் போவதில்லை. என் மனம் படும் வேதனையை நான் உங்களிடம் தெரிவிக்க இஷ்டப்படவில்லை. என் மனவேதனை என்னுடனேயே இருக்கட்டும். அதில் உங்களுக்கும் பங்கு வேண்டியதில்லை. யௌவன தசையை, அதன் வேட்கை வேதனைகளை, நான் எப்படியோ சமாளித்து விட்டேன். இனி எனக்கு அவ்வளவாகக் கஷ்டமாயிராது. இன்னமும் நான் தனியாகவே இருந்துவிடுகிறேன். என்னை விட்டுவிடுங்கள்......" என்றாள் சியாமளா. அவள் குரல் உணர்ச்சி மிகுதியால் தடுமாறியது.



"இதன் அர்த்தம் என்ன, சியாமளா?"

கணநேரம் அவள் பேசாமல் அவன் முகத்தையே கூர்ந்து நோக்கினாள். வாளிப்பான உடல் சற்று நேரம் தன் நிலைப்பின்றி நடுங்கியது.

"என்னால் பிறருக்குக் கஷ்டம் நேரக் கூடாது என்பதுதான்" என்றாள் திட மனத்துடன்.

அவன் வெகு சிரமப்பட்டு, "கஷ்டமென்ன இதில்?" என்றான்.

"கஷ்டமில்லையா? திரஸ்கரித்த ஒரு மனைவியுடன் மறுபடியும் கூடி வாழ்வதென்றால்? அதுவும் இரண்டாம் மனைவியும் கூட இருக்கும்போது சம்சாரத்தை ஓட்டிக்கொண்டு போவது அவ்வளவு லேசா என்ன?"

"நான் சொல்வதைக் கேள், சியாமளா! நீ வீணாகப் பயம் கொள்ளுகிறாய். சென்றதை இருவரும் மறந்துவிட்டால் நடக்கவேண்டியது சுலபமாகவே நிறைவேறிவிடும். நான் நிர்ப்பந்தப் படுத்தவில்லை. என் கடமையைச் செய்கிறேன். நீ யோசித்து உன் முடிவைப் பிறகு சொல்."

இப்படிச் சொல்லிவிட்டு அவன் எழுந்து வெளியே நடந்தான்.

சியாமளா அவன் போவதையே பார்த்தாள். அவன் வெளிக்கதவைத் தாண்டியதும் ஏனோ அப்படி வாய் விட்டுக் 'கடகட'வென்று சிரித்தாள்.

படம் எடுக்குமுன் நடக்கும் ஒத்திகைகளில் அவள் இப்படிச் சிரிக்க நன்றாக அப்பியசித்திருந்தாள். ஆனால் அடுத்த கணமே அவள் முகம் சுண்டியது. செத்தவள் மீண்டும் வீட்டுக்குள் வருவதைப் போலத்தான் அவர்களுடைய யோசனை இருந்தது. சுதந்தரமாய்க் கழித்த அவளுடைய வாழ்க்கையில் அடிமைத்தளையைப் போட்டுப் பூட்டுவது எவ்வளவு சிரமமான காரியம்? மீண்டும் அவள் சிந்தனை செய்தாள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை அவள் அநுபவத்தில் கண்டுவிட்டாள். தன்னை இறுகப் பிணைக்கும் குடும்ப வாழ்வை அவள் உதறியபோது அக்கரை - அதாவது தற்போது நடத்தும் வாழ்க்கை - பச்சையாக, குளுமை

யாக இருந்தது. வெகு எளிதிலேயே அவள் இங்கே பசுமையின் உள்ளே கிடக்கும் பயங்கரத் தோற்றத்தைக் கண்டுவிட்டாள். அந்தப் பயங்கரம் அவளுக்கு ஏராளமான ஐசுவரியத்தைக் கொடுத்தது உண்மைதான். சுக போக வாழ்வைக் கொடுத்ததும் உண்மைதான். ஆனால் ஏன்? அவளைப் பலி கொள்வதற்காகத்தான். இதைத் தெரிந்துகொண்டபோதுதான் அவள் தான் ஏற்கனவே நின்றிருந்த கரையை நிமிர்ந்து பார்த்தாள். பசுந்தளிர் அவளை 'வா, வா' என்று அழைப்பதைப் பார்க்கும்போது அவள் மனம் குளுகுளுத்தது. இந்தக் கரையிலுள்ள பயங்கரத்தைவிட அந்தக் கரையிலிருந்த உப்புச்சப்பற்ற பசுமை எவ்வளவோ மேல் என்று தோன்றியது. ஆனால் அங்கேயும் ஏமாற்றமும் சுய நலமும் தாண்டவமாடுகின்றன என்பதை மறுபடியும் கண்டபோது அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. மனித ஜன்மம் மிருக ஸ்வபாவத்தைக் கொண்டு விலங்காக மாறிவிட்டிருந்தால் ஒவ்வொருவரும் அதற்குப் பலியாக வேண்டுமென்று என்ன கட்டாயம்? அவர்களும் பலி கொள்ளக்கூடும் அல்லவா? ஆகவே எதிர்கால வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவள் போராடித்தான் ஆகவேண்டும். ஆனால் அதற்காகத் தனியே உட்கார்ந்து விசித்து விசித்து அழுவது கூடாது. சிரிக்கத்தான் வேண்டும், சிரித்துக் கொண்டே போராடித்தான் ஆகவேண்டும். எனவே அவள் சிரித்தாள். வயிறு வலிக்கும் வரையில் வாய்விட்டுச் சிரித்தாள்.

* * *

"ஏன் அப்படிச் சிரிக்கிறாய், சியாமளா?"

அவளுடைய பலஹீனம் அங்கே வெளிப்பட்டது. அவள் சிரிப்பை மறைக்க முயன்றாள்.

"என்னவோ நினைவு வந்தது. சிரிக்கிறேன்" என்றாள், மழுப்பினாற்போல.

ஆனால் அவளுக்கே தன் சிரிப்புக்குக் காரணம் தெரியவில்லை. பெரிய குற்றம் செய்துவிட்டது போலக்கூட இருந்தது அப்படிச் சிரித்தது.

ஆனால் அவன் கிண்டிக் கிண்டிக் கேட்கவில்லை.

"சரி" என்றான். ஒரே வார்த்தை.

அவளது சர்வாங்கமும் ஏனோ ஒடுங்கிப் போயின. பிறகு, "உட்காருங்கள்" என்றாள், சமாளித்துக்கொண்டு.

"இருக்கட்டும், சியாமளா. யோசித்து முடிவுக்கு வந்திருப்பாய் என்று நினைக்கிறேன். இல்லையா?"

அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. தன்னை வேண்டாம் என்று தள்ளி வைத்து வீம்பாக உடனே மறுமணம் செய்துகொண்ட கணவன் முன்னிலையில் அவள் இப்பொழுதும் தலைகுனிந்தாள்.

முகம் இறங்க, "என்னை மறுபடியும் சம்சாரத்தில் மாட்டிக்கொண்டு உழலச் சொல்கிறீர்களா?" என்று தைரியம் இழந்து கேட்டாள்.

ஆணின் வீரியத்துக்குப் பெண்மை மண்டியிடுவதுபோல இருந்தது அக்காட்சி.

"ஆமாம், சியாமளா; ஆமாம். என் மனைவி நீ. உன் கஷ்ட நஷ்டத்தில், மான அவமானத்தில் எனக்கும் பங்கு உண்டு. நீ மனவேதனைப்படுவதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை."

கணநேரம் புருஷனுடைய இந்த வார்த்தைகளில் அவள் பரவசம் கொண்டாள். மெய்ம்மறந்து போய், "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்றாள் கடைசியாக.

"ஒரு வார்த்தைதான்: சம்மதம் என்று."

அவள் சற்று நிதானித்தாள். "வீணாக நீங்கள் என் நிமித்தம் கஷ்டத்திற்கு உள்ளாகிறீர்கள்" என்றாள் மறுபடி.

"கஷ்டமென்ன இதில், சியாமளா?"

"திரஸ்கரிக்கப்பட்ட, திரண்ட ஐசுவரியமுடைய பெண் நான். இரண்டாம் மனைவியை வைத்துக் கொண்டு நீங்கள் கண்டிப்பாகக் கஷ்டந்தான் அடைவீர்கள். இதை யோசிக்கவில்லையா நீங்கள்?"

"சியாமளா! நான் யாவற்றையும் யோசித்தாகிவிட்டது. என் வரைக்கும் ஒரு கஷ்டமும் ஏற்படாது. அவள் தான் - அவளுக்கு ஒத்துப் போவது முடியாமலிருந்தால் வெளியில் போகட்டும்........." என்றான் அழுத்தமாய்.

சியாமளாவுக்குப் 'பகீர்' என்றது. கணவன் - மனைவி - தள்ளி வைத்தல் - எல்லாம் அவளை வாழ்க்கையில்

மறுமுறையாகத் திடுக்கிட வைத்தன. அவள் கண்கள் சிவந்தன. வீறுடன் எழுந்தாள், தன்னை அடக்கிக் கொண்டு.

"ஒரு வார்த்தை: உள்ளதைச் சொல்வீர்களா?"

"கேள் தாராளமாய்."

"நீங்கள் என்னை விரும்புவது என் மேல் விருப்பம் கொண்டா, என் பொருள்மேல் விருப்பம் கொண்டா?"

அவன் திகைத்துப் போனான்.

அவள் மறுபடியும் கேட்டாள்: "ஏன் அப்போது மட்டும் என்னைத் தள்ளி வைத்துவிட்டு மறுவிவாகம் செய்துகொண்டீர்கள்?"

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எனக்காகவோ என் சொத்துக்காகவோ நீங்கள் மறுபடியும் இன்னொரு பெண்ணைக் கெடுக்க வேண்டாம். இந்தாருங்கள்; என் செல்வம் யாவையும் அவளுக்குக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் வெளியே செல்லுங்கள். என் வீட்டில் அடி எடுத்துவைக்க வேண்டாம். போய் வாருங்கள். நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு அவள் விறு விறு என்று உள்ளே போய் விட்டாள்.

வெகு நேரம் கழித்து அவன் திரும்பினான். அவள் பெருமூச்சு விட்டாள். "ஆஹா... இன்றுதான் இந்தத் தொல்லையான போராட்டம் முடிந்தது. எனக்கு இந்தக் கரையும் வேண்டாம்; அந்தக் கரையும் வேண்டாம். ஊழியம் செய்து இந்தச் சாண் வயிற்றை வளர்க்கக்கூட முடியாமலா போய் விடும்?" என்று சொல்லிக்கொண்டாள்.

---

## வீடுகள்

'நாணல்'

கல்லாய்க் கிடந்தேன்; மறைந்தேன்; காட்டு
முல்லைக் கொடியின் முறுவலில் நின்றேன்;
எல்லை யிலாத பெருவெளி யதனில்
நில்லா தொருநிலை தேடி அலைந்தேன்.

தும்பிச் சிறையுள் துடித்தேன்; சேற்றில்
விம்மி மலர்ந்திடும் தாமரை யானேன்;
கொம்பும் குளம்பும் கொண்டிருள் வனத்தில்
பம்பிப் பதைத்த விலங்கில் உறைந்தேன்.

நீடிய கால நெறியிலே பிறப்பெனும்
பீடுயர் வானவன் போனான்; அவன்பின்
ஆடி நகைத்தனன் அழிவெனும் அமரன்;
வீடுக ளெனக்கிங் கெத்தனை யேயோ!

எண்ணரும் காலம் அழிந்தது; இன்று
திண்ணிய சிந்தையில் தீப்பொறி மூட்டி,
விண்ணும் ஒளிபெற விந்தை சமைக்கும்
மண்ணவன் மாயவன் மானிடன் ஆனேன்.

உறுதி இதுவெனக் கண்டேன்; ஓயாப்
பிறவிச் சிற்பியின் பொன்மனை எதுவும்
இறுதி உற்றிடும் போதெலாம், அதனின்
அறுதி விரிந்த அகன்மனை கொண்டேன்.

இன்றுள வீட்டினும் எழில்மனை உளதோ
என்றுளம் மயங்குவன்; எனினும் பழங்குடில்
பொன்றிடப் பொன்றிடப் புதுமனை வகுத்த
விந்தை அருளும் வியந்தது வேயோ?

நாடிய வீடெலாம் நலிந்தன; இன்று
கூடிய வீடும் குலைவுறும்; அதன்பின்
வீடெனக் குண்டு, வியன்மனை; இலையேல்
வீடிலா தமைவது வே வீடன்றோ?

# அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்
மொழி பெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 368-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 5

கேசவன் சென்றபிறகு அபராஜிதா தனியே சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். காதல் உணர்ச்சியால் அவள் உள்ளம் விளக்கம் அடைந்ததுபோல் அவள் தேகத்திலும் மாலை வேளையின் செந்நிறமான காந்தி படிந்திருந்தது. அவள் கண்கள் பளபளவென்று பிரகாசிக்க அவள் இதழ்களில் அடிக்கடி புன்னகை அரும்பியது.

"ஆஹா! என்ன கம்பீரம்! என்ன ஒளி முகத்தில் விளங்குகிறது! க்ஷத்திரிய குலத்தின் வீரமெல்லாம் ஒருங்கே சேர்ந்து உருவெடுத்து வந்தது போல அல்லவோ தோன்றுகிறார்! ஆயினும் குழந்தைபோல என்ன பேதைமை! இளமைக்கும் இயல்பிற்கும் விரோதமாய் ஒரு துறவியின் வாழ்க்கையைப் பின்பற்ற முயலுவது மிகவும் விந்தை! பண்டிதர்களாம்! அப்பண்டிதர்களின் சொற்களை அவைகளின் பொருள் விளங்காமலே கற்றுக்கொண்டு கிளிப்பிள்ளையைப்போல் ஒப்பித்துக் கொண்டிருக்கிறார். என் அழகு அவரை முற்றும் கவர்ந்துவிட்டதென்று தெரிகிறது. ஆனால் அதை அவரே சரியாய் அறியவில்லையே! பகைவனுடன் போர்புரியத் தொடங்கும்பொழுதே கையில் இருந்த படைகள் எல்லாம் ஒடிந்து, பாதுகாப்புக்காக அமைந்திருந்தவை யாவும் இருந்த இடம் தெரியாமற் போனதைப் பார்க்க, அவர் பாவம், திகைத்தே போய்விட்டார்! ஆனால் அதை ஒப்புகொள்வதற்கு மட்டும் அவர் விரும்பவில்லை. தமக்கு வாய்த்திருக்கும் பகைவன் எளியனல்லன் என்று தெரிந்தால் இவ்வளவு அவமானப்படவேண்டாம்." இவ்வாறு தானே கூறிக்கொண்டு அவள் தன்னைப் பார்த்துக்கொள்வதற்காகநீரின் அருகே குனிந்தாள். பொழுது சாய்ந்து எங்கும் இருண்டிருந்தபடியால், முகம் நன்றாய்த் தெரியும் பொருட்டு அவள் நீரின் மீது அப்படியே கவிழ்ந்துகொள்ளும்படி ஆயிற்று.

"எங்களிருவருக்குந்தான் ஒப்புமை இருக்கிறது. எனக்கு ஏற்ற அழகு வாய்ந்த புருஷர் அவர்தாம். என் சௌந்தரியத்தைக் கண்டு அவர் மயங்கினார் என்றால், ஏன், நானுந்தான் அவர் ரூபத்தைக் கண்டு மயங்கிவிட்டேன். நாங்கள் ஒருவரையொருவர் விலங்கிட்டுக் கொண்டவர்போல் இருப்பினும் இருவரும் வெற்றியும் அடைந்திருக்கிறோம். கடவுள் எங்களைத்தான் ஒருவருக்கொருவர் இணையாகச் சிருஷ்டித்திருக்கிறார். சொல்லும் பொருளும்போல் ஒன்று சேர்ந்திருக்கும் எங்களை இப்பொழுது சந்திக்கச் செய்திருப்பது தெய்வச் செயலே என்பதில் என்ன



அபராஜிதா சந்தோஷத்தோடு அவரை முத்தமிட்டாள்.

சந்தேகம்? எனக்குப் பொருள் அவர்; அவருக்குப் பொருள் நான். வெகுகாலமாக நான் அவிழ்க்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த புதிருக்கு அவர் விடை போல் விளங்குகிருர். இப்பொழுது தான் நான் எதற்காகப் பிறந்திருக்கிறேன் என்பது எனக்கு நன்ருய் விளங்குகிறது. இனிமேல் அவருக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னிடம் மறுபடியும் திரும்பி வருவதற்கான வழியைப் பார்க்கவேண்டும். அவர் மட்டும் திரும்பிவந்தால் அப்புறம் என்ன கவலை? ஏனெனில் திரும்பி வந்தாலே அது தோல்வியடைந்ததைக் காட்டும் அல்லவா? அணைக்கட்டைத் துளைத்துக்கொண்டு ஜலம் வெளியே செல்லத் தொடங்கிவிட்டால், பிறகு வெள்ளம் எல்லாவற்றையும் அடித்துச் செல்லாமல் இருக்குமா? பிரேமையின் பெருக்கில் அகப்பட்டு அப்படியே முழுகிப் போக வேண்டியதுதான்" என்று அவள் தானே கூறிக்கொண்டாள்.

இவ்வாறு மேலே என்ன செய்வதென்று அவள் மௌனமாய் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்பொழுது மெல்ல மெல்ல எங்கும் இருள் பரவியது. அவ்

விருட்டில் அவள் வெண்மையான தேகம் நடுநிசியில் உன் தந்தையான ஹிமவானின் பனி தோய்ந்த சிகரத்தின் வளைந்த பாகம்போலத் தோன்றிற்று. திடீரென்று ஒரு தவளை கத்திற்று. அதைக் கேட்டுத் திடுக்கிட்ட அபராஜிதா பிறகு உடனே புன்னகை புரிந்து கொண்டாள்.

'அப்பா! தவளைதானே கத்திற்று! காமரூபன்தானோ என்று பயந்துவிட்டேன். ஏனெனில் அவன் குரல் தவளை கத்துவது போலத்தான் இருக்கிறது. அவன் நாசமாய்ப்போக! அவன் திரும்பி வராமல் இருக்கமாட்டான். ஒவ்வொரு தரமும் ஏதாவது சத்தம் கேட்கும்பொழுது அவன்தானோ என்று திடுக்கிட்டுப் போகிறேன். ஐயோ! இது என்ன கஷ்டம்! எனக்கு யார் வேண்டுமோ அவர் வருவதில்லை. எவன் வேண்டாமோ அவன் வருகிறானே! அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மாறியிருந்தால் -?'

இப்படி நினைக்கும் பொழுது அவள் திடீரென்று எழுந்து நின்றாள். "ஆஹா! ஒரு வழி கண்டு பிடித்துவிட்டேன். இனிக் கஷ்டம் இல்லை" என்று கூறியவண்ணம் கைகளைக் கொட்டி மகிழ்ந்தாள்.

'கடைசியில் காமரூபனும் மிகவும் உயர்ந்துவிட்டான். அவனால்தான் அக்காரியம் ஆகவேண்டும். இப்பொழுதே என் தந்தையைப் போய்ப் பார்த்து அவர் உதவியைக் கேட்கவேண்டும். ஏனெனில் என் காரியம் நிறைவேறுவதற்கு வேண்டியவைகளை அவர்தாம் செய்ய முடியும்.'

இப்படி யோசித்ததுதான் தாமதம், உடனே அவள் நீரில் முழுகி நீந்தியபடியே பாடல தேசத்தை அடைந்தாள். அங்கே தன் தந்தையின் இருப்பிடம் சென்றதும், அவர் ரத்தினங்கள் இழைத்த கட்டிலில் ஏதோ படங்கள் வரைந்த வண்ணம் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

"அப்பா! நான் உங்களைத்தான் சரணமடைந்திருக்கிறேன்" என்று வேகமாய்க் கூறிவிட்டு, அபராஜிதா அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். "கூடு விட்டுக் கூடு பாய எனக்கு ஏதாவது மந்திரம் உபதேசியுங்கள்" என்று அவள் கூற, அவள் தந்தை கையில் பிடித்த எழுதுகோலுடன் அவளை ஆச்சரியத்தோடு நோக்கினார். பிறகு சிரித்துக்கொண்டு, "அபராஜிதா, இது என்ன வேடிக்கை! கூடுவிட்டுக் கூடுபாய்ந்து என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? உன் அழகிய சரீரமே உனக்குப் போதாதா? அதை விட்டு வேறு சரீரத்தை அடைவதில் உனக்கு என்ன பயன் உண்டாகப்போகிறது?" என்றார்.

"நான் எல்லாம் கூறுகிறேன். கேளுங்கள். நான் கூறி முடியும் வரை நடுவில் என்னை ஒன்றும் கேட்கவேண்டாம்" என்றாள் அபராஜிதா. பிறகு அவள் ஆதி முதல் எல்லாவற்றையும் கூறித் தன் யோசனையையும் தெரிவித்தாள்.

அவள் கூறி முடித்ததும் அவள் தந்தை அவளைப் புன்னகையுடன் நோக்கி, "ஓஹோ! கடைசியில் உனக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் உண்டாயிற்றா? போகிறது! அது நல்லதுதான். ஆயினும், போயும் போயும் இந்த மனிதன்தானா அகப்பட்டான்? அவன் அரசனாயிருந்தாலும் என்ன பிரயோசனம்? நம் இனத்து அரசர்களையெல்லாம் வரவழைக்கிறேன். உனக்கு யார் பிரியமோ அவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்" என்றார்.

"அவர்கள் எல்லாம் கிடக்கட்டும். எனக்கு ஒருவரும் வேண்டாம். இந்த அரசனைத் தவிர வேறு யாரையும் நான் கணவனாக வரியேன்" என்றாள் அபராஜிதா.

அவள் ஒரே உறுதியாக இருப்பதைக் கண்டதும் அவள் தந்தை

சிரித்துக்கொண்டார். "சரி. உன் இஷ்டப்படியே இருக்கட்டும். நீ என்றும் காற்றைப்போல் ஒருவர் கட்டுக்கும் அடங்காதவள். இருந்தாலும் நான் இப்பொழுதே சொல்லுகிறேன். நீ இம்மாதிரி விவாகம் செய்துகொள்வது கொஞ்சமேனும் சரியன்று. வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர் இருவர் மணம் செய்துகொண்டால் அது நீடித்திராது. ஏனெனில் அலுத்துப்போய் நீ அவனை விட்டுச் செல்லாமற் போனாலும் அவன் சீக்கிரத்தில் உன்னைத் தனியே விட்டு இறந்துபோவான் என்பது நிச்சயம். மானிட அரசர்களுக்கும் நாககன்னிகைகளுக்கும் எங்கேனும் சம்பந்தம் உண்டா? அதுதான் போகட்டும் என்றால், அவன் இறப்பதற்குள் நரையும் திரையுமுள்ள ஒரு கிழவனாகிவிட மாட்டானா?" என்றார்.

"நரையையும் கிழத்தன்மையையும்பற்றி எனக்கு என்ன ஆகவேண்டும்? இப்பொழுது அவர் மிகவும் இளமையோடு இருக்கிறார். கிழத்தன்மையைப்பற்றி அப்புறம் யோசித்துக்கொள்ளலாம். அவரை விட்டு என்னால் ஒரு கணமும் உயிர்தரிக்க முடியாது. அவர்தாம் என் இஷ்ட தெய்வம்; என் நாடு, உறவினர், என் பிராணன் எல்லாம். எனக்கு அம்மந்திரத்தைச் சொல்லுங்கள். அதைக்கொண்டு அவரை என்னுடையவராகச் செய்துகொள்ளுகிறேன். இதைச் செய்தால்தான் நீங்கள் உண்மையில் என்னைப் பெற்ற தந்தையாவீர்கள். நானும் இருமுறை பிறந்த கடனை உங்களுக்கு ஆற்றுவேன்" என்றாள் அபராஜிதா.

இவ்விதம் அவள் அவரைப் பலவிதமாய்க் கெஞ்சிக் கொஞ்சிக் கேட்கவும் கடைசியில் அவர் மனமிசைந்து அவளுக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார்.

"மந்திரத்தை மட்டும் சரியாய் ஞாபகம் வைத்துக்கொள். இம்மந்திரங்கள் எல்லாம் நெருப்பைப் போன்றவை. ஜாக்கிரதையாய்ப் பிரயோகம் செய்யாவிட்டால் உபயோகிப்பவர்களையே எரித்துவிடும். அஜாக்கிரதையாய் இருப்பவர்கள், வழி தெரியாமல் தாம் வெட்டிய குழியிலேயே விழுந்து மடியும் மனிதர்களைப் போன்றவர்களாவார்கள். இறந்தவர்களின் உடலில் புகுந்தவர்கள் பிறகு வெளியே வரமுடியாத நிலைமைக்கு வரக்கூடும் அல்லவா? நான் கூறியதுபோல் உன்போன்ற ஒரு பெண்ணுக்கு இம்மந்திரங்களினால் எல்லாம் என்ன ஆகவேண்டும்? இம்மூன்று உலகங்களிலும் தேடினாலும் இவ்வளவு எழில் பொருந்திய சரீரம் உனக்கு வேறு கிடைக்குமா?"

இவ்வாறு தந்தை கூறவும், அபராஜிதா சந்தோஷத்துடன் அவரை ஒரு முத்தமிட்டாள். "அப்பா, கவலைப்படாதீர்கள். இம்மந்திரத்தை நான் எனக்காகக் கேட்கவில்லை. எந்தச் சரீரமும் என்னுடைய சரீரத்துக்கு இணையாகாதுதான். ஏனெனில் உலகில் தொலைந்தால் போதும் என்று நினைக்கக்கூடிய சரீரங்கள் எவ்வளவோ இருக்கின்றன அல்லவா?" என்றாள்.

௬

இதற்கிடையில் காமரூபன் அபராஜிதா அவனை இகழ்ந்து தன் முன்னிலையை விட்டுத் துரத்தியதும் எப்படியோ ஒருவிதமாய்த் தன் வீடு சேர்ந்தான். அவனுக்குத் தன் உயிரையே பின்னால் விட்டு வந்திருப்பதுபோலத் தோன்றியது. அவன் பேசாமல் எதிரிலிருந்த சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். ஆயினும் அப்பொழுதெல்லாம் அச்சுவரில் படம் எழுதினாற்போல அபராஜிதா அவன் கண்முன் தோன்றிய வண்ணம் இருந்தாள். அவள் குரலும் சிரிப்பும் அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தன. அவளே அவன் உடலில் பிரவே

சித்து அவனை முற்றும் தன் வசமாக்கிக்கொண்டது போல் இருந்தது. சாப்பிடுவது, தூங்குவது யாவற்றையும் விட்டு, அவன் ஒரே ஏக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். அவன் உடலில் கேவலம் உயிர் மட்டுமே இருந்தது.

தன் நிலைமையை உணர்ந்ததும், அவன் மனம் மிகவும் வருத்தத்துடன் பின்வருமாறு எண்ணமிட்டது:

'நாட்கள் எவ்வளவோ செல்லுகின்றன. ஆயினும் மாறுதல் மட்டும் ஒன்றும் காணவில்லை. இப்பொழுது நான் இருந்து என்ன பயன்? அவளைப் போன்ற ஒரு பெண் இத்தகைய ரூபவானென என்னை எப்படிக் கண்ணெடுத்தேனும் பார்ப்பாள்? அவளே அப்படி என்னிடம் கூறவில்லையா? அவளுக்குக் கோபம் வராமல் இருக்கும் பொருட்டு எங்கேனும் தூரத்தில் அவளை அறியாமல் மறைந்திருந்து ஒரு முறை பார்ப்பதற்கு ஒரு ஜன்மம் அல்ல, நூறு ஜன்மங்களாயினும் எடுக்கத் தயாராக இருப்பேன்.'

இவ்வார்த்தைகள் திடீரென்று அவன் இருண்ட உள்ளத்திற் புகுந்து ஒளி பெறச் செய்தாற் போல அவன் இரைந்து ஒரு கூச்சலிட்டான்.

'ஆஹா! ஏன், அப்படிச் செய்தால் என்ன? நான் செய்யக்கூடிய காரியம் இதைத் தவிர வேறில்லை. அவள் சமீபம் மெதுவாய், சப்தம் செய்யாமல் சென்று, எங்கேனும் ஒரு மறைவிடத்தினின்றும் அவள் அறியாமல் அவளைக் காணும் இன்பத்தைப் பெறுவேன். என்னை ஒருவரும் தடுக்க முடியாது. ஏன், அவளுக்குத் தெரியாமல் செய்தால் அவளேதான் என்னை என்ன செய்வாள்? நானும் தினமும் அவளைப் பார்த்துக்கொண்டிருப்பேன்!'

இவ்வாறு நினைக்கும்பொழுதே அவன் உள்ளம் ஒரே களிப்பில் ஆழ்ந்து தான் நினைப்பது கனவோ என்று பிரமிக்கத் தொடங்கியது. தான் எண்ணியது மிகச் சுலபமாய் நிறைவேறும் என்பதனாலேயே அது மிகவும் அசாத்தியமாகவும் தோன்றலாயிற்று. திடீரென்று உள்ளத்தில் உதித்த இந்த எண்ணம் நிராசையென்னும் படுகுழியில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்த அவனை ஒரே இன்பமயமான லோகத்துக்கு அழைத்துச் சென்று, கிட்டாதென்று அவன் கைவிட்ட பொருளை அடையும் பாக்கியத்தை அவனுக்கு எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது. அவன் உடனே அவசரமாய்த் தன் முன்னே தீண்டாமல் கிடந்த அன்னத்தை ஒரு கவளம் எடுத்து விழுங்கிவிட்டு, ஒரே ஓட்டமாய் அபராஜிதாவின் பொய்கையை நோக்கிச் சென்றான். பொய்கையின் சமீபம் நெருங்கும்பொழுது, இன்னும் வேகமாய் ஓடவேண்டும் என்ற அவன் ஆசையையும் மீறி அவன் கால்கள் மெதுவாகத் தொடங்கின. கடைசியில் அவன் மிகவும் ஜாக்கிரதையாய்ச் சப்தம் செய்யாமல் மரங்களுக்குப் பின் மறைந்தபடியே ஊர்ந்து செல்லத் தொடங்கினான். அவளைக் காண அவன் துடித்துக்கொண்டிருந்த போதிலும், எங்கே அவள் தன்னைப் பார்த்துவிடுவாளோ என்ற பயத்தில் அவனுக்கு மூச்சு விடக்கூடத் தைரியம் இல்லாமலிருந்தது.

அவன் மறைந்தபடியே நின்று குளக் கரையைப் பார்த்தான். ஆஹா! அபராஜிதா முன்பு தான் பார்த்த இடத்திலேயே இருப்பதைக் கண்டான். அவள் குளக் கரையோரமாக இருந்த பாறைமீது கால்கள் இரண்டையும் நீரின்மீது தொங்கவிட்டுக்கொண்டபடி உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்க்கும் பொழுது அமிருதத்துக்கு இருப்பிடமான சந்திரனுடைய ஒரு கலைதான் இவ்வாறு அழகெல்லாம் ஒருங்கே உருவெடுத்து ஒரு பெண் வடிவத்தில் வந்ததோ என்று

எண்ணும்படி இருந்தது. அவள் அப்பொழுதுதான் வெண்கடலினின்றும் எழுந்தவள்போல் தோன்றினாள். சற்று முன்புதான் குளத்தில் நீராடிவிட்டு வந்திருந்தாள்; ஆகையால், அவள் நனைந்த கூந்தல் உடம்பில் படிந்து அவளுடைய அங்கங்களின் லாவண்யத்தை மறைக்க முயன்றும் முடியாமல் இருப்பது போல் விளங்கிற்று. அபராஜிதா, வெள்ளிபோன்ற ஒரு மீன் நீரில் துள்ளி விளையாடிக்கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டவுடன் காமரூபனது உள்ளமானது பறையடிப்பது போல் அடித்துக்கொள்ள, எங்கே அச்சப்தம் அவள் காதுகளுக்கே எட்டிவிடுமோ என்று அவன் பயந்தான். அவன் உடல் முழுவதும் அவன் வசத்தில் இல்லாமல் நடுங்கிக்கொண்டிருந்தது. நிற்க முடியாமல் கீழே விழுந்துவிடுவோமோ என்று தோன்றவும் அவன் தன்னை அறியாமல் ஓர் உலர்ந்த குச்சியை மிதித்துவிட்டான். அது மளுக்கென்று முறிந்தது. அச்சப்தம் காதில் படவும் அபராஜிதா தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். காமரூபன் நடுங்கிப்போய்விட்டான். அவனுடைய உடம்பெல்லாம் ஜில்லென்று வியர்த்துப்போயிற்று. ஆனால் பாதி உயிர் போனவன் போல் நிற்கும் அவனை அபராஜிதா பரிவுடன் அருகில் அழைத்ததும் அவனுக்கு உண்டான வியப்பு இவ்வளவென்று கூற முடியுமோ?

“ஹா! காமரூபரா? இப்படி வந்து என் அருகில் உட்காரும். என் மீன் ஜலத்தில் துள்ளி விளையாடுவது எவ்வளவு விநோதமாக இருக்கிறது! சற்றுப் பாரும். ஒருவராக இருப்பதைக் காட்டிலும் இருவர் சேர்ந்து பார்ப்பது எப்பொழுதும் நன்றாக இருக்கும்” என்றாள் அபராஜிதா.

அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்கவே, காமரூபன் திகைப்படைந்தான். அவனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அவள் கூறியபடி செய்யாமல் கையும் களவுமாய்ப் பிடிபட்ட குற்றவாளி போல் தண்டனையை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான். அவன் பேசாமல் இருக்கவே அவள் மறுபடியும், “ஏன், நான் அழைத்தது காதில் படவில்லையா? தைரியமாய் என் அருகில் வாரும். பயப்பட வேண்டாம். இம்முறை உம்மைப் பார்த்து நான் கொஞ்சங்கூடச் சிரிக்கமாட்டேன்” என்றாள்.

இவ்வாறு கூறிவிட்டு அவள் ஒரு சிறு புன்னகை புரியவும், காமரூபனின் உள்ளம் தாங்காமல் அப்படியே வெடித்துவிடும் போல் இருந்தது. அவன் மெல்ல அருகில் வந்ததும் அவள் அன்புடன் அவனை நோக்கி, “இப்படி என் பக்கத்தில் உட்காரும். நாம்இருவரும் சேர்ந்து மீன் விளையாடுவதைப் பார்ப்போம். என் தனிமையை அகற்றி எனக்கு விநோதம் உண்டாக்கும் தோழன் இந்த மீன்தான். ஆயினும் - என்ன சமாசாரம்? நீர் என்னைக் கண்டு பயப்படுவதுபோலத் தோன்றுகிறதே? நான் என்ன உம்மைக் கடித்துத் தின்றுவிடுவேனா?” என்றான்.

“என்ன! உன் பக்கத்தில் உட்காருவதா?” என்று காமரூபன் நடுங்கிய குரலில் கேட்டான்.

“ஏன் கூடாது? அதில் என்ன பயம்? ஒருவேளை இங்கு என்னுடன் உட்கார்ந்து உம்முடைய பொழுதை வீணாக்க நீர் விரும்பவில்லையோ?”

“ஆஹா! என்னைப் போன்ற ஒரு குரூபி அழகெல்லாம் உருவெடுத்து வந்தவள் போன்ற உன் பக்கத்தில் உட்காருவதென்றால் அது மிக்க அவமானமாக அல்லவா இருக்கிறது? அது நியாயமா?”

“உமக்குச் சந்தோஷமுண்டாக்க எண்ணினேனே தவிர வேறல்ல. சென்ற தடவை நாம் சந்தித்த பொழுது நீர் மிகவும் பணிவுடன்

இருந்ீர். நான்தான் சற்றுக் கடுமையாய் நடந்துகொண்டேன். இல்லையா?'' என்று அபராஜிதா வினவ, காமரூபனின் கண்களில் நீர் நிறைந்தது.

"என்னவோ, எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. இதுவரையும் என்னை ஒரு பெண்ணும் இப்படிப் பிரியமாய் அழைத்துப் பேசியதில்லையே! நான் ஒருவேளை கனவு காண்கிறேனோ?'' என்றான்.

"கனவு ஒன்றுமில்லை; வாஸ்தவந்தான்'' என்றாள் அபராஜிதா; "நீர் காமரூபர் அல்லவா? நான்தான் அபராஜிதா. நான்முகன் அநியாயமாய் ஸ்திரீகள் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாத உருவத்தை உமக்கு அளித்துவிட்டார். சாதாரணமாய் ஸ்திரீகள் எப்பொழுதும் தோற்றத்தையே பெரிதாய் நினைக்கிறார்கள். ஆகையால் எந்தப் பெண்ணும் உம்மை இந்த உருவத்தில் விரும்புவது சற்றுச் சிரமமே! அதற்கு நீர் உமது ரூபத்தைத்தான் குறை கூறவேண்டும்.''

அம்மொழிகளைக் கேட்டு அந்தத் துரதிருஷ்டம் பிடித்த நாவிதன் ஒரு பெருமூச்சு விட்டான்.

"அந்தோ! நீ கூறுவது என் காதுகளுக்கு நாராசம்போல இருப்பினும் மிகவும் உண்மை. ஆஹா! இவ்வுடலைக் களைந்து இப்பொழுது எனக்கு வேறு கிடைப்பதாயிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அது அல்லவா எனக்குப் பெரிய அவமானமாயும் கஷ்டமாயும் இருக்கிறது!''

"உலகில் எல்லாக் கஷ்டங்களுக்கும் மரணத்தைக் காட்டிலும் வேறு பரிகாரம் இருக்கிறது. நான் உம்மைப் பார்த்த பிறகு தனியே யோசனை செய்து உமது கஷ்டம் என்ன என்பதை அறிந்துகொண்டேன். நான் உம்மை இப்பொழுது இங்கு அழைத்ததும் அதற்காகவே. ஒருவேளை என்னால் உமக்கு வேறு அழகு வாய்ந்த சரீரம் கிடைக்கலாம். நானே பார்த்துக் காதல் கொள்ளும்படியான ரூபம் வாய்ப்பதாக இருந்தால் உமக்குச் சம்மதந்தானே?''

இவ்வாறு அபராஜிதா கூறியதைக் கேட்க, ஒன்றும் விளங்காமல் காமரூபன் ஒரே திக்பிரமை அடைந்தான். வியப்பினால் அவள் முகம் முன்னிலும் கோரமாய் விளங்கிற்று. சற்று நேரம் அவன் அவளையே விழித்து நோக்கிப் பிறகு மெதுவாய், "சம்மதமா? வேறு உருவமா?'' என்று தடுமாறிய வண்ணம் கூறினான். பிறகு திடீரென்று உரத்த குரலில், "ஆஹா! அப்படியா? வேறு உருவம் என்றா சொல்லுகிறாய்? நீ எப்படியோ அறிந்துகொண்டுவிட்டாயே! வேறு உருவம் எனக்குக் கிட்டுவதாக இருந்தால் கோடி ஜன்மங்களாயினும் எடுக்கத் தயாராக இருப்பேனே! இல்லை; நீ கேவலம் என்னைப் பரிகசிக்கிறாய் என்று நினைக்கிறேன்'' என்றான். விம்மலுடன் அவனுக்கு அழுகை வந்தது. "ஐயோ! அது சாத்தியமா? அவ்வாறு எப்படி நடக்கும்?'' என்று வருத்தத்துடன் கூறிக் கீழே உட்கார்ந்துகொண்டான்.

"காமரூபரே!'' என்றாள் அபராஜிதா பரிவான குரலில். "ஏன் அவ்வாறு நடக்காது? உமக்கு ஏன் அவ்வளவு அவநம்பிக்கை? ஆயினும் இரைந்து பேசவேண்டாம். யார் காதிலாவது படப்போகிறது. அது போகட்டும். நான் ஒன்று கேட்கிறேன். இவ்வூர் அரசனை நீர் பார்த்திருக்கிறீரா?''

"ஏன், நான்தான் தினமும் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேனே!'' என்றான் காமரூபன்.

"அவருடையது போன்ற உருவம் உமக்குக் கிடைத்தால் திருப்திதானே? உம்முடைய சரீரத்துக்குப் பதில் அவருடைய சரீரம் உமக்கு வாய்த்தால்?—இப்பட்டணத்து ஸ்திரீகள் எல்லாரும் அவர்

மீது காதல் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் அவரைப் பார்த்ததில்லை யாகையால் அது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது. அவர் என்னவோ பதிலுக்கு மிகவும் வெறுப்புடனும் இகழ்ச்சியுடனும் இருப்பதாகவும் கூறுகிறார்கள். அப்படியானால் கடவுள் சிருஷ்டியிலேயே பெரிய தவறு நேர்ந்திருப்பதாகத்தான் சொல்லவேண்டும். உமக்கு நல்ல இருதயம் இருக்கிறது. அதற்குத் தகுந்த சரீரமோ அவருடையதாக இருக்கிறது. உம்முடைய உருவம் அவருக்கு இருந்தால் அவர் மனம்போல் இருக்கச் சௌகரியமாக இருக்கும். ஒரு பெண்ணும் அவரைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாள். எப்படியோ உங்கள் இருவருடைய உள்ளமும் உடலும் மாறிப்போயிருக்கின்றன. உமக்கு இருக்கவேண்டிய உடல் அவருக்கும் அவருக்கு இருக்க வேண்டிய உள்ளம் உமக்கும் தவறி வாய்த்து விட்டன என்றுதான் ஊரில் எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள்.''

"ஆம். நீ கூறுவது யாவும் உண்மையே. அவன் சாக்ஷாத் மன்மதனைப்போலத்தான் விளங்குகிறான். அவனைக் கண்டு உள்ளம் பறிகொடுக்காத பெண் ஒருவரும் இல்லை'' என்றான் காமரூபன்.

"வாஸ்தவத்தில் அவ்வரசனை ஒரு கள்வன் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் மன்மதனுடைய உடலைத் தாம் எடுத்துக் கொண்டு பெயரை மட்டும் உமக்கு அளித்திருக்கிறார் அல்லவா?'' என்று கூறி, அபராஜிதா ஒரு புன்னகையுடன் அவன் சமீபம் நகர்ந்து தன் மிருதுவான கையை அவன்மீது வைத்தாள். தன் அகன்ற கண்களால் அவள் தன்னைப் பரிவுடன் நோக்குவதைக் காமரூபன் கண்டான். அவள் கூந்தலின் நறுமணம் அவனை ஒரே மயக்கத்தில் ஆழ்த்தியது.

அபராஜிதா ரகசியமாய் அவன் காதில், "அவர் உருவம் உமக்குக் கிடைக்கும் வழியை நான் கற்றுக் கொடுத்தால் உமக்குச் சந்தோஷந்தானே? இவ்வூரிலுள்ள பெண்கள் எல்லாம் அவர் உருவத்தைக் கண்டு காதல் கொள்ளுகிறார்கள் என்றால், நானும் ஒருவேளை அவரைக் கண்டு காதல் கொண்டாலும் கொள்ளலாம். அவர் உருவம் உமக்குக் கிடைத்தால் அப்பொழுது நானே உம்மைக் கண்டு காதல் கொள்ளலாம் அல்லவா?'' என்றாள்.

(தொடரும்)

---

" உலகம் வெள்ளத்தோடு கூடவே ஓடிக்கொண்டு போகவேண்டியதுதான். அந்தப் பிரவாகம் அதை எங்கே கொண்டுவிட்டாலும் சரியே. உடை, கல்வி, உணவு, விவாகம் - எந்த விஷயத்தில் பார்த்தாலும், அதிகமான ஜனங்கள் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டவர்களைப் போலவே நடந்து கொள்கிறார்கள். 'வெள்ளத்துக்கு எதிர்த் திசையில் நீந்துவதுதான் வாழ்க்கை' என்ற கருத்து அவர்களுக்குப் புரிவதுகூட இல்லை."

—வி. ஸ. காண்டேகர்

---

# பெருமை

'வல்லிக்கண்ணன்'

ஞாயிறு சொன்னது:

"நான் இல்லாவிட்டால் இந்த உலகம் ஏது? அண்டங்கள் தோறும் உயிர் பிறக்க எனது ஸ்பரிசம் தேவை. என் கையால் தொட்டால் பொன் முலாம் மிளிர்கிறது. உஷையின் மலர்க் கண் சிவப்பும், சந்தியாவின் மேனிவண்ண மும் என் ரச்மி சக்தியால் ஜொலிப்பன. காலையில் ஒரு வனப்பு. பகலில் ஒரு பள பளப்பு. அந்தியில் தனி மினுமினுப்பு. வானத்தின் வர்ணவிஸ்தாரம் அனைத் தும் என் கதிர் விரல் நுனிகள் தீட்டும் மாயாஜாலம்.

"இதோ என் முதல் கிரணத்தை விட் டெறிகிறேன். எவ்வளவு ஒளி விந்தை! பின் நான் தலை நிமிர நிமிர, தகதகா யந்தான். தூங்கிக் கிடந்த உலகத்தில் உயிர் புகுத்தும் பிரமா நான். அழகுக்கு அழகு செய்யும் கவிஞன் நான். என்னைக் கண்டு பூலோகக் கவி புளகிக்கிருன்.

"கலகலப் புள்ளோசைகளிடையே, மக்களின் மகிழ்வுக்கிடையே, பூக்களின் புன்னகை என் வரவைப் போற்று கிறது.

"இதுவரை குவிந்து கிடந்தது அந்த முகை, உலகத்தின் சோகத்தைக் கண்டு சாம்பிக் கூம்பிய கலைஞனின் உள்ளம் போல. நான் தொடுகிறேன் என் பொன் விரலால். அதில் ஜீவன் நெளி கிறது. கவிதை மின்னுகிறது. இயற்கை மனம் நிறைந்து கக்குகின்ற சிரிப்பின் சாயையாக மலர்கிறது அந்தத் தாமரை.

"நான்தான் பெரியவன். இன்னுமா சந்தேகம்?"

இந்தப் பேச்சு அம்புலியின் காதில் பட்டது. அது பெருமூச்செறிந்து முணு முணுத்தது:

"ஐயோடி, என்ன பெருமை! எவ் வளவு கர்வம்! ஹூம், என்ன இருந் தாலும் இவ்வளவு தலைக் கனம் ஆகா தம்மா!

"சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் தானேதான் அழகுத் தேவதை எனப் பிதற்றுகிறதே! அதன் ஒளியில் அதனேடு பார்வையே மழுங்கிவிட்டதா என்ன?

"தாமரை மலர் நிலையைச் சுட்டிக் காட்டியதே. அதன் அருகில் கூம்பித் தலைகவிழ்ந்த ஆம்பலின் கதியை ஏன் கவனிக்கவில்லை?

"ஆம்பல் நல்ல ரஸிகை. மணமுள்ள மல்லிகை இனமும் அப்படித்தான். இந்த ஞாயிற்றின் ஜம்பம் அதனிடம் பலியாது. இதன் ஸ்பரிசம் அவற்றைத் தீய்த்துவிடும். அவை என் முத்தத்தி னல் முறுவல் பூக்கின்றன.


"என் பாலொளி எங்கும் குளுமையை மட்டுமா பரப்புகிறது? ஆனந்தம் அள்ளி வழங்கும் அமுதப் பிரவாகம் இல்லையா என் புன்னகை? மினுமினுப் பாம், பளபளப்பாம்! என் நோக் கால் உலகமே - மண்ணும் விண்ணும், சாகரமும் சர்வமும் - மோகன ஜோதி யில் ஆழ்கிறதே. அதைப் பாராது வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்து தற் பெருமை பேசுகிறது ஆதவன்.

"நான் எழில் ராணி. அழகுத் தெய் வம். என்னைக் கண்டு கவி கூத்தாடு கிருன். மக்கள் சோர்வு அகல்கின்றனர். காதலர் களிக்கிருர்கள். அதோ, சாகரம் ஆனந்த நடமிடுகிறது, காதலியின் வர வறிந்த காதலன் உள்ளம்போல.

"யார் பெரியவர் என்று இன்னுமா தெரியாது போகும்?"

இவற்றை எல்லாம் செவிமடுத்த இருள் மோனப் புன்னகை புரிந்து, நக்ஷத்திரப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு, புரண்டு படுத் தது. அதன் மனத்திலும் ஓர் எதி ரொலி:

'பேத்தல்! வீண் பெருமைதான். இந்த அம்புலியின் ஜீவநாடி ஆதவன் ஒளி என்பதை இது மறந்துவிட்டது. ஞாயிறுதான் என்ன! நான் இல்லா விட்டால் அதற்கு ஏது மகிமை? இல்லை, இந்தச் சந்திரனுக்குத்தான் மதிப்பு எங்கே! உண்மையை உணர முடியாத ஜடங்கள். 'பெரியவர்' என்று பெருமை பேச வந்துவிட்டன. பெரிய வராவது, சின்னவராவது! ஹூம்!'



# வீணன் வெட்டிய ஆறு

தே. வீரராகவன்

சோழநாட்டைத் தஞ்சாவூரில் இருந்து பல சோழ அரசர்கள் ஆண்டார்கள்; அவர்களில் விஜயாலயன் என்பவன் ஒருவன். குடிகளுக்கு அவன் ஒரு துன்பமும் செய்யமாட்டான். ஆனால் அவன் எப்போதும் தன் இன்பங்களை அதிகமாக்கிக் கொள்வதிலேயே கவனம் செலுத்திவந்தான்; குடிகளின் இன்ப துன்பங்களை நோக்கவே இல்லை.

அக்காலத்தில் வீணன் என்ற ஓர் ஏழை தஞ்சாவூரில் வசித்துவந்தான். அவன் ஏழையாயினும் சிறந்த அறிவாளி. தஞ்சாவூர்க் கடைவீதியில் அவனுக்கு ஒரு சிறு பலசரக்குக்கடை இருந்தது. சில நாட்கள் அவன் ஓர் அவசர காரியமாக வெளியூருக்குப் போயிருந்தான். அந்தச் சமயத்தில் சில திருடர்கள் அவன் கடையினுள் புகுந்து, சாமான்களையும் பணத்தையும் களவாடிச் சென்றுவிட்டனர்.

ஊரிலிருந்து மீண்ட வீணனுக்குத் தன் கடையைப் பார்த்ததும் வயிறு 'பகீர்' என்று ஆயிற்று. தனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தைக் குறித்து அரசனிடம் முறையிட்டுக்கொள்ள அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம் சொல்லி அழுதான். ஆனால் குடியிலும் ஆடல் பாடல்களிலும் ஈடுபட்டிருந்த அரசன் காதுகளில் வீணன் வார்த்தைகள் விழவில்லை. வருத்தத்துடன் திரும்பினான்.

மறுநாள் காலை தூங்கி எழுந்ததும், வீணன் தஞ்சாவூரின் நடுவே நான்கு பாதைகள் கூடும் ஒரு நாற்சந்தியில் வந்து நின்றுகொண்டான்; அவ்வழியாகச் செல்லும் வண்டிகளையும் மனிதர்களையும், "நில்! இப்படிப் போ! அப்படிப் போ" என்று சிறிது நேரம் நிறுத்தியும் வழிகளை மாற்றியும் செல்ல விட்டான்.

அரசனுடைய உத்தரவின்பேரில்தான் வீணன் அப்படிச் செய்வதாக எல்லோரும் எண்ணிக்கொண்டு அவன் காட்டிய வழியே சென்றார்கள். இப்படிச் சில மாதங்கள் சென்றன.

வீணன் இதற்கு மேலும் ஒரு யுக்தி செய்தான். அதாவது, அவன் நிற்கும் நாற்சந்தி வழியாகச் செல்லும் கட்டைவண்டிகள், கைவண்டிகள், குதிரை வண்டிகள், சவம், தலைச்சுமை இவற்றிற்கெல்லாம் ஒருவிதக் கணக்குப்படி சுங்கவரி வாங்க ஆரம்பித்தான். இதுவும் அரசனுடைய கட்டளைப் படியே இருக்கவேண்டுமென்று ஜனங்கள் எண்ணினார்கள்; யாரும் மறுக்காமல் வரியைச் செலுத்திவிட்டுப் போனார்கள்.

இதனால், தினமும் வீணனுக்குச் சுங்க வருமானம் அதிகரித்தது. அதைக் கணக்குப்படி வாங்கி வைத்துக் காவல் செய்ய ஒரு சுங்கச் சாவடியையும், பல குமாஸ்தாக்களையும் நியமித்தான். இந்த வேலை பல மாதங்கள் நடந்து வந்தது. ஒரு நாள் சோழ அரசனின் மந்திரி இறந்துவிட்டான். அவனுடைய சவத்தைத் தூக்கிக்கொண்டு ஒரு பெரிய கூட்டம் நாற்சந்து வழியாகச் சென்றது; அரசன் அந்தக் கூட்டத்தில் முதல் வரிசையில் வந்தான். அப்போது வீணன், "சவத்துக்கு உரிய சுங்கத்தைக் கொடுத்தால்தான் சவம் அப்பால் செல்லக்கூடும்" என்று சொல்லிச் சவத்தைத் தடுத்துவிட்டான். கூட்டத்தில் இருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் சோழ அரசனுக்கும் இது புதிதாகத் தெரிந்தது.

"உன்னை யார் சுங்கம் வசூலிக்க ஏற்படுத்தியது?" என்று அரசன் கேட்டான்.

"ஒருவரும் இல்லை; நானாகவே இவ்வாறு செய்கிறேன்."

"ஏன் இப்படிச் செய்தாய்?"

"தாங்கள் குடிஜனங்களை அதிகமாகக் கவனிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் இப்படிச் செய்தேன்."

"நான் குடிமக்களைக் கவனிப்பதில்லையா?"

"இல்லை."

"இது உனக்கு எப்படித் தெரியும்?"



வீணன் சில வருஷங்களுக்குமுன் நடந்த தன் வரலாற்றை எல்லோர் முன்னிலையிலும் எடுத்துக் கூறினான். அரசன் வெட்கம் அடைந்தான். அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை; "சரி. நீ தினமும் என் பெயரால் ஏராளமாக வரி வசூல் செய்துவருகிறாயே. அந்தப் பணமெல்லாம் எங்கே? நீ வசூல் செய்துவரும் தொகைக்குக் கணக்கு வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

வீணன் பக்கத்திலிருந்த பெரிய சுங்கச் சாவடிக்கு அரசனை அழைத்துச் சென்றான். கணக்குகளை எல்லாம் காட்டித் தான் சேமித்து வைத்திருந்த அவ்வளவு பொருளையும் அரசன் முன்னிலையில் கொட்டினான். எதிர்பாராமல் கிடைத்த பெருஞ் செல்வத்தைக் கண்டு மகிழ்ந்த அரசன் வீணனைப் பார்த்து, "இந்தப் பணத்தை நீயே எடுத்துக்கொள்" என்றான்.

"இது தங்களுக்குச் சொந்தமானது. எனக்கு வேண்டாம்."

"பாதியாவது எடுத்துக்கொள்."

"ஒரு சல்லிகூட வேண்டாம்."

"பின் இப்பொருளைக் கொண்டு என்ன தருமம் செய்யலாம்? அதையாவது சொல்."

"கூடுமானால் இவ்வூருக்கு அருகில் செல்லும்படி காவிரியிலிருந்து ஒரு கிளைநதி வெட்டுங்கள்."

அரசன் அவன் இஷ்டப்படியே சில நாட்களுக்கெல்லாம் காவிரியிலிருந்து ஒரு கிளை வெட்ட ஏற்பாடு செய்தான். அதற்கு வீணன் பெயரையே வைத்து, 'வீணன் ஆறு' என்று அழைத்தான். அதுதான் இக்காலத்தில் விண்ணாறு என்றும் வெண்ணாறு என்றும் மருவி வழங்குகிறது.

[கர்ணபரம்பரையாக வழங்கும் கதை.]

